Registered No M. 1514

1500

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தொகுதி - ௧] | சுக்கில வருடம் - ஆனி மீ | [பகுதி - ௬

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | .... | ௨௧௩ |
| செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு | .... | ௨௧௫ |
| பொது விஷயங்கள் | .... | ௨௧௭ |
| வர்த்தகப் பகுதி | .... | ௨௨௨ |
| அறிவியல்பகுதி: நாம் வசிக்கும் வாயு சமுத்திரம் | | ௨௨௩ |
| சமயப் பகுதி : செங்குந்தரும் சிவதீக்கையும் | | ௨௨௫ |
| குலதிலகர் பகுதி | .... | ௨௨௭ |
| சுகாதாரப் பகுதி —— ஈர் (Air) | .... | ௨௨௮ |
| பாமாலைப் பகுதி | ... | ௨௩௦ |
| அறிஞர் அமுதமொழிகள் | ... | ௨௩௧ |
| ஆராய்ச்சிப் பகுதி : சிலப்பதிகாரம் | ... | ௨௩௨ |
| மாதர் பகுதி : கமலத்தின் இல்வாழ்க்கை | .... | ௨௩௫ |
| தலைவருக்கு வழியனுப்பு உபசாரப் பத்திரங்கள் | | ௨௩௯ |
| நிரூபங்கள் | .... | ௨௪௦ |
| ஓர் ஆதர்ச சங்கம் | .... | ௨௪௧ |
| செங்குந்தர் கிளர்ச்சி | .... | ௨௪௨ |
| வர்த்தமானப் பகுதி | ... | ௨௪௯ |
| தலைச்சங்கத்தின் விளம்பரம் | ... | ௨௫௦ |
| 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம் | .... | ௨௫௧ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

விளம்பரங்கள்

## 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'

**நல்ல புத்தகங்கள்!** **நம்பிக்கையான விலைகள்!**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வி. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனக்கதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள் வைதிகநூல்கள், பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமான பதிப்புக்கள் அழகான கட்டடங்களில்கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பின் கால்பாகத்தை முன்பணமாக மணியார்டர் செய்தனுப்புக. மிகுதி நிற்கும் ரூபாயைத் தபாற் பாக்கின் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்த மாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் குலாபிமானச் சிந்தையுடன் நமது 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'க்கே ஆர்டர் அனுப்பவேண்டிக்கொள்ளுகிறோம்.

ஈ. வே. சிங்காரவேலு முதலியார், பி.ஏ.,
மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
200, தம்புசெட்டித் தெரு, சென்னை.

---

# செங்குந்த புராணம்.

இப்புராணம் காவிநுன் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகளால் பாடப்பெற்று தேவகாண்டம் மானவகாண்டம் என இரண்டு காண்டங்களாகவும், ஒவ்வொரு காண்டமும் பல படலங்களாகவும், கவிச்சக்கிரவர்த்தியார் ஒட்டக்கூத்தர் பாடியருளிய ஈட்டி யெழுபதை பெரும்பாலும் தழுவி சுமார் மூவாயிரம் செய்யுட்களால் முடிவுறுகின்றது. நம் குலவரலாறு இன்னதென அறியாத சிறுவர் சிறுமியருங்கூட எளிதில் அறிந்துகொள்ளுமாறு தெளிவாக ஒவ்வொரு படலத்தின் ஈற்றிலும் வசனபாகமும் அமைந்துள்ளது.

இதில் குலவரலாறு, குலத்தினர் செய்த அரும்பெருஞ்செயல், குலதருமம், ஒழுக்நெறி, குலப்பெரியார் சரிதம் ஆகியவை அடங்கியுள்ளன. ஒவ்வொரு செங்குந்த மக்களிடத்தும் ஒவ்வொரு புத்தகம் இருத்தல் இன்றியமையாதது. இவ்வரிய புராணம் காலஞ்சென்ற எனது தகப்பனார் வித்வான் ஆ. க. குமாரசாமி முதலியார் அவர்களால் பல பழம் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து அச்சுவாகனமேற்ற பலமுறை முயன்றும் பயன்படாது போயிற்று. தற்போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினின்றும் வெளிவரும் நம்மித்திரன் தோன்றி உலாவி யுபதேசித்துவரும் இக்காலத்தில் பல்வேறிடங்களில் வாழும் நம்மவருக்குள் தோன்றிய ஊக்கமும் குலமுன்னேற்றத்துக்குரிய சாதனமும் வெள்ளிடைமலைபோல் விளங்கலால் தவறாது ஆதரவளிப்பார்களென்று நம்பியே நாளது வைகாசிமீ 21உ (3-6-1929) திங்கட்கிழமை யன்று திருப்பத்தூர் விக்டோரியா பிரசில் அச்சிட ஆரம்பித்திருக்கின்றது. சுமார் ஒரு வருஷத்துக்குள் முடிவுபெறும்.

நெடுநாள் நின்று நிலவக்கூடிய இதற்கு முன்பணமாக அனுப்புவோருக்கு புத்தகம் 1-க்கு ரூபா ஒன்னரையாகவும் முடிந்த பிறகு இரண்டு ரூபாயாகவும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் குலாபிமானிகள் ஒவ்வொருவரும் அவசியம் ஆதரவளிப்பீர்களென்று நம்புகின்றேன். முன்பணம் அனுப்புவோர் கீழ்க் குறித்த விலாசத்துக்கு அனுப்பவும்.

இப்படிக்கு,
A. K. முருகைய முதலியார், தமிழ்ப்பண்டிதர்,
திருப்பத்தூர் (வட ஆற்காடு).

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௯ | சுக்கில௵ - ஆனி௴ | பகுதி - ௬ |
|---|---|---|


முருகன் துணை

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை யியம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க வருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டுந்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### பிரசாரம்

சென்றமாதங் குறித்துள்ள ஏற்பாட்டின்படி நமது தலைச்சங்கத்தின் கௌரவப் பிரசாரகர்கள் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், மலையாளம் ஜில்லாக்களில் குலமுன்னேற்ற உணர்ச்சியை எழுப்பிக் கொண்டு வருகின்றனர். அன்னோர்தம் குலத் தொண்டு மிகுதியும் நற்பயன் தருமென்றே எதிர்பார்க்கிறோம். ஒரே சமயத்தில் இத்தனை ஜில்லாக்களில் இத்தனை குலத்தொண்டர்கள் சுற்றியும் நமது தலைச்சங்கத்தின் முயற்சிகளையும் 'செங்குந்தமித்திர'னின் பெயரையும் உணராத கிராமங்கள் இன்னும் நூற்றுக்கணக்கானவை இருக்கின்றன. கூடுமானவரை அத்தகைய கிராமங்களை நமது பிரசாரகர்கள் வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றனர். எனினும், நமது குலமுன்னேற்றப் பிரசாரத்திற்கு ஜில்லாவுக்கு நால்வரேனும் நிலையாக இருந்து இடைவிடாது வேலை செய்துகொண்டு வந்தால்தான் நம்முன் இருக்கும் வேலையானது சீக்கிரம் நடைபெறும்.

### உபகாரச் சம்பளம்.

ஏழைச் செங்குந்த மாணவர்க்கு உபகாரச் சம்பளமளிக்கும் விஷயமாய் நமது தலைச்சங்கத்தின் விளம்பரமொன்று இப்பத்திரிகையின் இறுதியில் வெளியாயிருக்கின்றது. வருஷா வருஷம் நமது ஏழை மாணாக்கர்களுக்கு ஒத்தாசை புரிய வேண்டுவதற்கான திரவியத்தைத் திரட்டுவதற்குப் பெருமுயற்சி செய்ய வேண்டியதாயிருக்கின்றது. நிலையான ஒரு கல்விநிதியிருக்குமாயின் அதினின்று வரும் வட்டி வரும்படியைக்கொண்டு இத்தருமத்தினைத் தடங்கலின்றி நடத்திக்கொண்டு வரலாம். ஆயினும் அதன்

அவசியத்தை நம்முள் செல்வவந்தர்களா யிருக்கக்கூடியவர் உணர்ந்து அதைத் திரட்டிவைப்பதற்கான முயற்சிகள் செய்தால் ஒழிய இத்தருமத்தினை ஒழுங்காக நடத்துதல் கடினம் இளைஞர்கள் கல்விகற்று முன்னுக்கு வந்தால்தான் நமது சமூகம் பல துறைகளிலும் முன்னேற்றமடைய வழியுண்டாகும் என்னும் உண்மையைப் பலர் பலதரம் பலவிதத்திலும் கூறியிருக்கின்றனர். மேல் நாடுகளில், முக்கியமாக அமெரிகாவில், செல்வவந்தர்கள் செய்யும் தருமமெல்லாம் கல்விக்காகவே யாகும். பெரும் பணக்காரர்கள் எல்லாம், தமது வாழ்நாளில் கல்விக்காகச் செய்யும் தருமத்தோடு, தமது மரணசாசனங்களிலும் கல்விக்குப் பெரும் பொருள் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இந்நெறியை நம் குலப்பிரமுகர்கள் பின்பற்றி ஒழுகுவரேல் நம்குலம் இரண்டொரு தலைமுறைகளில் முன்னணியில் நிற்குமென்பதில் ஐயமில்லை.

### பெண்கல்வி.

மேல் பந்தியில் இளைஞர்கள் என்றது ஆண் பெண் இருபாலரையுமேயாகும். ஆண்கள் மட்டும் கற்றுப் பெண்கள் படிக்காமலிருந்தால் நமது குலமுன்னேற்றப் பந்தயமானது முடவனும் குருடியும் சேர்ந்து பந்தயமோடி மாற்றானை வெல்வோம் என்று சொல்லியதுபோலாகும். தேசமுன்னேற்றத்துக்குப் பெண் கல்வி அவசியம் பரவவேண்டுமென்னும் உண்மையை உணர்ந்து நமது துரைத்தனத்தாரும் எட்டாவது வகுப்பு வரையிலும் பெண்களுக்கு இலவசக் கல்வி கற்றுக்கொடுப்பதற்காக அவசரமான ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகின்றனர். இவ்வேற்பாட்டினால் நமது குலம் முன்னேறவேண்டுமாயின் நாம் கிராமங்கள்தோறும் கூட்டங்கள் கூட்டி அங்கங்கே இலவசப் பெண் பாடசாலைகள் வைக்கவேண்டுமென்று தீர்மானங்கள் செய்து துரைத்தனத்தாருக்கும் பத்திரிகைகளிலும் அறிவித்துக்கொண்டு வரவேண்டும். இதோடு நில்லாமல், அறிவாளிகள் பெண் கல்வியின் அவசியத்தை அக்கூட்டங்களில் எடுத்தோதி நமது பெண்களை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.


## செங்குந்தர் கல்வி நிதி.

இக் கல்வி நிதி நமது முதலாவது மகா நாட்டின்கண் தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தின் ஆதரவில் நம்மவர் கல்வி அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.
இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. ஊர்ப்பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
பி. செ. மாணிக்கவாசக முதலியார்,
தலைச்சங்க அமைச்சர்கள்.

☞ மேற்படி தரும நிதிக்கு நமது தலைச்சங்கத்தின் ஆதரவில் ஒரு அதிர்ஷ்டச்சீட்டு போடப்பட்டிருக்கிறது. இதன் விவரத்தை அடுத்த பக்கத்திலும் தனித் துண்டுப் பிரசுரங்களிலும் அன்பர்கள் அறிந்து கொள்ளலாம்.




உ
முருகன் துணை.

"கல்வியினூங் கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை"

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
ஆதரவில் நடைபெறும்

# செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு

### சீட்டுப் போடவேண்டிய அவசியமும் நோக்கமும்

சமூக முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாததென்பது யாவருமறிந்ததே. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்கள் மற்றெல்லாத் தேசங்களினும் சிறந்து திகழ்வதற்குக் காரணம் அத்தேச மக்களின் கல்வியறிவுத் தேர்ச்சியே. நம் நாட்டில் நூற்றுக்குப் பத்துப் பேரும் எழுதப் படிக்கத் தெரிந்தவரல்லர். அதிலும் நம்குல மக்களில் படித்தவர் தொகை பிறர் எள்ளி நகையாடுதற் கிடமானசொற்ப எண்ணிக்கையே. இவ்விழுக்கை நீக்குதற்கும், நம்மவர் இராஜீய, தேசீய, கைத்தொழில், வியாபார விஷயங்கள் எல்லாவற்றிலும் பிரமுகர்களாவதற்கும் கல்வியில் தேர்ச்சி பெறுதல் அவசியம். போராட்டமும் போட்டியும் நிறைந்த இக்காலத்தில் நம்மவர் வியாபாரத்திலாகட்டும், கைத்தொழிலிலாகட்டும், மற்றும் எத்துறையிலாகட்டும் அப்போதப்போது கண்டு பிடிக்கப்படும் நூதன முறைகளை அறிந்து அவற்றைக் கையாண்டால்தான் பலத்துடன் நிற்க முடியும். இதற்குக் கல்வி மிகவும் அவசியம். ஆரம்பப் படிப்பு, கலாசாலை உயர்தரப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, மற்றும் வியாபாரம், வைத்தியம், போதனா முறை, சட்டம், கைத்தொழில் (நெசவு), என்ஜினீரிங் முதலிய துறைகளிலும் நம் குல மாணாக்கர்கள் தேர்ச்சிபெறலவசியம்.

அங்ஙனம் தேர்ச்சி பெறுவதற்குப் பண ஒத்தாசை இன்றியமையாதது. சாசுவதமான உபகாரச் சம்பள நிதி யொன்று ஏற்படுத்தி அதன் வட்டி வருவாயிலிருந்து நம் இனத்து மாணாக்கர்களுள் தக்கவர்களெல்லோருக்கும் உதவிசெய்தல் வேண்டும். இந்நிதியிலிருந்து வெளிநாட்டுச் சர்வகலாசாலைப் பயிற்சிக்கும், கைத்தொழிற் கல்விக்கும் புத்தி கூர்மையும் ஊக்கமுமுள்ள மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு வேண்டிய அளவு வருவாய் ஏற்படுத்தல் அவசியம். பரம ஏழைகளாகிய சில புத்தி கூர்மையான செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமேயன்றி உண்டி, உடை, இருப்பிடங்களையும் இலவசமாகத் தந்துதவுவதும் அவசியமே. இதற்கொரு விடுதியினை இராஜதானி நகராகிய சென்னையில் ஏற்படுத்த நம் சங்கம் முயன்றுவருகிறது. இதற்கும் ஒரு பெருநிதி அவசியமென்பது அன்பர்கள் அறிந்ததே.

### நிருவாக சபை.

இதனைக் கருதியே சென்ற விபவ௵ தை௴ 7, 8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டில் செங்குந்தர் கல்விநிதிக்குப் பொருள் திரட்டுதற்குக் கூறிய மார்க்கங்களில் "சீட்டு" ஒன்று ஆரம்பித்து அதில் பெருந்தொகை மிச்சப்படுத்துதல் வேண்டுமெனத் தீர்மானமானது. இதை முன்னிட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையார் 1-5-29-ல் கூடிய தமது கூட்டத்தில் கீழ்க்கண்ட கனவான்கள் சேர்ந்த சபையின் மேல்பார்வையில் 'செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு' ஒன்று நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

**தலைவர்.**

திரு. ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., புதுவை.

**காரியதரிசிகள்.**

திரு. வீ. ரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., அட்வகேட், சென்னை.

திரு. ஈ. வே. சிங்காரவேலு முதலியார் அவர்கள், பி.ஏ.

**பொக்கிஷதாரர்கள்.**

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம்.ஏ., எல்.டி.

திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்.

**அங்கத்தினர்கள்.**

திரு. ம. சாமிநாத முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.

திரு. தி' நா. சபாபதி முதலியார் அவர்கள், திருவாரூர்.

திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், தென்காசி.

திரு. வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள், கோயமுத்தூர்.

திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள்' திருச்செங்கோடு.

திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், கொல்லங்கோடு.

திரு. மா. வே. பீமராஜா முதலியார் அவர்கள், குடியாத்தம்.

திரு. மா. வேலாயுத முதலியார் அவர்கள், குடியாத்தம்.

திரு. சி.பொ. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள்;" பி.ஏ., பி.எல்., திருப்பாதிரிப்புலியூர்.

திரு. சு. சாலை முதலியார் அவர்கள், மதுரை.

திரு. பி. வேலாயுத முதலியார் அவர்கள், கோட்டாறு

திரு. இராஜேஸ்வர முதலியார் அவர்கள், சிலோன்.

திரு. அ. பழனியாண்டி முதலியார் அவர்கள், இரங்கூன்.

திரு. அமிர்தலிங்க முதலியார் அவர்கள், ஜோஹானஸ்பர்க், தென் ஆபிரிக்கா.

### செங்குந்தர் கல்விநிதிச் சீட்டின் விபரம்.

டிக்கட் ஒன்றுக்கு எட்டணு (0-8-0) வீதம் 1 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து, அச்சுக்கூலி, சிப்பந்திச் சம்பளம், பிரயாணச் செலவு முதலியவற்றிற்காக ரூ. 15,000 போக, மீதி ரூ. 85,000-த்தில் ரூ. 60,000 செங்குந்தர் கல்விநிதிக்காக வைத்துக்கொண்டு, மிகுதியுள்ள ரூ. 25,000-த்தைச் சீட்டுக்கள் வாங்கிய நண்பர்களுக்குச் சீட்டுக் குலுக்கிக் கீழ்க்கண்டபடி பிரைசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 1-வது பிரைஸ் | 1-க்கு | ரூ. 5000 | ஆக | ரூ. 5000 |
| (2) | 2-வது ,, | ,, | ,, 2500 | ,, | 2500 |
| (3) | 3-வது ,, | ,, | ,, 1000 | ,, | 1000 |
| (4) | 4-வது ,, | ,, | ,, 500 | ,, | 500 |
| (5) | | 5-க்கு | ,, 200 | ,, | 1000 |
| (6) | | 10 ,, | ,, 100 | ,, | 1000 |
| (7) | | 20 ,, | ,, 50 | ,, | 1000 |
| (8) | | 40 ,, | ,, 25 | ,, | 1000 |
| (9) | | 100 ,, | ,, 15 | ,, | 1500 |
| (10) | | 300 ,, | ,, 10 | ,, | 3000 |
| (11) | | 600 ,, | ,, 5 | ,, | 3000 |
| (12) | | 1500 ,, | ,, 3 | ,, | 4500 |

மொத்தத் தொகை ரூ. 25,000

ஒரு டிக்கட்டின் விலை எட்டணுவாக 21 டிக்கட்டு அடங்கிய ஒரு புத்தகத்தை விற்கும் நபர் ரூ. 10 அனுப்பிவிட்டு 1 டிக்கட்டைக் கமிஷனுக்காக எடுத்துக்கொள்ளலாம். 20 டிக்கட்டுக்குக் குறைந்து விற்கிறவர்களுக்குக் கமிஷன் கிடையாது.

### கல்விநிதிச் சீட்டுக்கள் வாங்குவோர் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

டை கல்விநிதிக் கமிட்டியார் ஏற்பாட்டின்படிச் சீட்டுச் சம்பந்தமான கணக்கு, ரிக்கார்டு முதலியவை ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டுவருகின்றன. டிக்கட் வாங்கியவர் எவரேனும் கணக்குப்பார்க்க விரும்பினால் ஆபீஸ் நேரத்தில் தேவையானபோது பார்த்துக்கொள்ளலாம்.

டிக்கட்டிலுள்ள ஒவ்வொரு இடத்தையும் பூர்த்தியாக எழுதி அதன் ஒருபாகத்தைப் பணம் கொடுத்தவர் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றொரு பாகத்தையும் பணத்தையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவிடவேண்டும். டிக்கட் புத்தகங்கள் தேவையானவர்கள் டை கமிட்டிக் காரியதரிசிக்கு அல்லது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசிக்கு எழுதியாவது, அல்லது ஆங்காங்குப் பிரசாரம் செய்துவரும் நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். டை கல்விநிதிக் கமிட்டிக்குப் பணம் சேராத டிக்கட்டுக்கள் குலுக்கப்பெறும் சீட்டுக்களோடு எவ்விதத்திலும் சேர்க்கப்படமாட்டா. டிக்கட்டுப் பெற்றவர்கள் தங்கள் நெம்பர் கல்விநிதிச் சீட்டில் சேர்ந்திருக்கிற விபரம் தெரிய வேண்டுமானால் ரிப்ளை கார்டில் தங்கள் டிக்கட்டு நெம்பரையும் புத்தக நெம்பரையும் குறித்தனுப்பித் தெரிந்துகொள்ள வேண்டும்.

### கல்விநிதிச் சீட்டு எடுத்தல்.

1929௵ அக்டோபர்௴ 6௳ மேற்படி கமிட்டி மெம்பர்கள், பொதுஜனங்கள் ஆகியோர் முன்னிலையில் சீட்டுக் குலுக்கிப் பிரைஸ் எடுக்கப்படும். சீட்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பூராத்தொகை ஒரு லக்ஷரூபாயும் வசூலாகாது குறையுமானால் விகிதாசாரப்படிப் பிரைஸ்கள் குறைத்தே கொடுக்கப்படும். எல்லாத் தொகைகளும், டிக்கட்டுகளும் 1929௵ செப்டம்பர்௴ 20௳க்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து சேர்ந்துவிட வேண்டும்.

### பிரைஸ் வந்தவர்களுக்கு அறிவிக்கும் விதம்.

சீட்டு எடுத்தானவுடன் முடிவு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பிரைஸ் வந்த முதல் 20 நபர்களுக்கு அவர்கள் செலவில் தந்தி கொடுக்கப்படும். மற்றவர்களுக்குத் தபால் மூலம் அவர்கள் செலவில் தெரிவிக்கப்படும். பிரைஸ் பெற்றவர்கள் சீட்டுப் போட்ட ஒரு மாதத்திற்குள் தங்களிடமுள்ள ரசீதில் கையெழுத்திட்டு அனுப்பிப் பணத்தை நேராகவோ அல்லது மணியார்டர்மூலமாகவோ பெற்றுக்கொள்ள வேண்டியது.

ஒவ்வொருவரும் நம்மவருள் கல்வியினை வளர்ப்பதனையே தங்கள் முக்கியக் கடமைகளுள் ஒன்றாகக் கருதிப் பொது நன்மைக்கான இக்கிதியினைத் தவறாது ஆதரிக்க வேண்டுகிறோம்.

ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி.,
பீ. செ. மாணிக்கவாசக முதலியார்,
அமைச்சர்கள்,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
சென்னை, 3—5—29.



## பொது விஷயங்கள்

### முயற்சியால் வறுமையை வென்ற மேதாவிகள்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்."

என்ற திருக்குறளினால் மக்கள் அனைவரும் பிறக்குங்கால் ஒரே தன்மையான அறிவையும், ஆற்றலையும் உடையவர்களாயிருக்கிறார்கள் என்றும் பின்னர் அவர்கள் ஒழுகலுக்குத் தகுந்தபடி அவற்றை உபயோகிக்கும் முறையைப் பொறுத்து 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு' என்னும் உண்மைக்கிணங்க, வேற்றுமை யடைகிறார்கள் என்றும் அறியக் கிடக்கிறது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றாற்போல் மனிதனாகப் பிறந்த நீ கசடறக் கற்க வேண்டும்; புகழ்பெற வாழவேண்டும்; புருஷார்த்தத்தையடைய வேண்டும்; என்று சொல்வதைக்கேட்ட ஒரு சாரார் 'நான் பணக்காரனல்லவே! படித்த மேதாவியல்லவே! நானும் ஒரு நெப்போலியனாயிருந்தால், ஒரு கோடீஸ்வரனாயிருந்தால், ஒரு மகாராஜாவாக இருந்தால் இதற்குமேலும் செய்வேன். என் வயிற்றுப்பாடே பெரிதாயிருக்கிறதே' என்றும் சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு. இத்தகையார் எண்ணிறந்தோர் நம்மிடையே நிரம்பக் காணப்படுகின்றனர். ஒரு பெரியார் கீழ்வருமாறு கூறுகின்றார்.

"உலகத்தையும், அறிவையும் இறைவன் எல்லோருக்கும் பொதுவாகப் படைத்திருந்தும் வாழ வகையறியாது வீணே காலங்கழித்து மிருகாதிகளைப் போல் வறிதே இறக்கும் மானிடர்களே! நான் உங்களை முழுச் சோம்பேரிகள் என்றுதான் சொல்லுவேன். பணமில்லை என்பதும், நேரமில்லை என்பதும், புகழுடம்பு பெற்று விளங்கும் ஏனையோரைப் போல் நீங்கள் மேன்மையுறுதற்குச் சரியான காரணங்களென்று ஒப்புக்கொள்ளவே மாட்டேன். 'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்னும் நாயனார் திருவாய்மொழியை நீங்கள் கேட்டறியீரோ! அதை ஏட்டிற் கண்டோமே யொழிய அனுபவத்திற் கண்டதில்லை என்று நீங்கள் சொல்லவே முடியாது. பரம ஏழைகளாய்ப் பிறந்து வளர்ந்தும் சோம்பித் திரியாது தகுந்த முறையில் விடா முயற்சியோடும் ஊக்கத்தோடும் வேலை செய்து மேன்மையடைந்து அழியாப் புகழ் பெற்று வாழ்வோர் எண்ணிறந்தோராவர். அளவில்லாத அறிவும், ஆற்றலும் பொருந்திய இறைவனது மக்களாகிய நமக்கும் அறிவும், ஆற்றலும் உண்டு. அவற்றை வெளிப்படையாய் விளங்கச் செய்யும் பொருட்டுத் தக்கபடி முயல்வோருக்குக் கடவுளும் துணை செய்வார் என்னும் உண்மையை நீங்கள் உங்கள் மனதில் நன்றாய்ப் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அநேகர் அவற்றை விளங்கச்செய்ய வகையறியாது மங்கச்செய்கின்றனர். வகையறிந்து முயலும் சிலரே அவற்றை உடையவர்களாக விளங்குகிறார்கள்.

அன்னோர் பரம ஏழைகளாய் நாளின் பெரும் பாகத்தைத் தங்கள் அப்போதைய வயிற்றுப் பிழைப்புக்காக மிக அற்பமான தொழில்களைச் செய்து கழிப்பதாகத் தோன்றினும், தங்கள் கருமமே கண்ணாய் பிற்காலத்தில் உலகம் போற்றும் மேதாவிகளாவதற்கும், பெரும்பொருள் ஈட்டுதற்கும் ஆன வழிகளில் உழைப்பதற்கும் தேவையான நேரத்தையும் உண்டுபண்ணிக் கொள்ளுகின்றனர்.

உதாரணமாக ஸா ஜான் ஓபெவரி என்னும் உலகப் பிரசித்திபெற்ற ஒரு சித்திரவேலை நிபுணரை எடுத்துக் கொள்வோம். இவர் பிற்காலத்தில் ஒரு பெரிய மேதாவியாவார் என யெவரும் கனவிலும் நினைக்கமுடியாத சிறு பிராயத்தில் ஒரு சித்திர வேலைக்காரனிடம் மிகச் சொற்ப சம்பளத்திற்கு அமர்ந்தார். பிறகு ஒரு நாள் 'சித்திர வேலையில் கொஞ்சம் பழக்கமுற்ற ஒரு சுருசுருப்பான வாலிபன் தேவை' என்று பத்திரிகைகளில் பிரசுரித்திருந்த விளம்பரத்தைக் கண்டு அதற்கு மனுவனுப்பி ஒரு பொட்டோகிராபருக்கு உதவித்தொழில் புரிவோரானார். பின்னால் அவர் அடைந்த கீர்த்தியை நோக்கின் இத்தொழில் அவருக்குப் பொருத்தமானதென்று சொல்லவே முடியாது. அத்

தொழிலிலிருந்துகொண்டே தாம் தூங்குவதற்கும் இளைப்பாறுவதற்கும் உரிய காலத்தைத் திருடி அதைத் தாம் யாவரும் போற்றும் மேதாவியாவதற்கான வழியில் செலவிட்டு வந்தார். அதாவது தமது சுகத்தைக் கெடுத்துக் கீர்த்தியை வளர்த்தார். கடைசியாகத் தாம் ஆரம்பித்த தொழிலிலேயே மிகப் பிரசித்தி பெற்று விளங்கினர். அறிவுடையாராகளின் இவர் அரசனாலும் நனி விரும்பப்பட்டார் என்பது அவர் பெற்ற 'சர்' என்னும் பட்டத்தாலேயே விளங்குகிறது.

பிரசித்திபெற்ற நூலாசிரியர்களுக்குள்ளே பிராங்கு ஸ்வின்னர்டன் (Frank Swinnerton) என்பவர் இளமையில் வாரம் ஒன்றிற்கு $2\frac{1}{2}$ ரூபாய் சம்பளத்திற்கு ஒரு ஆபீஸ் பியூனாக விருந்தார். ஆனால் 'நான் பெரியவனானபோது கல்வியிற் சிறந்த ஒரு பெரிய நூலாசிரியனாகவேண்டும்' எனத் தனக்குள்ளே தீர்மானம் செய்துகொண்டு பியூன் உத்தியோகத்தையும் பார்த்துக்கொண்டே தான் தீர்மானித்த வண்ணம் மேதாவியாவதற்குச் செய்யவேண்டிய முயற்சிக்குத் தேவையான நேரத்தையும் உண்டாக்கிக்கொண்டார். பிறகு புத்தகங்கள் பிரசுரஞ்செய்யும் ஒருவரிடம் ரீடராக (Proof Reader) அமர்ந்து பகல் முழுதும் பிறர் எழுதும நூல்களைப் படித்து, இராமுழுதும் தம்முடைய சொந்த நூல்களை எழுதிவந்தார்.

ஆர்னால்டு பென்னட் என்னும் மற்றொருவர் சாதாரண வக்கில் குமாஸ்தாவாகவிருந்து ஒழிந்த நேரத்தில் பல நூல்களை வாசித்துத் தமது அறிவை விருத்தி செய்துகொண்டு சில வருஷங்களில் ஓர் பேர்பெற்ற பத்திரிகாசிரியராகப் பின்னர் பெரிய நாவலாசிரியரானார். H. G. வெல்ஸ் என்பவர் ஆரம்பத்தில் ஒரு ஜவுளிக் கடையில் கையாளாகவிருந்து பின்னர் சிலநாள் ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் உதவி உபாத்தியாயராக இருந்து இரவு பகலாய்ப் படித்து தற்போதைய பிறவிடைகோந்த ஒரு பெரிய நூலாசிரியரானார். அளவிறந்த அற்புதங்களை விளைவிக்கும் அறிவியல் நூல் நிபுணர்களில் பெரும்பாலோர் பரம ஏழைகளாக விருந்தும் தங்கள் விடாமுயற்சியாலேயே பிரசித்திபெற்று விளங்கினர். சர் ஆலிவர் என்பவர் ஆதியில் பகற்போதெல்லாம் மட்பாத்திரம் செய்து ஜீவனம் செய்துகொண்டே கணிதம், ரசாயனம், மின்சாரம் முதலியவற்றைத் தமது தொழில் முடிந்தவுடன் இராப்பள்ளிக்குச்சென்று கற்றுத் தேர்ச்சியடைந்தார். ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜி உட்கார நாற்காலியொன்று செய்துகொண்டிருந்த ஒரு தச்சனை ஒருவர் நோக்கி ஐயா! நீங்கள் இந்த நாற்காலியைத் தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு வெகு நேர்த்தியாய்ச் சொந்த உபயோகத்திற்குச் செய்கிறவரைப்போல செய்வதைப் பார்த்தால் நீங்கள்தான் இதன்மேல் உட்காருவீர்கள் போலிருக்கிறதே என்று சொல்லி நகைத்தார். அதைக்கேட்ட தச்சன் நீங்கள் அப்படிச் சொல்லலாகாது நான் எந்த காரியத்தையும் என் மனச்சாக்ஷிக்கு விரோதமாகச் செய்யவேமாட்டேன். நானே ஒரு சமயம் ஹைகோர்ட் ஜட்ஜாகி இதே நாற்காலியின்மேல் ஏன் உட்காரக்கூடாது என்றான். சில வருஷங்களுக்குப் பிறகு அதே தச்சன் ஹைகோர்ட் ஜட்ஜாகி அதே நாற்காலியின்மேல் உட்கார்ந்தான். சாதாரண தச்சனாக இருந்தவர் ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனாரென்றால் அவர் எவ்வளவு சிரமப்பட்டுப் படித்திருக்கவேண்டும்? அளவிறந்தவர்களை கண்டு உதாரணமாகக் காட்டலாம். தற்போது இதாலியா தேசத்தில் தாமிட்டதே சட்டமாக ஏகச்சக்ராதிபதியைப்போல் அதிகாரஞ் செலுத்திவரும் முஸோலினி என்பவர் ஆரம்பத்தில் ஒரு ஆரம்பப்பள்ளி (Elementary School) உபாத்தியாயராக விருந்தார் சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக விருந்து அதற்கோர் அணிகலனாக விளங்கிய காலஞ்சென்ற ஸர். எஸ். முத்துசாமி ஐயர் அவர்கள் இளமையில் ஒரு கணக்கப்பிள்ளையின்கீழ் இரண்டு ரூபாய் சம்பளத்திலிருந்த ஒரு ஏழைப் பிள்ளை என்பதை அறியாதார் சென்னை ராஜதானியில் ஒருவருமில்லை.

மிகக் கேவலமான ஸ்திதியிலிருந்தும் உலகம் போற்றும் உன்னத பதவி பெற்று விளங்கிய இவர்களுக்கெல்லாம் நீங்கள் சொல்லும் பொருளின்மையும், நேரமின்மையும் தடையாயிருந்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்கு எந்த தேவையையும் பிரசன்னமாகி நாவில் பீஜாக்ஷரத்தை எழுதவில்லை. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் ஒரே நம்பிக்கையுடையவர்கள் முயற்சிசெய்து வேண்டுவார்க்கு வேண்டுவதைத் தர இறைவன் காத்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் உங்கள் பரிதாபகரமான நிலைமைக்கு உங்கள் சோம்பலும் அசிரத்தையுந் தான் காரணமென்று சொல்லவேண்டும்; உங்கள் ஏழ்மையும் செல்வாக்கின்மையும் அல்ல. விருப்பமுண்டெனில் வழியுமுண்டு.

அனுபவஞானி.



## ஜீவகாருண்யம்

ஜீவகாருண்யமென்பது யாவருக்கும் பொதுவாயிருந்தபோதிலும் விசேஷமாய் அதை நமது செங்குந்த மரபினருக்கு மாத்திரம் விளக்கிக் காட்டவேண்டுமென்ற கருத்துடன் இப்போது இந்த இடத்தில் அதைப்பற்றி எழுதலாயிற்று. அதாவது :—

1. நம்மவரில் சிலர் மாமிச பட்சணம் செய்யாது சைவமாயிருந்துகொண்டு சிவபூஜை செய்து வருதலே ஜீவகாருண்யமென்றும், மற்றும் அசைவமாயுள்ள ஏழைச் செங்குந்தரிடத்தில் பேசினால் தங்களுடைய கௌரவத்துக்கு குறைவென்றும் நினைக்கிறார்கள். புலால் மறுத்தலும், சிவபூஜை செய்வதும் நமது குலாசாரத்துக்கு மிகவும் சிறந்த கொள்கையென்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் அவ்விதம் ஆடு கோழிகளைக் கொன்று தினமை விருப்பது மாத்திரம் ஜீவகாருண்யமென்று நினைப்பது சரியானதல்ல. அப்படி சைவமாயிருந்துகொண்டு மற்றவர்களுக்கு கெடுதுண்டு பண்ணுவதும் — மற்றவர்களுக்கு யாதாமொரு துன்பம் நேரிட்டவிடத்து அவர்களை பரிகாசம் புண்ணுவதும் ஜீவகாருண்யமாக மாட்டாது.

2. பசியினால் வருந்துகின்ற ஏழைகளுக்கு அன்னம் கொடுத்து அவர்களுடைய பசியை நிவிர்த்தி செய்வதே ஜீவகாருண்யத்தின் பிரதான அம்சமாகும். பசி என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியென்றும் பசியினால் வருந்துகிறவர்கள் ஆகாரத்தைக் கண்டமாத்திரத்தில் எவ்வளவோ பெரிய சந்தோஷத்தை யடைவார்களென்றும் அறியவேண்டும்.

3. இதைப்பற்றி ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகள் அருளிச்செய்த ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் நூலில :

(a) அவ்விதம் பசி வருத்தத்தை நீக்கி திருப்தி யின்பத்தை யுண்டுபண்ணுவதற்கு காரணமாகிய ஜீவகாருண்யம் என்னும் திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும் என்றும் ;

(b) அந்த திறவுகோலைப் பெற்றுக்கொண்டவர்கள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சாதன சகாயங்களை வேண்டாமல் அந்த திறவுகோலைக் கொண்டு மோட்ச வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்களென்றும்.

(c) அவ்விதம் ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம் யோகம் தவம் விரதம் செபம் முதலிய தியானங்களைச் செய்கிறவர்கள் கடவுளருளுக்கு சிறிதும் பாத்திராகார்கள் என்றும்,

(d) ஜீவகாருண்ய மில்லாது செய்யப்படுகின்ற பூஜைகளெல்லாம் பிரயோஜனமில்லாத மாயாசாலச் செய்கைகளே யாகுமென்றும் வியக்தமாய்க் கூறியிருக்கிறது.

4. இந்த அம்சத்தை நோக்குங்கால் சிற்சில வேளைகளில் பசித்தவர்களுக்கு ஆகாரம்கொடுப்பதின் மூலமாய் மேற்குறித்த சிலாக்கியங்கள் சித்திக்குமென்றால் ஒரு மனிதனுக்குளக்காலத்தும் அவன் ஆயுள் பரியந்தம் பிழைப்பூட்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் செய்வது மேலான ஜீவகாருண்யமென்று நாம் நிச்சயமாக்க வேண்டும்.

5. அதையறிந்தே நமது தலைச்சங்கத்தார் நமது செங்குந்த மரபிலுள்ள ஏழை மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து அவர்களை உயர்தரக் கல்வியில் அபிவிர்த்தி செய்து அவர்களை நல்ல நிலைமையில வைத்து அவர்களுடைய ஜீவனோபாயம் செழிப்பா யிருக்கவேணும்மென்று கருதி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருவது ஜீவகாருண்யத்தின் உன்னதமான நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. அதற்கு உதவியாக நம்மவரில் சிலர் அந்த உபகாரச் சம்பளத்துக்கென்றே மாதந்தோறும் சில தொகை நன்கொடையாய்க் கொடுத்து வருகிறார்கள்.

6. அதையல்லாமல் சென்ற தை மாதம் நடந்த முதலாவது மகாநாட்டின் கண் நம்மவர் கல்வியபிவிருத்திக்காக பிரத்தியேகமாய் ஒரு நிதி ஏற்படுத்தவேண்டு மென்னும் தீர்மானம நிறைவேறியிருக்கிறது. ஏனெனில் நமது தலைச்சங்கத்திலுள்ள பொது நிதியானது:

(a) செங்குந்த மித்திரன் பிரசுரம் செய்ய வேண்டிய செலவு.

(b) வெளியூர்களில் போய் பிரசாரம் செய்யவேண்டிய பிரயாணச் செலவு,

(c) தபால் சிப்பந்திச் செலவு

முதலிய பற்பல செலவுகளுக்கும் உபயோகப் படுகிறபடியால் அதிலிருந்து கல்விச் செலவுகளுக்கும் பணம் கொடுப்பது அசாத்தியம் எனக் கருதி கல்விச் செலவுக்கென்று பிரத்தியேகமாய் ஒரு நிதி இருக்கவேண்டியது அவசியமென்று தலைச்சங்கத்தார் அபிப்பிராயப் பட்டிருப்பது மிகவும் மதிக்கத்தக்கதாயிருக்கிறது.

7. அந்த கல்விநிதிக்காக நம்மவரில் ஐசுவரியவான்களா யுள்ள பிரபுக்கள் யாவரும் பூரண சித்தங் கொண்டு பொருளுதவி செய்வார்களாயின் அது சிறந்த ஜீவகாருணியமாகும். அவ்வாறு கல்விக்கென்று ஒரு பெருநிதி ஏற்படுமானால் அதைப்பற்றி ஏனைய ஜாதியாரும் புகழத் தக்கதாயும். அது நமது குல முன்னேற்றத்துக்கு ஒரு பெரிய அடையாளமாயுமிருக்கும். நமக்குள் கல்வியின் அறிவு பெருகப் பெருக ஒழுக்கம், ஆசாரம், ஒற்றுமை முதலிய சகல சீர்திருத்தங்களும் இயற்கையிலுண்டாகி விடும். தெய்வானுக்கிரக மின்றி எந்தக் காரியமும் சித்திபெற மாட்டாது.

8. ஆகையால் நமது குலம் தெய்வானுக்கிரகம் பெற்று முன்னேற்றமடைய வேண்டுமானால் ஜீவகாருணியமென்னும் அம்சத்தை நாம் ஒவ்வொருவரும் மனதில் பதியவைத்துக் கொண்டு :

(a) பொறாமை என்னும் பேயை யகற்றி நாம் எல்லோரும் ஒற்றுமையாயும் பரஸ்பர சிநேகமாயு மிருக்கவேண்டும்.

(b) அதோடு நம்மில் ஒருவருக்கு யாதாமொரு துன்பமாவது மனக்கவலையாவது சம்பவித்தபோது அதற்காக அவரை கேலி பண்ணாமல் ஒருவருக்கு வந்த மனக்கவலையை மற்றவர்கள் தங்களுக்கு வந்ததாகப் பாவித்து ஒருவருக்கொருவர் அனுதாபங் காட்டி ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.

(c) மேலும் நமது குல முன்னேற்றத்தையே பிரதானமாக நோக்கி சதா நேரமும் அதே கவலையாக சிந்தித்து அதற்காகவேண்டிய அரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிற நமது தலைச் சங்கத்தாரை நாம் குருஸ்தானமாக வைத்து அவர்களுக்கு நாம் மிகவும் நன்றியறிதல் பாராட்ட வேண்டியது மன்றி அவர்கள் அப்போதைக்கப்போது தீர்மானம் செய்கிற கட்டளையின் பிரகாரம் நாம் நடந்து கொள்ளவும் வேண்டும்.

(d) நமக்குள்ளிருக்கிற கட்சி பேதங்களினால் ஏற்படும் அற்ப விவாதங்களுக்கு நீதிஸ்தலம் கறையேறி விவகாரம் பண்ணி அதன் மூலமாய் பொருளை அனாவசியமாய்ச் செலவு செய்யாமலும்—கலியாணங்களில் வீண் செலவு செய்யாமலும் ஆலயங்களுக்கும்—திருவிழாக்களுக்கும் பந்தயம் போட்டு செலவு செய்யாமலுமிருந்து அவ்வித செலவுகளை யெல்லாம் குறைத்து அதற்குப் பதிலாய் நமது கல்வி நிதிக்காக நம்மில் அவரவர் தகுதிக்குத் தக்க பொருளை தலைச்சங்கத்தாரிடம் ஒப்புவிக்க வேண்டும்.

9. ஆகவே மேற்கண்டபடி நமக்குள் ஜீவகாருணியம் விளங்கும்படிக்கும், நமது தலைச்சங்கம் நிலைத்தோங்கும்படிக்கும் கல்விநிதி பெருகும்படிக்கும் சர்வகாருணிய ஈசன் அருள் புரிவாராக.

S. பாக்கியநாத முதலியார்,
பெரிய தெரு, திருநெல்வேலி.

---

தபால் கட்டணம்.

இந்தியா சட்டசபையில் 1½தோலா நிறைக்கு மேல போகாத கடிதங்கட்கு தபால் கட்டணத்தை அரையணாவாகவும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு தோலாவிற்கும் ஓரணாவாகவும ஆக்கவேண்டுமென திரு. அமர்நாத் தத்தர் கொண்டுவந்த பிரேரணையும், போஸ்கொர்டை ஒரு பைசாவாக்கவேண்டுமென திரு ஆச்சாரியார் கொண்டுவந்த பிரேரணையும், சாம்பில் பாக்கட்டுகட்கு 5 தோலாவிற்குக் காலணாவீதம் கட்டணம் விதிக்க வேண்டுமென திரு. பாசல் ரஹிம்டோலா கொண்டுவந்த பிரேரணையும் தோல்வியுற்றன.

* * *

இந்தியா லண்டன் ஆகாயத் தபால்

இந்தியாவிலிருந்து லண்டனுக்கு ஆகாய விமானம போகுவரவு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு முதல் முதலாக ஏப்ரல் 7-ந் தேதி காரச்சியிலிருந்து ஓர் ஆகாய விமானம் சென்றது. கலோன், நூரம்பர்க், பெல்கிரேட், ஏதன்ஸ, அலெக்சாண்டிரியா முதலிய நகரங்கள் விமானந் தங்குமிடங்களாக உத்தேசிக்கப்பட்டுள்ளன.

* * *

வங்காள மாகாண அரசியல் மகாநாட்டுத் தலைவர் திரு. சுபாஷ் சந்திர போஸை 28-3-29ல் ஊர்வலமாக அழைத்துச் சென்றபோது ஐயாயிரம தொண்டர்கள் வாலண்டியர்கள் புடைசூழ்ந்து சென்றனராம்.



5

ஊக்கம்.

செங்குந்த குலச் சீமான்களே! சீமாட்டிகளே!!

ஊக்கம் என்பது தனக்கு நன்மை உண்டாக்கக்கூடிய காரியங்களைச் செய்து நிறைவேற்ற வேண்டு மென்னும், ஒருமன வெழுச்சியாம் ஊக்கமென்னும் மன ஓங்கலில்லார் அதிக செல்வவான்களாக இருந்தாலும் சிறப்படையமாட்டார்கள்; காரியங்களும் முற்றப் பெறுவாம் இதனாலேயே திருவள்ளுவ நாயனாரும்.

> உடையர் எனப்படுவர் ஊக்கமது இல்லார்
> உடையது உடையரோமற்று.

எனக் கூறியுள்ளார். ஒரு சமயம் நாம் ஆரம்பித்த காரியம் முடிவு பெறாவிட்டாலும் மனம் சலித்துப் போகாமலும் தளர்ந்து போகாமலும் மன உறுதியுடனும் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டு அதை முடிக்க முயலல் வேண்டும். இப்பேர்ப்பட்ட மன ஓங்கலாகிய ஊக்கமில்லாதவர்களை மரப்பொம்மைகள் என்று அறிவுடையோர் கூறியுள்ளார்கள்.

எப்படித் தண்ணீரிலுள்ள ஆம்பல் தாள்களின் நீளம் அத்தண்ணீரின் ஆழத்தினளவு இருக்குமோ அதுபோல் சென்றறிதல் வேண்டும். கடலானது மிகவும் பெரியது. ஆனால் அந்தத் தண்ணீரானது எப்படிக் குடிக்க உதவவில்லையோ அதுபோல யானையானது உருவத்தில் எல்லாமிருகங்களைக் காட்டிலும் பெரியதாயிருந்தாலும் அது தன் மனதில் ஊக்கமும் உறுதியும் இல்லாததினால அதைவிடப் பனமடங்கு உருவத்தில் சிறிய புலிக்கு அஞ்சுகிறது.

ஊக்கமானது பூலோகத்திலுள்ள சகல வீரருக்கும் அறிவுடையோருக்கும ஆசிரியருக்கும் உயர்குடிப் பிறப்பினாலாவது ஐசுவரியத்தினாலாவது சரீர பலத்தினாலாவது செய்ய முடியாத பெருங் காரியங்களைச் செய்து முடிக்கும. ஆகையால் ஊக்கமே முக்கிய சாதனம்.

அநேக கோடி வருஷங்களுக்கு முன் அரசராய் இருந்த விசுவாமித்திர ரிஷியும் தன் நாடு நகரம் அரசு முதலியவற்றையும் விட்டு வனம் அடைந்து எவ்வளவோ தடைகள் ஏற்பட்டும் சற்றும் ஊக்கமது குன்றாமல் பிரம்ம ரிஷி பதவியைப் பெற்றார் என்பது சகலருக்கும் தெரிந்ததே. ஐந்து வயதுள்ள துருவன ஊக்கத்தாலன்றோ கடவுளை தரிசித்தான். ஆகையால், நாம் ஊக்கத்தை மேற்கொண்டு ஒழுகி வந்ததால் உயர் பதவியை அடையலாம். பண்டைக் காலத்தில் எல்லா ஜாதியர்கள் இடத்தும் பிரம்மசாரியர்களிடத்தும் கிருகஸ்தர்களிடத்தும் துறவிகளிடத்தும் ஊக்கமே நிரம்பி யிருந்தது.

அக்காலத்தில் அரச குமாரர்கள் கல்வி கற்க வேண்டி காட்டிலுள்ள ரிஷிகளை அடுத்து அவர் அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்து காட்டிலேயே தரையிற் படுத்துறங்கியும் காய் கனிகளைப் புசித்தும் ஊக்கத்தோடு, கல்வி கற்று பின்னர் நகர் அடைவார்கள்.

இராமாயணம் எழுதிய வால்மீகர் ஊக்கத்தோடு, தவம் புரிந்த காலத்தில் தன்மேல் புற்றுண்டாய் மறைத்து செடி, கொடிகளும் வளரப்பெற்றதாலன்றோ வால்மீகி என்ற பெயர் அடைந்தார். ஊக்கமல்லவோ அதற்குக் காரணம்.

சத்தியம் தலைகாக்கும் என்பதை நமக்கு விளக்கி அருளிய சூரிய குல திலகமான அரிச்சந்திர மகாராஜன், விசுவாமித்திரர் எவ்வளவு இடையூறுகள் உண்டாக்கியும சற்றும் ஊக்கம் குன்றாமலன்றோ விளங்கியருளினார்.

ஆகையால் நாம் எவ்வளவோ கதைகள் படித்திருக்கிறோம கேட்டும் இருக்கிறோம் அவைகளில் கூறியபடி ஆண் பெண்களாகிய இருபாலர்களும் எக்காலத்தும ஊக்கமே மேன்மைப் படுத்தும என்பதை மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து அதன் படியே நாம நடத்தல கடமையாகும்.

இங்ஙனம்,
பு. அ. நா. கோவிந்தசாமி,
குண்ணகம்பூண்டிபுதூர், வந்தவாசி தாலுக்கா.

---

மகா கும்பாபிஷேகம்.

சுக்கில௵ வைகாசிமீ 27-ம் தேதி 9-6-29 தேசூருக்கடுத்த குண்ணகம் பூண்டிபுதூரில் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீசிவசுப்பிரமண்யருக்கு மகா கும்பாபிஷேகம் நன்கு நடைபெற்றது.

## வர்த்தகப் பகுதி

### 1. வர்த்தகத்தின் சிறப்பு.

வர்த்தகாபிமானிகாள்!

உலகத்திலே 'வர்த்தகம்' மிகச் சிறந்த தொழில். வர்த்தகத்தினாலேயே மேனாட்டு ஆங்கிலேயர் முப்பத்தி மூன்று கோடி ஜனங்களடங்கிய நம்மிந்தியாவை ஆட்சி புரிகின்றார்களென்பதை அதிக மெடுத்துரைக்கத் தேவையில்லை. ஆதலின் வர்த்தகத்தின் சிறப்பை விரிக்கிற் பெருகு மென்றஞ்சி விடுத்தனம்.

வர்த்தகர்கள் நன்னடை, நாணயப்பொறுப்பு, நல்லபிமானம், ஆட்களிடத்தன்பு, இனிய மொழி, தன்னைப்போல் பிறரையும் மதித்தல், உலகானுபவம் முதலியவற்றில் ஈடுபட்டொழுகல் வேண்டும்.

### 2. வர்த்தகப் பழக்கம்.

வர்த்தகஞ் செய்வதற்கு அதிகமான மதி வேண்டும். "மதியில்லா வாணிபம் விழலுக்குச் சமானம்" என்று பெரியாருரைத்திருக்கின்றனர். ஆகையால் வர்த்தகஞ் செய்ய விரும்பு முன்னர், பன்னெடுங்காலமாய் வர்த்தகத்திற் பழகி யநுபோகமுள்ள பிரபல வர்த்தக சிகாமணிகளிடத்தமர்ந்து வர்த்தக முறைகளைச் செவ்வனே யுணரல் வேண்டும்.

### 3. வர்த்தகரொற்றுமை.

வர்த்தகர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு தொழில் புரிவதால், தங்கள் பொருளே விலையமாகுமன்றி வியாபாரத்தில் ஆதாயமில்லாமற் போகும். ஆகவே வர்த்தகர்கள் ஒற்றுமை யென்னும் ஆபரணத்தை அணிதல் வேண்டும்.

### 4. வர்த்தகத்தில் கடன்.

சில வர்த்தகர்கள் 'கடன்' வாங்குவதே யில்லாது கைப்பொருள் வைத்தே வியாபாரஞ் செய்பவர்களுமுண்டு அவர்களைப்பற்றி இங்கு நாம் கூறவில்லை. சிற்சில வர்த்தகர்கள் வியாபாரத்தின் நிமித்தம் ஏராளமாகக் கடன் வாங்குவதுண்டு. அவர்கள் சொல்லுறுதி வழுவாது நடந்து கொள்ளல் வேண்டும். கடன் கொடுத்தவர் வந்து கேட்கும்போது முகங் கடுகொண்டு சண்டை சச்சரவு செய்து கொள்வதும், வர்த்தகர்க்கேற்ற ஒழுங்கல்ல. வர்த்தகர்களே! கடன் கொடுத்தவர் வந்து பணத்தை கேட்கும்போது கொடுத்த பணத்தைத் தானே வந்து கேட்கின்றார்கள்! நாம் அவருக்கு நல்ல வார்த்தையாடி கொடுக்க வேண்டியது நியாயந் தானே, என்றெண்ணி அவர்களுடனே இனிய மொழி பேசாமல் முகங்கடுகடுத்துப் பேசுவோர் மனிதராக யிருப்பினும் பேய்க்குச் சமமாவரென்பதை பின் வருவனவற்றாலுணர்க:—

"கடனுதவு பேர்வந்து கேட்கும்
வேளையில்முகங்
கடுகடுக்கின்ற பேயும்"

என்று குருபாத தாசரும் விளம்பி யிருக்கின்றார். ஆகையால் வர்த்தகர்கள் இவ்விடயத்தை நன்கு கவனித்தல் வேண்டும்.

### 5. வர்த்தகர் விதி.

வர்த்தகஞ் செய்யும் இடத்திற்கு நல்லார், பொல்லார், குடியர், வெறியர், குலமாது, விலைமாது, சிறுவர், சிறுமியர் முதல் யாவரும் வருவார்கள். அவர்களிடம் அவரவர்கட்குத் தகுந்தபடி நடந்து கொள்ளல் வேண்டும். பேசும் வார்த்தையிற் சோரமின்றி பேசல் வேண்டும். முதலுக்கு மோசம் வாராதபடி வர்த்தகஞ் செய்தல் வேண்டும். பலர் கடன் கேட்பார்கள்! அவ்விடத்தில் நிதானித்து, தக்கபடி நடந்து கொள்ளல் வேண்டும். தவிர வியாபாரங்கொள்ளும் ஜனங்களை ஏமாற்றி விடக்கூடாது. அளவு நிறைகளை குறைத்து விடப்படாது. விலை வாசிகளும் அக்கம் பக்கத்திற்குச் சமமாயிருத்தல் வேண்டும். நல்ல சரக்குகளை வைத்து வர்த்தகஞ் செய்தல் மிக்க நலமாகும்.

வர்த்தகர்கட்கு ஓர் எல்லை அவசியம் வேண்டும். இன்றேல், "ஆசைக்கோரளவில்லை" என்பதற்கிணங்க மனம் மலை மலையாய் எண்ணிக்குவித்துவிடும். இங்ஙனம் சில வர்த்தகர்கள் அதிக ஆசை கொண்டு இத்தொழிலில் லாபங் கிடைக்குமா? அவன் அத்தொழிலை நடத்தி பணக்காரனாய் விட்டானே! நாமும் அந்தத்



பிடித்து வர்த்தகஞ் செய்தால் அதிக ஆசை முதலுக்கே மோசம் என்பதற்கொப்ப கையிலுள்ள பொருளே போய்விடும். ஆதலின் கைப்பொருளுக்குத் தக்கபடியும், தன் சாமர்த்தியத்தைப் பொறுத்தும் இத்தொழிலை தான் நடத்தலாமென உறுதி கொள்ளல் வேண்டும்.

### 6. வர்த்தகத்தில் பொறுமை.

சில வர்த்தகர்கட்கு 'தன் பொருள் பிறர் பொருள்' என்பது தெரியாது. பல வர்த்தகரிடத்தில் கடன் வாங்கிக் கொண்டு வீடு கட்டுதலும், காணி வாங்குதலும், வண்டி குதிரை, மாடு முதலியவற்றில் பொருளைப் போடுதலும், தாமிருக்க விவாகஞ் செய்து கொள்வதும், தாம் பிறருக்குக் கடன் கொடுப்பதும் முதலிய பெருமையை வகித்து மகிழ்வடைகின்றார்கள். உலகானுபவமற்றே "மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை" என்பதுபோல் பொறுமை வருங் காலத்து சிரமந்தெரியாது. வரவு செலவு தெரியாது. பொறுமைக்குத் தக்க சிரமமேற்படுமதைக் கருதி நீதியாய் நடந்து கொள்ளல் வேண்டும்.

### 7. கேடு நினைத்தல்

சில வர்த்தகர்கள் சிற்சில வர்த்தகர்கட்கு கேடு நினைப்பார்கள். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது போல் தான் கெடவேண்டி பொறாமை கொண்டு பிறருக்குத் தீங்கெண்ணுதல் நன்றன்று. இங்ஙனம் பிறருக்கு வெட்டிய குழி தனக்கே யாவதுமாகுமன்றோ? ஆதலின், கேடு நினைத்தலே கூடாதென்பதை அவசியம் உணர்தல் வேண்டும்.

நா. வ. முனியப்ப முதலியார்,
சோளிங்கிபுரம்.

## அறிவியல் பகுதி

### நாம் வசிக்கும் வாயு சமுத்திரம்.

(தொடர்ச்சி.)

பிராணவாயு நமக்கு அவ்வளவு உபயோகமுள்ளதாயின் ஏன் காற்று முழுவதையும் பிராணவாயுவாகவே இறைவன் அமைத்திருக்கலாகாது? என்ற சந்தேகம் உண்டாகலாம். சற்று யோசித்துப் பார்ப்போமாயின் இயற்கைப் பேரறிவுடைய கடவுள் நம்மீது வைத்துள்ள பெருங் கருணையினாலேயே அவ்வாறு அமைக்கவில்லை எனத் தோன்றும். காற்று முழுதும் பிராணவாயுவால் ஆக்கப்பட்டிருக்குமாயின் நாம் அளவுகடந்த பிராணவாயுவை சுவாசிக்க வேண்டியிருக்கும். அதனால் நமது உடம்பு அனல் வீசும்; எல்லாம் தீப்பற்றி எரியும். அத்தீ எதனாலும் அணைக்க முடியாதபடி உலகமெங்கும் பரவி எல்லாவற்றையும் நாசமாக்கிவிடும். ஆகையால் அத்தகைய பிராணவாயுவின் அணுக்களை ஒன்று சேராதபடி பிரித்துவைக்கும் முறையில் நார்த்ரஜனி வாயுவென்னும் உப்புவாயு மிகவும் உபயோகமுள்ளதா யிருக்கிறது.

பிராணவாயுவின் உதவி அக்கினிக்கும் வேண்டியிருக்கிறது. பிராணவாயுவில்லையென்றால் நெருப்பு எரியாது. நாலா பக்கங்களிலும் அடைக்கப்பட்ட ஓரிடத்தில் எரியும் நெருப்பை வைப்போமானால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அது தானாகவே அணைந்து போய்விடும். ஏனெனில் அவ்விடத்திலுள்ள பிராணவாயு உபயோகப் படுத்தப்பட்ட பிறகு அக்கினிக்கு அத்தியாவசியமாய் வேண்டப்படும் பிராணவாயு பின்னும் வெளியிலிருந்து அங்கு வரக்கூடாமையால் நெருப்பு அணைந்து போகிறது.

இதனால் நம்மைச் சூழ்ந்துள்ள காற்றானது நாம் சுவாசிப்பதற்கும், நெருப்பு எரிவதற்கும் உபயோகப்படும் பிராணவாயு யாவும் எரிந்து போகாதபடி பிராணவாயுவின் அணுக்களைப் பிரித்து மிதமாய் வைத்திருக்கும் உப்புவாயு ஆகிய இருவகை வாயுக்களால் ஆக்கப்பட்டிருக்கிறதென்று விளங்குகிறது. ஆனால் காற்றை இன்னும் கொஞ்சம் நுட்பமாய்ப் பரீக்ஷித்துப் பார்ப்போமாயின் அதில் மேற்கூறிய பிராணவாயு, உப்புவாயுக்களைத் தவிர வேறுசில வாயுக்களும் கலந்திருப்பதைக் காணலாம். அவற்றுள் முதன்மையானதாகச் சொல்லக்கூடியது கரியமில வாயுவாகும். இது இயற்கையான வாயுவல்ல; பிராணவாயுவின் பரிணாமம் அல்லது திரிபென்றே சொல்லலாம். பிராணவாயு வேறொரு பொருளோடு கலந்து சொரூபத்தா

லும் குணங்களாலும் முற்றிலும் மாறுபட்டு இருத்தலின் கரியமலவாயுவென்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. நாம் சுவாசிக்கும் பிராணவாயுவானது ஈரலுக்குள் சென்று அங்குள்ள கரிசம்பந்தமான பொருளோடு கலந்து எரிந்து சொரூபமும், குணங்களும் மாறி நமது நாசியின் மூலமாகவும் வாயின் மூலமாகவும் வெளியே வருகிறது. இது நமது தேக சுகத்தைக் கெடுக்கும் குணமுள்ளதாகையால் நாம் அதை மறுபடியும் உட்கொள்ளலாகாது. இதைத்தான் கரியமலவாயு வென்கிறோம். இஃதேயன்றிக் கரியமலவாயு தீப்பற்றி எரியும் ஒவ்வொரு வஸ்துவிலிருந்தும் உண்டாகிறது உலகத்தில் ஜீவஜெந்துக்கள் மாத்திரம் வசிப்பதாயிருந்தால் காற்றிலுள்ள பிராணவாயு முழுதும் வெகு சீக்கிரத்தில் கரியமலவாயுவாக மாறி காற்று முழுதும் விஷத்தன்மை யுடையதாகிவிடும்.

ஆனால் மரஞ் செடிகளாகிய தாவரங்கள் விஷத்தன்மையுள்ள கரியமலவாயுவை இலைகளின் மூலமாய் உட்கொண்டு ஞாயிற்றின் கதிர்கள் (சூரிய கிரணங்கள்) உதவியால் அதைப் பிராணவாயு, கரியாகிய இருகூறுகப் பிரித்து கரியைத் தமக்கு உணவாக எடுத்துக்கொண்டு பிராணவாயுவை சுத்தப்படுத்தி நமக்குதவுமாறு வெளியே விடுகின்றன.

நீராவி, அமோனியா முதலிய பல்வகைப்பட்ட வாயுக்களும் காற்றில் கலந்திருக்கின்றன. ஆயினும் முழு வாயுமண்டலத்தின் அளவை நோக்க இவ்வாயுக்களின் அணுக்கள் மிகச் சொற்ப மானவையாகவே இருக்கிறபடியால் மொத்தத்தில் காற்று பிராணவாயு உப்புவாயு ஆகிய இரண்டின் சேர்க்கையினாலேயே ஆக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம்.

இதுவரையில் காற்றுஎன்பது என்னவென்று ஒருவாறு தெரிந்துகொண்டோம். இனிக் காற்று ஏன் பூமியைச் சூழ்ந்திருக்கிறது என்பதைப்பற்றி ஆராய்வோம். வாயுவின் அணுக்கள் இயற்கையாகவே ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்தோடும் தன்மையுடையனவாயினும் பிராணவாயு, உப்புவாயு முதலிய வாயுக்களின் அணுக்கள், ஆகாயத்தில் நாலா பக்கங்களிலும் தனித்தனியப் பிரிந்தோடிப் போகாது ஏன் பூமியைச் சூழ்ந்து தங்கியிருக்கின்றன? என்னும் சந்தேகம் சகசமாயுண்டாகும்.

இங்கு, நம் கண்களுக்குப் புலப்படாத மிக அற்புதமான ஒரு சக்தியைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தூரத்திலுள்ள வஸ்துக்களை ஒன்றோடொன்று சேர்க்க வல்ல கிராகிய சக்தி (gravitation) என்னும் சக்தியைப்பற்றிச் சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். இந்த சக்தி எல்லாப் பொருள்களிடத்திலும் இயற்கையாகவே உண்டு. இச் சக்தியின் வலிமைப் பொருள்களின் பருமனையும், திண்மையினையும் பொறுத்துள்ளதாகும். இதனாலன்றோ எண்ணிறந்த சூரியர்களும் அவற்றைச் சூழ்ந்துள்ள உலகங்களும் ஆகாயத்தில் அந்தரமாய்ச் சஞ்சரிக்கின்றன. மிகப் பருத்துத் திண்மையாயுள்ள பொருள், பருமனிலும், திண்மையிலும் அதனிலும் குறைந்த பொருள்களைத் தன்னிடத் திழுக்கிறது. பெரிது பெரிது புவனம் பெரிது பெரிதென்றபடி மிகப் பெரிதாயுள்ள பூமியானது இலேசாயும், சுலபத்தில் அசையக் கூடியதுமான வாயுவின் அணுக்களைத் தன்னிடத்து இழுத்து தன்னைச் சூழ்ந்து சஞ்சரிக்கச் செய்கிறது. என்றாலும் வாயுவின் அணுக்கள் பூமியினின்று பிரிந்து ஓடுவதற்கான முயற்சியை இயற்கையாகச் செய்துகொண்டேதா னிருக்கின்றன. பூமியும் காற்றைத் தன்னிடத்தில் விடாது வைத்துக்கொண்டிருப்பதற்கான முயற்சியைச் செய்து கொண்டிருக்கிறது.

கடைசியாக இதன் முடிவென்ன வாகிறதென்றால் பூமியினிடத்துள்ள கிராகிய சக்தி வாயு அணுக்களினிடத்திலுள்ளதைக் காட்டிலும் மிகப் பலமாயிருப்பதால் வாயு அணுக்கள் பூமியினருகே இழுக்கப்பட்டு செறிந்து தங்கியிருக்கின்றன. அதாவது பூமிக்கும் காற்றிற்கும் ஏற்பட்டுள்ள இச்சண்டையில் அல்லது பந்தயத்தில் பூமியே ஜெயமடைகிறது. ஆனால் பூமியிலிருந்து மேலே போகப்போக பூமியின் கிராகிய சக்தி குறைந்துகொண்டே போகிறது. அதனாற்றான் பூமிக்குத் தூரத்திலுள்ள வாயு அணுக்கள் அதனருகேயுள்ள காற்றைப் போலல்லாது சிறிது விலகி நிற்கின்றன அதனாலே அங்குள்ள வாயுக்கு சறிவின்மையால் இலேசாயிருக்கிறது.

பூமியின் அடிப்பாகத்திலுள்ள காற்று செறிவாயும் கனமாயிருப்பதற்கு மற்றொரு காரணமுமுண்டு. அதாவது மேலேயுள்ள காற்று கீழேயுள்ளதை அழுத்துகிறது. பூமியிலிருந்து



எவ்வளவுக் கெவ்வளவு மேலே செல்லுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு காற்று இலேசாகவே இருக்கும். ஏனெனில் மேலிருந்து அழுத்தும் காற்று குறைந்துகொண்டே போகிறது. நாம் புகைக் கூட்டிலாவது ஆகாய விமானத்திலாவது ஏறிச்செல்லுவோமாயின் அங்குச் செறிந்த காற்றின்மையால் தாராளமாய் மூச்சுவிட முடியாமல் கொஞ்சம் கஷ்டப்படுவோம். 1804 வருஷத்தில் புகைக்கூட்டில் நாலரை மைல் தூரம் மேலே சென்ற ஒரு பிரஞ்சுக்காரர் அங்குள்ள காற்றைக்கொஞ்சம் பிடித்துக் கொண்டுவந்தார். அந்தக் காற்றையும் அதே அளவுள்ள இவ்விடத்திய காற்றையும் பளுவில் ஒத்திட்டுப் பார்த்தபோது மிகுந்த வித்தியாசம் காணப்பட்டது அதாவது பூமிக்குச் சமீபத்திலுள்ள காற்று ஐந்து பலம் பளுவிருக்குமாயின் $4\frac{1}{2}$ மைலுக்கு மேலிருந்துகொண்டு வரப்பட்ட காற்று இரண்டு பலம் பளுவே இருந்தது. 1862 வருஷம் க்லெய்சர் என்பவரும் காக்ஸ்வெல் என்பவரும் $5\frac{1}{2}$ மைல் தூரம் மேலே சென்றபோது க்லெய்சர் என்பவர் இரத்த நாளங்கள் வீங்கி தலையில் கிறகிறுப்புண்டாகி மூர்ச்சையடைந்தார். ஏனெனில் அவர் சுவாசிப்பதற்குப் போதிய காற்றில்லை. காதின் சுவட்டிலும் உடம்பின் நரம்புகளிலும் தேவையான காற்று நெருக்கமில்லை. அப்போது அவருடனிருந்த காக்ஸ்வெல் என்பவர் விஷயத்தையுணர்ந்து உடனே புகைக்கூட்டைக் கொஞ்சம் கீழே கொண்டுவரா திருந்திருப்பாராயின் அவர் இறந்து போயிருப்பார்.

இனி, காற்றானது மேலே செல்லச் செல்ல பளுவு குறைந்து இலேசாய்க் கொண்டே போகிறதென்றால் அது எவ்வளவு தூரத்திற்கப்பால் முற்றுமில்லாமற் போகும் என்ற சந்தேகம் தானாகவே நமது மனதிலுதிக்கும். நாம் கடைசி வரையில் போய்ப் பார்த்துவந்து அதன் அளவைச் சொல்லமுடியாது. ஏனெனில், அதனளவைக் கண்டுபிடிக்குமுன் நாம் இறந்து விடுவோம். ஆகையால் வெகுகாலமாக வாயுமண்டலத்தின் அளவு சுமார் 50 மைல் இருக்குமென உத்தேசமாகச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் சமீபகாலத்தில் விண்வீழ்க்கொள்ளி என்னும் உற்கைகளைக் கொண்டு அதனளவைத் தெரிந்துகொண்டோம்.

மா. அ. கனகசபை முதலியார்

# சமயப் பகுதி

## சேங்குந்தரும் சிவதீக்கையும்.

(மித்திரன் 3, 187ம் பக்கத்தொடர்ச்சி)

**சிவதீக்கையினா லடையும் பலன்களாவன:—** சிவதீக்கை பெறுவோரடையும் பயன்களை இம்மையில் நேரும் பயன்களெனவும், மறுமையில் நேரும் பயன்களெனவும் இருவகையாகப் பிரிக்கலாம். சிவதீக்கை பெறுதலினால் இம்மையில் துக்க நிவர்த்தியுஞ் சுகப்பேறும், மறுமையில் அழிவிலின்ப நிரதிசயானந்த முத்திப்பேறும் சித்திக்கின்றன சிவதீக்கையானது ஒழுக்கம், ஆசாரம், தேகப்பயிற்சி, காலந்தவறாமை, இவைகளை யடிப்படையாய்க் கொண்டுள்ளது. சிவதீக்கை பெற்றோனொருவன் நியமந் தவறாமல் காலை மாலை யென்னு மிருவேளைகளிலோ, அல்லது காலை நண்பகல் மாலை, யென்னு முப்பொழுதுகளிலோ விடாமல் ஒழுங்காக நித்திய கரும அனுஷ்டானாதி ஜெபத்தைப் பூர்த்தி செய்யப் புகுவானாயின், அதிகாலையி லெழுந்திருந்து காலைக் கடனாதி கருமங்கள் முற்றிய பின் தந்த தாவனஞ்செய்து குளிர்நீரில் ஸ்நானஞ் செய்துகொண்டு, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக்கொண்டு, விபூதி உருத்திராக்கமணிந்து பக்தி சிரத்தையுடன் அனுஷ்டானஞ் செய்வது முறையாதலின், சிவதீக்கை பெற்ற ஒருவனுக்கு, காலை எழுந்திருத்தலினாலுண்டாகும் மனத்தெளிவு, பித்தநிவர்த்தி, நரம்புகளின் தளர்ச்சி நீக்கம் முதலிய அரிய குணங்கள் சித்திக்கின்றன. சௌசாதிகள் செய்வதால் ஊறுபுண், சொரி, சிரங்கு முதலிய சர்மவியாதிகளும் தொத்துவியாதிகளும், உண்டாகாமல் தடுக்கநேரிடுகிறது. காலையில் குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்வதால் சூடு தணிந்து தேகாரோக்கியம், இரத்தவோட்டம், பசிதீவனம், மூளைக்குளிர்ச்சி, மனத்தூய்மை, முதலிய பல நன்மைகள் உண்டாகின்றன. 'சுத்தம் சோறு

போடு¦மென்பது பழமொழி. பிறகு ஆசமனீயம் பிராணாயாமம் இவைகளைச் செய்வதினால் தேக சுகமும், ஆயுள்விருத்தியும் ஏற்படுகின்றன. சிவ தீக்கை பெற்றோர் அவசியமணிய வேண்டுவதாகிய விபூதிஉருத்திராக்கந் தரித்தலினால் முகவசீகரமுந் தேஜசும் செல்வமும் சிறக்கின்றன. நம்மைப் பீடித்த துன்பங்களும் வினைகளு மகல்கின்றன. "வெந்துயர் தீர்ப்பது நீறு" என்பது தேவாரம். சூரிய நமஸ்காராதிகள் புரிவதால் நேத்திரரோகஸ்திகள் நீங்கித் தேக காந்தியும் வலிவுமேற்படுகின்றன. சிவமூல மந்திராதி ஜெபஞ் செய்தலினால் மனோதிடம், தைரியம், ஊக்கம், சுகப் பிராப்தி இவைகளெளிதிலுண்டாகின்றன. சிவதீக்கை யனுஷ்டானாதிகள் முற்றிய பின்னரே போஜனஞ் செய்யவேண்டுமென்னும் நியதிபற்றி, குறித்த காலந் தவறாமல் போஜனம் அருந்துகையால் அஜீர்ண முதலிய நோயணுகாமல், ஜீரண சக்தியை யளித்து தேகதிடத்தை நல்கலால் நோயற்றவாழ்வு எளிதில் கைகூடுகின்றது. காலந் தவறாமை என்னும் அரிய குணமும் அமைகின்றது. காலை எழுந்திருத்தல், கடவுளைத் தொழுதல், மலசலங் கழித்த லாதி காலைக் கடன் கழித்தல், காமரு பற்றுலக்கல், காலையுலாப் போதல் குளிர்நீராடல், சுத்தமான உடை தரித்தல், வெண்ணீறணிதல், அக்கம் புனைதல், அனுஷ்டானஞ் செய்தலாதி நியமங்கள் சிவதீக்கைபெற்ற ஒருவனுக்கு ஒரு நல்ல தேகப்பயிற்சியாகவே யமைகின்றனவென்பது சொல்லாமலே விளங்கும். சிவதீக்கை யில்லானுக் கிவ்வித நியமங்கள் யாவுங் கிடையா. மலசலங் கழித்தல் பற்றுலக்கல் விபூதியணிதலுங்கூட சில வேலைகளில் ஒழுங்காகக் குறித்தவேலையில் செய்தலென்பது கிடையாமல் தவறிப் போகின்றது. கடவுளைத் தியானித்தற்கும் அவகாச மின்மையாய் முடிகின்றது. சிவதீக்கை பெற்றிருந்தாலோ இத்தகைய நியமங்கள் யாவும் செய்தேதீரவேண்டும். அவ்விதம் செய்யாவிடிலோ குரு நிந்தை, உலகப்பழிப்பு ஏற்படும். அதற்கஞ்சி அவசியம் செய்தே தீர்வோம். ஆதலின் சிவதீக்கையினால் எவ்வளவு இம்மைப் பயன்களும் மறுமையின்பங்களும் சித்திக்கின்றனவென்பதை யோசியுங்கள். தவிர, சிவதீக்கைபெற்ற விபூதி உருத்திராக்க மணியுஞ் சாந்தகுண சீலர்க்கு உலக மதிப்பும், ஆசாரவொழுக்கமும், புகழும், கீர்த்தியும், குருபக்தியும், கடவுள் பக்தியும், அடியார் பக்தியும், சிவ புண்ணியமும், சித்திக்கின்றன.

"நமச்சிவாயவே ஞானமுங் கல்வியு
நமச்சிவாயவே நானறிவிச்சையு
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே"

என்ற நமது ஆசாரிய ஸ்வாமிகளி னருமைத் திருவாக்கான், கல்வி, அறிவு, இம்மைக்காஞ் செல்வம் முதலியவைகளும், மறுமையில் முத்தியின்பப் பெருவாழ்வும் சித்திக்குமென்பதை உய்த்துணர்க. தவிர, சிவதீக்கை பெற்றுச் சிவமூல மந்திரத் தியானஞ் செய்வதால் சமஸ்த பாவங்களும் அரிக்கப்பட்டுப் பிறவா இன்பப் பெருவாழ்வு சித்திக்குமென்பது வேதவாக்கியம். "மந்திரத்தை யுண்டவர்க்கு மரணமேதுமில்லையே" என்று ஒரு பெரியாருங் கூறுவாராயினர்.

"அஞ்சிமூன்று மெட்டாய நாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்து கொண்டு நூறுருச்செபிப்பிரேல்
பஞ்சமான பாதகங்கள் நூறுகோடி செய்யினும்
பஞ்சுபோல் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே

என்னுஞ் செய்யுளில் பல்லூழிகாலம் பயின்ற சகலவித பாவங்களும் சுழல் காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சுபோற் பறக்குமென்று சிவவாக்கியர் கூறுகிறார். "அஞ்செழுத்தை யோதிடிலனேக பாவமகலுமே" என்ற பெரியோர் வாக்கும் ஈண்டு கவனிக்கற்பாலது.

"அஞ் சழுத்தி னுண்மையை
யறிந்தங்கோத வல்லிரேல்
வஞ்சகப் பிறவியை
வதைத்திடவும் வல்லிரால்"

என்னும் அமுதமொழியால் பிறப்பை அகற்றவுங் கூடுமென்பது பெறப்படுகின்றது. இத்தகைய பெரும்பாலான புண்ணியங்களும், நன்மையும், மோக்ஷவின்பமும் நல்கலால், சிவதீக்கையை நம் பண்டைக் காலப்பெரியோர்களும், மகான்களும் பெரிதுங் காதலித் திருந்தனர்

"ஐயுந்தொடர்ந்து விழியுஞ்
செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்
திருநீறு மிட்டுக்
கையுந் தொழப் பண்ணியைந்
தெழுத்தோதவுங் கற்பியுமே"

என்று பரணாரியருமுட் சிவதீக்கை வழுவாச் செந்நெறியிலிருந்து உயிர்நீங்க வேண்டுமென்று கடவுளருள் பெற்ற பக்தர்கள் அநேகம் பேர்



கடவுளை மன்றாடிக் கேட்டிருக்கிறார்கள். சிவதீக்கையினாலுண்டாகும் இம்மை மறுமைப்பயன்கள் அளவு கடந்தன. முடிவில் மோக்ஷவின்பமும் சித்திக்கும். ஆகையால் செங்குந்தகுலச் சீரியர்காள்! இனியேனும் நீங்கள் நற்கதி பெறுவான் வேண்டி நங்குலாசாரியர்களைக் கொண்டு (இன குருக்கள்) இத்தகை யுயரிய முழுமுதற் கடவுளாஞ் சிவகுகப்பெருமானாரது திருவருட் பாத்திரராகிச் சிவகுகானந்த பெருவாழ்வடைய முன் வருவீர்களாக. முருகன் திருவருள் தும் பாற் பெருகுவதாக.

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர்,
சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம், கண்டாச்சிபுரம்

## குலதிலகர் பகுதி

### பரமக்குடி ம. ப. இராமசுவாமி முதலியார்

'செங்குந்தமித்திரன்' ஆசிரியர் ம-ா-ா-ஸ்ரீ கனம் ம. ஷண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் சமூகத்திற்கு.

எங்கள் முன்னோர்கள் ஆதியில் இராமநாதபுரம் ஜில்லா, முத்தனேந்தலி லிருந்தவர்கள். இவர்கள், சிவகங்கை, இராமநாதபுரம், எட்டியாபுரம் இராஜாக்களுக்கு அக்காலத்தில் மஸ்லின் என்று சொல்லப்படும் சல்லா உடைகள் செய்துகொடுத்து அவர்களால் சன்மானிக்கப்பட்டு வந்தார்களென்பதற்கு வேண்டிய ஆதாரங்க ளிருக்கின்றன. எங்கள் முன்னோராகிய மங்கான் முதலியார் புத்திரர், பழநியாண்டி முதலியாருக்கும், இவர் மனைவியார் மாரிமுத்தம்மாளுக்கும் உற்பவித்த புதல்வர்கள் மூவரில் எனது பிதா ம. ப. இராமசுவாமி முதலியாரவர்கள் இரண்டாவது புதல்வர்

இவர்கள் 18வயதில் இரங்கூனுக்குச் சென்று முதலில் சில்லறை வியாபாரங்கள் செய்து, பின் ஒரு சீன வியாபாரியின் பழக்கடையில் சம்பளத்துக்குச் சிலகாலம் இருந்து, பிறகு ஒரு ஷாப்புக்கடையில் சில வருஷங்களிருந்து, திரும்பித் தமது ஜன்மபூமிக்கு வந்துவிட்டார்கள்.

இவ்விடத்தில் சி. ஷண்முக முதலியார் புதல்வியும், எனது பெரிய மாதாவுமான மீனாக்ஷியம்மாளவர்களை மணம் புரிந்து இரண்டு பெண் குழந்தைகள் உற்பவித்த பிறகு திரும்பவும் ரெங்கூனுக்குச் சென்று அரிசித் தரகு வியாபாரம் செய்து வந்தார்கள். அப்பொழுது இவர்களிடமிருந்த தொழிற் திறமையையும், சத்தியத்தையும், நாணய ஒழுக்கத்தையும் கண்டு, அநேக தனவந்தர்கள் இவர்களுக்கு முதலும் ஊக்கமும் கொடுத்து அரிசிக்கடை வைத்து நடத்த உதவி புரிந்தார்கள். இதில் இவர்களது விடாமுயற்சியாலும், சொல்லுறுதியாலும், நாணய ஒழுக்கத்தாலும், வியாபாரத் தன்மையாலும் தொழில் ஒழுங்காய் நடைபெறக் கொண்டு வந்ததுடன் இவர்கள் அவ்விடத்திலுள்ள பெரிய மனிதர்களின் கூட்டுறவினால் செல்வாக்கும் சிறப்புமுற்று வந்தார்கள்.

தனக்கு ஆண்மகவு இல்லாததினால் என் தாயாரும மேற்கண்ட எனது பெரிய தாயாரின் சகோதரியுமான, லெக்ஷ்மியம்மாளவர்களை மணம் புரிந்து மக்கட்பேறும் பெற்றார்கள். நாளடைவில், ரெங்கூனிலுள்ள வியாபாரம் மேன்மேலு மோங்கி ஒழுங்காய் நடக்க, அவ்விடத்தில் நற்சிறப்புப் பெற்று வந்தார்கள். இவர்களது திறமையையும் கூர்ந்த அறிவையும் இவர்கள் அடைந்து வரும் செல்வாக்கையும் கண்டு சிலர் பொறாமையும் எய்தினர்.

இவ்விதமாக ரெங்கூன் சூரத்து A பஜாரில், மூன்று அரிசிக்கடைகளும், ரெங்கூனை அடுத்த சரியாமில ஒரு அரிசிக்கடையும் ஸ்தாபித்து, நல்ல நிலைமையில வைத்து, இவ்விடம் வந்து பரமக்குடியில் ஒரு கட்டிடம் நிருமித்து, பூஸ்திதிகளும் வாங்கிச் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இவர்களிடமிருந்த உதார குணத்தையும் நியாய பரிபாலன சிந்தையையுங்கண்டு, கவர்ன்மெண்டார் இவர்களை ஆனரரி மாஜிஸ்திரேட்டாக நியமனம் செய்தார்கள். 10-வருஷ காலம் அந்தப் பதவியிலு மிருந்துவந்தார்கள். சென்ற 1928௵ நவம்பர்மீ 5-ம் தேதி சிவபதவியடைந்தார்கள்.

மரணத்தில் இவர்களுக்கு வயது 61 ஆகும். இவர்களுக்கு, பெண் மக்களில் ஐவரும், ஆண் மக்களில் நான் ஒருவனும் ஜீவந்

ராக இருக்கிறோம். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்கத் தமது சகோதரர் புதல்வர்களையும், நல்ல நிலைமையில் வைத்திருப்பதுடன் தன்னிடத்தில் அன்பும், விசுவாசமும் பாராட்டி வந்த சுற்றத்தார்களுக்கும் சிப்பந்திகளுக்கும் நண்பர்களுக்கும் நல்ல உதவி செய்து மேன்மைப் படுத்தியுமிருக்கிறார்கள். மற்றும் பற்பல தருமங்களைச் செய்திருக்கிறார்கள்.

இராமேஸ்வரத்தில் செங்குந்த மகாஜனங்களின் உபயோகத்திற்காக ஒரு மடம் கட்டுவதற்கு ரூ. 5,0 0 வரை உதவும்படி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சிறவனாகிய நான், முன்னின்று கட்டி வைப்பது பெருமுயற்சியாய்த் தெரிவதால் தங்கள் வகையரு நமது மகாஜன சங்கத்தார் முயன்று அதை நடத்தி வைக்கும்படிக்கும், அதை ஆரம்பிக்கும் சமயம் மேல்கண்ட தொகையைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

7-5-29.

ம. ப. ரா. இருளாண்டி முதலியார்,
பரமக்குடி.

## சுகாதாரப் பகுதி

### காற்று (Air)

செங்குந்த மித்திரனது கொள்கை, செங்குந்த உலகம் சீர்பெற வேண்டுமென்பதல்லவா? அதனால் செங்குந்த குல மக்கள் ஒவ்வொருவரும் ஆரோக்கிய திடகாத்திரராகி, மேல் நிலைமை பெற்றிருக்க நமது மித்திரன் விரும்புகின்றனன்.

அங்ஙனமாக இவர்கள் வசிக்கும் இடங்கள் முதலியவை, உன்னதமான சுகாதார ஒழுக்கங்கள் பொருந்தி இல்லையேல், அங்கு வசிக்கும் மனிதர்களும் வலிவு குன்றி, வேலை செய்யச் சக்தியற்றவர்களாய், கஷ்டத்துக்குள்ளாகி நஷ்டப்பட்டு, அந்தோ ஆயுள் காலத்தையும் குறுக்கிக் கொள்ளுகின்றனர். ஆகவே, அங்கு உய்யும் ஒவ்வொரு குல மக்களும் க்ஷீணமடைய அக்குலமும் நாசமடைகின்றது.

அப்படிக்கின்றி, சுகாதார ஒழுக்கங்கள் நிறைந்த ஸ்தலங்களில் வசிப்பவர் ஒவ்வொருவரும், திடகாத்திரராய் ஊக்கமுடன் வர்த்தகம், விவசாயம், உத்தியோகம் முதலிய பல துறைகளில் தொழில் நடாத்தும் வாலிபர்கள் அதிகரிக்கிறதன்றி, அவர்களைச் சார்ந்த குலமும் முன்னுக்கு வருகின்றது.

இதற்குத் திரவியமும், உடல் நலமும், ஒற்றுமையும் வேண்டும். அதிலும் பல்வகை மார்க்கங்களிலும் உழைத்துச் செல்வவந்தர்களாவதற்கு முதலில் தேகம் இடந்தரல் வேண்டும். ஆகையால் தேகசுகத்துக்கு அவசியமாய் வேண்டப்படும் சுகாதார விதிகளை எல்லோரும் ஆராய்ச்சிசெய்வதுடன், அவற்றை அனுசரித்து நடக்கவும் வேண்டும். இதைச் சிலர்மட்டும் கவனித்து நடந்து வருதல் அவ்வளவு பயனைத் தாராது. இவர்களைச் சுற்றி இருப்பவர்களும் சுகாதார விதிகளைக் கவனித்து நடத்தலையும் காட்டி ஒருமை மனதுடன் ஒத்துழைத்து வர வேண்டும்.

ஏனெனில் ஒருவர் தன் வீட்டை மட்டும் வெகு சுத்தமாக வைத்திருந்து, அவர் அயல் வீட்டார் துர்நாற்றம் வீசும் வஸ்துக்களைச் சேர்த்துவைத்திருப்பின், அக்கொடிய நாற்றம் இவரையும் பாதிக்குமன்றோ? இன்னும் அயல் வீடு தீப்பற்றி எரியின் தன் வீட்டிற்கும் அபாயமல்லவா? தன் வீட்டிற்கு அபாயமுண்டாகாதிருக்க வேண்டுமென்ற சுயநலமுடையவர்களும் அயல்வீடு தீப்பற்றாமல் இருக்க விரும்புவார்களல்லவா? அதுபோலவே, தான் சுகமாக வாழ்வேண்டின் அயல்வீட்டுக் காரனும் சுகமாக இருக்கும்படி கவனித்தல் உசிதம்.

ஆகவே சுயநல உணர்ச்சிவழியே பொது நல உணர்ச்சி தானே உதிக்கின்றது. இவ்விதம் ஒவ்வொருவரும் கவனித்தால், எல்லாம்வல்ல இறைவன் நல்லோர் மனதில் நடனம் புரியும் கருணாநிதி யாகையால், நம்மைச் சுகமாக வாழச் செய்வார். 'ஊரெங்கும் வாழக் கேடெங்கும் இல்லை' என்பது மறுக்கமுடியாத உண்மையன்றோ? பிறகு,

முதலில் விஷக் கிருமிகளால் உண்டாகும் தொத்து வியாதிகள் பலவற்றுள் சிலவற்றை எடுத்துக் காட்டியும் அவைகளைத் தடுக்கும்



உபாயங்களையும் எழுதிவந்தேன். பிணிகள் பலவற்றை மட்டும் எழுதிவருதல் போதாது. என்று எண்ணிப் பிணிகள் வரவொட்டாது முன்ஜாக்கிரதையாகத் தடுக்கும் முறைகளையும் பொதுவாய்க் கூறுகிறேன்.

இப் புவியின்கண் உச்சீவிக்கும் சர்வ ஜீவராசிகளுக்கும் அத்தியாவசியமான பலவற்றுள் காற்று முதன்மையானது. காற்றின்றி எந்த ஜீவராசிகளும் சிறிது காலமேனும் உயிரோடு இரா. அதற்கேற்ப சர்வ ஜீவதயாபராகிய தயாநிதி காற்றை நமக்கு இலவசமாக அளித்திருக்கிறார். காற்றைப்பற்றி நாம் எவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டுமோ அவைகளை முற்றிலும் ஆழ்ந்து அறிதல் அவசியம்.

ஜீவர்களுக்கு முக்கியம் சுவாசம். நாம் சுவாசிப்பது தூய்மையான காற்றாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இனி காற்றின் சேர்க்கைகள், காற்றின் அசுத்தங்கள், அசுத்தக் காற்றால் உண்டாகும் தீமைகள், காற்றைச் சுத்தம் செய்யும் முறைகள், சுத்தாசுத்த வாயுக்களைக் காணும் வித்தைகள் முதலியவைகளைப்பற்றி வரிசைக்கிரமமாக ஆராய்ச்சி செய்ய சிறிது பொறுமையையும் கையாள வேண்டி இருக்கிறது.

காற்று பஞ்ச பூதங்களில் ஒன்றாய் இப்படிய உலகைச் சூழ்ந்துகொண்டிருந்த போதிலும் அது தனிப்பொருளல்ல. பல வாயுக்கள் சேர்ந்த ஒரு வஸ்துவாகும். அதாவது.

பருமனில் 100-க்கு 79 பங்கு உப்புவாயு (Nitrogen)

" " 20·96 " பிராணவாயு (Oxygen)

" " 0·04 " கரியமிலவாயு (carbonic acid gas) ஆகவும்

எடையில் 100-க்கு 77 பங்கு உப்புவாயு

" " 23 " பிராணவாயு

ஆகவும், இன்னும் கொஞ்சம் நவாச்சார வாயு (Ammonia) அக்கினித் திராவகம் (Nitric Acid) நீராவி (Watery Vapour) தாவரம் (Organic) உலோகம் (Mineral) முதலிய வஸ்துக்களும் சேர்ந்திருக்கின்றன.

காற்றிற்கு இயற்கையில் நிறம், சுவை, மணம், முதலியவை கிடையா. பூமியின் மேல் மட்டத்திற்கு மேல் நோக்கிப் போகப்போக அதன் நிறையும் அடர்த்தியும் குறைந்து கொண்டே போகும். வாயுமணி (Barometer) கருவியைக்கொண்டு மலையின்மேல் ஏறிச் செல்லச் செல்ல அதில் காட்டும் அளவு குறைந்துகொண்டே போகும். பூமியின் சுரங்கங்களில் இறங்கிச் செல்லச் செல்ல அதன் அளவு அதிகரிக்கும். பூமிக்கு 200 மைல் தூரத்திற்கு மேல் வாயு இருப்பதாகக் காணப்படவில்லை என்று தீர்மானித்திருக்கிறது. அது கடல் மட்டத்தில் ஒரு சதுர அங்குலப் பரப்பில் 15 பவுண்டு எடையுள்ளதாகக் கண்டுபிடித்திருக்கிறது.

காற்று இயற்கைக் கலப்பே (Mechanical Mixture) ஒழிய பௌதிக சேர்க்கை (Chemical Compound) அல்ல. காற்றின் சுபாவ குணங்களாவன. அது உஷ்ணத்தால் விரிந்து (expand) இலேசாய் மேல்நோக்கிச் செல்கிறது. அப்படிச் செல்வதால் பளுவான குளிர் காற்று காலியான இடத்தில் நுழைகிறது. அதனால் காற்று வீசுகிறது. காற்றின் அழுத்தத்தால் சூறாவளி உண்டாகும். காற்று வீசும் தன்மைக்குத் தக்கவாறு வாயு (wind) சூறைக் காற்று (tempest) பிரசண்ட மாருதம் (storm) என்ப பல பெயரிட்டப்படுகின்றது.

காற்றில் கலந்திருக்கும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் அடிக்கடி தனித்து எழுதுவாம்.

(தொடரும்.)

மா. பாலகுருநாத முதலியார்,
சானிடரி இன்ஸ்பெக்டர், மயிலாப்பூர், சென்னை.

---

#### விகடம்

கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவனும் சிறுமியும் ஒருசமயம் பேசிக்கொண்டிருந்தபோது சிறுவன் "நாம் கலியாணம் செய்துகொண்டபிறகு ஒரு சமயம் எனக்குக் கோபம் வந்து உன்னை அடித்தால் நீ என்ன செய்வாய்?" என்றான்.

சிறுமி: 'அன்பரே என் குணம் உமக்குத் தெரியாது போலும். நான் யாரிடத்து எதை வாங்கினாலும் தாமதிக்காமல் அதைக் கூடிய சீக்கிரம் திருப்பிக் கொடுத்துவிடுவது வழக்கம். அதிலும் என் ஆருயிர் போன்ற கணவனாக அமையவிருக்கும் தாங்கள் தருவதை அரை நிமிஷமும் தாமதிக்காது உடனே திருப்பிக் கொடுத்து விடுவேன். அதைப்பற்றி தாங்கள் கவலையுறவேண்டாம்' எனப் பதிலுரைத்தாள்.

# பாமாலைப் பகுதி

## முருகன் அடைக்கலப் பத்து

### காப்பு.

தஞ்சங் கூறுந் தமிழ்மாலை
தம்பி தனக்குத் தொடுத்திடவே
செஞ்சொல் மேன்மே லணியாகச்
சேரப் பொருந்தித் திகழ்ந்திடவே
பஞ்ச பாணிப் பரமேசன்
பாலன முதல்வன் கணபதியாம்
குஞ்சரதனைக் கைதொழுதேன்
கோடா வருள்கை கூட்டுமென்றே.

### நூல்.

ஐயன் மையன் ஆனவனே
அறுவர் முலைப்பா லுண்டவனே
தெய்வ சேனைக் கதிபதியாய்
தேவர் சிறையை மீட்டவனே
செய்த லாதி நானிலத்து
நின்று நிலவுந் தெய்வமதாய்
உய்யும் நீர்மை யுணர்விக்கும்
உன் பொற்பாதம் அடைக்கலமே. (௧)

பரங்குன் றதனில் மணக்கோலம்
பழனி மலையில் தவக்கோலம்
தரங்கம் புடைசூழ் அலைவாயிற்
சமரம் புரியும் தனிக்கோலம்
வரந்தந் திதவும் வனக்கோலம்
மருவு மடியார் முனமேற்கும்
பரந்த கருணைக் கடலே உன்
பைம்பொற் பாதம் அடைக்கலமே. (௨)

மலைமா னுதவ வருந்திருவே
மன்று ளீசற் கொருகுருவே
கலைமான் கணவற் கொருவிதியே
கருது மடியார் பெருநிதியே
சிலைமான் மகளை மருவினையே
சிதைப்பாய் அடியேன் வினையினையே
அலைமான் மருகா முருகாவுன்
அம்பொற் பாதம் அடைக்கலமே. (௩)

சூரன் முதலோர்க் குறுபகையே
சுரர்கள் வாழ்த்தும் பெருந்தகையே
சீரன் படையிற் றிகழொளியே
சார்ந்தார்க் குதவுந் தனிமுதலே
மூரன் வனிதைக் கொருதுணைவா
முனைவா இலகிற் கோரினையே
சோர் தணிகைத் தனிநாதன்
செம்பொற் பாதம் அடைக்கலமே. (௪)

ஆல கால விடமுண்ட
அமலன் தந்த முருகவசன்
வேலனுடும் வெறியாட்டில்
விரும்பி யாடல் புரிந்தருளும்
மாலின் மருகன் மகபதிதன்
மகளை மணந்த வனமயிலோன்
பாலன் ஸ்வாமி மலைநாதன்
பைம்பொற் பாதம் அடைக்கலமே. (௫)

திருந்தார் வஞ்ச முகநோக்காய்
தேடி வளிக கருள்செய்தாய்
கருந்தாதமன் மனத்திருப்பாய்
கடந்த வுணர்வி லமர்ந்திருப்பாய்
மருந்தா வாய்நீ பவப்பிணிக்கே
மகிழ்ந்தே னுனதன் தவப்பிணிக்கே
அருந்தா வமுதே அறுமுகநின்
அம்பொற்பாதம் அடைக்கலமே. (௬)

பிறப்பும் இறப்பும் தருதுன்பம்
பிணியால் மிடியால் வருதுன்பம்
மறப்பும் நினைப்பு மிலையாதும்
வாழ்வு நிலைத்துத் திகழ்ந்திடவே
சிறப்பும் சீருஞ் சந்ததவும்
செல்வத் திருவா வினன்குடிவாழ்
சிறப்பொலி மேனித் திருமுருகா
நின்பொற் பாதம் அடைக்கலமே. (௭)

முந்தை நாளில் முடியாமல்
மீண்ட வினைகள் எவைபாமோ
இந்த நாளில் நினைந்துள்ள
தேதோ யவைகள் பயன்படவே
வந்து போத லொழிந்தவொரு
வாழ்வு சிறக்கும் வழிதெரிக்கும்
செந்தி னகர்வாழ் முருகாஉன்
செம்பொற் பாதம் அடைக்கலமே. (௮)

பேசும் இனத்தால் பிணிப்புண்டு
பின்னை பெண்டாற் பித்துண்டு
காசின் நினைவாற் கட்டுண்டு
கற்றல் கேட்டல் மடமுண்டு
பாசம் பலவாற் பழுதுண்டு
பற்றில் வீழ்ந்தேன் பற்றகல
வாசக்கடம்ப மணமார்பன்
மலர்ப் பொற்பாதம் அடைக்கலமே. (௯)

வேத மோதும் வேதியான்
வேள்விக் குலக்கு மேதகையே
காத லாகிக் கசிந்துருகாக்
கள்வன் கசடன் கன்மனத்தேன்

---



(10)

ஈதல் ஓதல் வேட்டலிலா
என்சொல் செவிநீ ஏற்பாயோ
நீத ஞான பண்டிதனே
நின்பொற் பாதம் அடைக்கலமே. (௰)

நன்மை தீமை வந்திடினும்
நாடு மொன்று நண்ணிடினும்
இன்மை புன்மை பிடித்திடினும்
எவர் கூடி யெதிர்ந்திடினும்
கன்ம பலன்கள் கடிந்திடினுங்
காவல் கொண்டேற் கருள்கூறும்
பன்னிரண்டு புயமுள்ளான்
பைம்பொற் பாதம் அடைக்கலமே.

ந. சே. இராமசந்திர ஐயர், பி.ஏ., எல் டி.

---

## விகடம்

டாக்டர்:—ஐயா! தங்கள் முகம் இன்று தெளிவடைந்திருக்கிறது. நான் தந்த ஒரே நாள் மருந்தில் குணமாய் விட்டாற்போ லிருக்கிறதே.

நோயாளி:—ஆமாம் தங்கள் மருந்து புட்டியின்மேல் எழுதியிருந்தபடியே நடந்துகொண்டேன். அதனால்தான் இவ்வளவு சீக்கிரம் லகுவாயிற்று.

டாக்டர்:—என்ன எழுதியிருந்தது?

நோயாளி:—புட்டியைக் கார்க்கால் கெட்டியாய் மூடிவைத்திருக்கும்படி எழுதியிருக்கிறது. நான் கண் கொடுத்தது முதல் இதுவரையில் அப்படியே கெட்டியாய் மூடித்தான் வைத்திருக்கிறேன்.

* * *

புதிதாய்க் கல்யாணமான பெண்ணும் பிள்ளையும் ஒருநாள் மாலை உய்யானவனத்தில் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் கீழ்கண்ட சம்பாஷணை அவர்களுக்குள் நடந்தது.

மணமகள்:— என் ஆருயிர்த் துணைவரே! ஒருநாள் 25 வயதுள்ள ஒரு வாலிபர் என்னைப் பார்த்துப் புன்னகை செய்துகொண்டே என்னருகே வந்து என்னை இரு கைகளாலும் எடுத்து மார்போடு தழுவித் தன் மடிமேல் வைத்துக்கொண்டார்.

மணமகன்:—நீ அப்போது என்ன செய்தாய்?

மணமகள்:—நானும் சந்தோஷமாய்ச் சிரித்துக் கொண்டிருந்தேன்.

மணமகன்:—(துடி துடித்துக்கொண்டு) நீ ஏன் அப்படியிருந்தாய்?

மணமகள்:—அச்சமயம் நான் வேறொன்றும் செய்ய முடியவில்லை, நான் அப்பொழுது இரண்டு வயது குழந்தையாகவிருந்தேன்.

* * *

---

# அறிஞர் அமுதமொழிகள்

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் உபதேசம்.

1. அருட்பிரவாகமே ரூபமாகிய ஈஸ்வரர் நாமத்தை இடைவிடாது தியானிப்பதே இக்கலிகாலத்திற்கேற்ற மத தர்மமாகும்.

2. மீன் சாப்பிடுகிறவர்கள் அதன் உபயோகமற்ற தலையையும் வாலையும் விரும்புவதில்லை. சரீரத்தின் மத்தியில் உள்ள மிருதுவான பாகத்தையே புசிக்கிறார்கள். அதைப்போல நாமும் இக்காலத்திற்கு தவாத விதிகளும் கொள்கைகளும் நமது சாஸ்திரங்களிலிருந்தால் அவற்றைக் களைந்து இக்காலத்துக்கு ஏற்றவாறு செய்துகொள்ளவேண்டும்.

3. ஈர விறகும் நெருப்பின்மீது வைத்தால் உலர்ந்து எரிய ஆரம்பிக்கிறது. அது போலவே சாதுக்களும் சங்கங்களும் உலகினர்களுடைய காமம் ஆசை பொறாமை முதலிய ஈரங்களைத் தகித்து விவேகச் சுடர் எரியச்செய்கின்றனர்.

4. அத்யந்த ஆவலே ஈஸ்வர தரிசனத்திற்கு நிச்சயமான மார்க்கம்.

5 கிளிக்கு வயதுசென்று கழுத்துக் தடித்துவிட்டால் பாடச்சொல்லிக் கற்றுக்கொடுக்க முடியாது. அதுபோலவே வயது சென்றபின்னர் ஈஸ்வரனிடத்து மனதைச் செலுத்தப் பழகுதல் முடியாது. (ஆகையால் இளமையிலேயே ஈஸ்வரனிடத்து மனத்தைச் செலுத்துங்கள்.)

6. ஒருவன் பதினைந்து வருடம் தவம் செய்து நீர்மேல் நடக்கும் சித்தியைப்பெற்றுத் குருவிடம் வந்து 'சுவாமி! நீர் மேல் நடக்கும் சித்தியைப் பெற்றேன்.' என்றான். குருவானவர் கோபித்து 'சீசீ இது தானா உனது தவபலன்? படகுக்காரனுக்குப் பைசா கொடுத்தால் உன்னை அதிலேறி, அக்கரை சேர்ப்பான் ஆகையால் இந்தப் பதினைந்து வருஷத் தவம் பைசாவிலை தான் பெறும்' என்றார்.

7 ஒரு விபசார ஸ்திரீ தனது வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருக்கும் பொழுதும் தனது கள்ளப் புருஷனையே நினைத்திருப்பதுபோல உலகினர்கள் ஈஸ்வரனிடத்தில் திடமாக மனதைச் செலுத்தித் தங்கள் வேலைகளைச் செய்தல் வேண்டும்.

8: நீ சாந்தத்துடனும் சற்குணத்துடனும் இருக்க விரும்பினால் பிறர் உன்னைப் புகழ்வதையும் இகழ்வதையும் கவனியாதே.

9. சாந்தம் சாகரத்திலும் பெரிது என்பதையும் முயற்சி திருவினையாக்கும் என்பதையும் ஞாபகத்தில் பதியவை.

10. வேடன் குறிபார்ப்பதிலும் செம்படவன் மீன் பிடிப்பதிலும் மனதைச் செலுத்துவதைப்போல் ஈஸ்வர தியானத்தில் மனதைச் செலுத்துங்கள்.

ப. நஞ்சப்ப முதலியார்,
பள்ளிபாளையம்.

## ஆராய்ச்சிப் பகுதி

### சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் என்னும் நூல் பண்டை ஐம்பெருங் காவியங்களாகிய வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை சிந்தாமணி, சிலப்பதிகாரம் என்பவற்றுள் ஒன்றும். இது இற்றைக்கு 1500 வருடத்திற்கு முன்னரே நடைபெற்றுவந்த கடைச்சங்க காலத்தில் இயற்றப் பட்டதொரு நூலாகும் ஆகவே இது ஒரு பழைமையான நூல் என்பது பெற்றும். சேரன் செங்குட்டுவன் என்ற அரசனது தம்பியாகிய இளங்கோவடிகளே இதற்கு ஆசிரியர் ஆவர். இது முத்தமிழ்க் காப்பியம் நாடகக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளெனவும் கூறப்படும். கணவனும் மனைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பவருடைய சரித்திரத்தை விரித்துக்கூறுவது. தமிழ் நாட்டரசர் மூவருடைய இராசதானிகளாகிய புகார், மதுரை, வஞ்சி, யென்னும் மூன்றன் பெருமைகளையும் விளக்குவது. பண்டைக் காலத்திலிருந்த பல வகை மாந்தருடைய ஒழுக்க முதலியவற்றை இக்காலத்தார் எளிதில் தெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது. அரசர் நீதியிற் சிறிது பிழைப்பினும் அவரை அறக்கடவுள் கூற்றாய் நின்று கொல்லும் என்பதும், கற்புடை மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து தம் பயனை நுகர்விக்கு மென்பதுமாகிய இம்மூன்றினையும் இவ்வுலகத்தார்க்குத் தெரிவித்தற் பொருட்டே இளங்கோவடிகளாற் செய்யப் பட்டது. மேற்கூறிய மூன்று பகுதியையும் சிலம்பு காரணமாகத் தெரிவித்தலின் இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இப்போது நாடகத்தில் நடிக்கப்படுகிறகோவலன் கண்ணகி கதையிலுள்ள சில வேறுபாடுகளைக் காண்பிப்பதற்காகச் சிலப்பதிகாரத்திற் காணப்படுகிற கதையைச் சிறிது கூறிவிட்டுப் பின்னர் மேலே கூறப்பட்டிருக்கின்ற பண்டைத் தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களையும், இந்நூலில் அடங்கிய நீதிகளையும், ஆசிரியர் கால முதலானவற்றையும், சிறிது விளக்கக் கருதுகின்றேன். அறிஞர்கள் இதிற் காணப்படும் குற்றங் கடிந்து குணத்தைக் கொண்டு அடியேனை களிப்படுத்துவார்களாக.

### சிலப்பதிகாரக் கதை.

"சோழவளநாடு சோறுடைத்து" என்பதற்கேற்ப நீர்வளம், நிலவளம் பொருந்திய சோழ நாட்டிற்குத்தலைநகராக விளங்கிய புகார் நகரில், மாநாய்க்கன் மாசாத்துவான் என்னும் இரு பெரிய வணிகர்கள் விளங்கினார்கள். இவர்கள் குணத்திலும் செல்வத்திலும் பெரிதும்மேம்பாடு எய்தியவர்களே யாவர். மாநாய்க்கன் என்பானுக்கு அழகில் இலக்குமியையும், கற்பில் அருந்ததியையும் இணையென்று சொல்லும்படி கண்ணகி என்னும் ஒரு மகளும், மாசாத்துவானுக்கு அழகில் மன்மதனே என்று சொல்லும்படி கோவலன் என்னும் ஒரு மகனும் இருதிலகம்போல் திகழ்ந்தார்கள். கோவலனுக்குப் பதினாறாண்டும் கண்ணகிக்குப் பன்னீராண்டும் நடவாநிற்கையில், சூரவர் இருவரும், தம்மக்களுக்கு மணஞ்செய்வித்தார்கள்.

மணமகனும் மணமகளும் அன்றிற் பறவைகள் போல் இன்புற்று வாழ்ந்திருந்தனர். இவர்கள் இல்லறம் நடத்தி உயர்ச்சி பெறுதலைக் காணவேண்டி, கோவலன் தாற்றாய் வேறொரு மாளிகை அமைத்து இவர்களை அதில் இருத்தினாள். அம்மாளிகையிலிருந்து இவர்கள் அன்பும் அருளும் உடையவர்களாய், இனியவை கூறிச் சுற்றந் தழுவியும், விருந்தெதிர்கொண்டும், அறவோர்க்களித்தும், அந்தணரோம்பியும், முனிவரைப் போற்றியும் இல்லறத்தை இனிது நடத்திவந்தனர். இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்தன. இது நிற்க,

புகார் நகரில் சித்திராபதி என்பாள் ஒரு நாடகக் கணிகை இருந்தாள். அவளுடைய மகள் மாதவி என்பவள். அவளுக்கு நாட்டியம் படிப்பித்து அவளைச் சோழன் அவையிலே அரங்கேற்றினர். அதற்கு வியந்து அரசன் பச்சைமாலையுடனே ஆயிரத்தெண்கழஞ்சு பொன்பரியமும்

142635 (11)

கொடுத்தான். அன்று தொடங்கி நாடோறும் அதுவே பரியமாக நிச்சயித்து. "இப்பச்சை மாலை ஆயிரத்தெண் கழஞ்சு பொன்விலை பெறுவது. இவ்விலையைக்கொடுத்து இதனை வாங்கிச் சூடுகின்றவர் மாதவிக்கு மணமகனாதற்பாலர்" என்று சொல்லி, மாதவி மாலையை ஒரு கூனி கையிற் கொடுத்து, நகர்ப் பெருந் தெருவிலே விலைக்கு விற்பாரைப்போல்வதொரு பண்பினால் நிறுத்தினாள். மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டு களிமகிழ் வெய்திய கோவலன் அம்மாலையை வாங்கினவனாகி, மாதவி மணமனையிலே புகுந்து, மாதவி மோகத்தாலே மயக்கமடைந்து, மனைவியையும் மனையையும் மறந்து மாதவியைவிட்டுப் பிரியாத விருப்பினை உடையவனாயினான். சிலகாலங்கழித்து மாதவி ஒரு பெண்பிள்ளையைக் கருவுயிர்த்தாள். அதற்கு மணிமேகலை என்று பெயரும் இடப்பட்டது. கோவலன் இவர்களோடு கூடிப் பல புண்ணியங்களைச்செய்து இனிதாக வாழ்ந்துவந்தான்.

இங்ஙனமாக வாழ்ந்து வருகையில், அந்நகரில் அக்கால வழக்கின்படி ஓராண்டில் இந்திரன் திருவிழா நடந்தேறியது. விழவிற்குக் கொடியெடுத்த நாள் முதல் இருபத்தெட்டு நாளும் விழவு நடந்து பிற்றைநாள் கொடி இறங்கியது. விழாவாற்றுப் படுத்த மறுநாள் உவா நாளாதலின், நகரினர் பலர் தத்தம் பரிவாரங்களோடு கடலாடுதற் பொருட்டுக் கடற்கரை நோக்கிச் சென்றார்கள். கோவலனும் மாதவியும் அங்குப் போயினர். ஆண்டு அடைந்து இனிதாகப்பாடி நேரங்கழிக்க, ஏதோ ஊழ்வினை வசத்தால் கோவலன் சிறிது மாதவியால் வெறுப்புடையவனாய்த் தன் ஏவலாளர் புடைசூழ்ந்துவர, தனியாகப் புறப்பட்டுத் தன் வீடு நோக்கிப் போயினன். மாதவியும் மிகவும் மயங்கினவளாய்த் தன்னகம் புக்கடைந்தாள்.

கோவலன் பின் வீடுசென்று அடைந்தவனாய், கண்ணகியிடத்தில் "மாயப் பரத்தையோடுமருவி யொழுகிய காரணத்தால் நமது குலத்தில் நெடுங்காலமாய் நீடித்துவந்த நிதியெல்லாம் தொலைந்து வறுமையுற்றேன். இவ்வறுமை எனக்கு மிக்க நாணைத் தருகின்றது" என்று கூறினான். மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாமையால் இங்ஙனந் தளர்ந்து கூறினானே எனக்கருதி, கண்ணகி முறுவல் செய்த முகத்துடன் "என்னிடம் இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளன; அவற்றைப் பெற்றுக்கொள்க." என்றாள். உடனே கோவலன் "நீ சொன்ன இச்சிலம்பை யான் வாணிக முதலாக வைத்து, இழந்த ஆஸ்தியும் அழிந்த அணிகலன்களையும் பொருளையும் மதுரையில் அடைந்து திரும்பப் பெறுவேன். நீயும் புறப்பட்டு வைகறையில் என்னுடன் வருதல் வேண்டும்." என்று சொன்னதும் கண்ணகியும் அகமகிழ்ச்சியுடன் ஒருப்பட்டிருந்தாள்.

இரவில் இடையாமம் கழிந்ததும் கண்ணகியும் கோவலனும் எழுந்து காவலாறியாமல் புறப்பட்டுச் சென்றனர். வழியில் கவுந்தி யென்னும் அடிகளைக் கண்டு அவளையும் உடன் கூட்டிச் சென்றார்கள். வழியில் நேர்ந்த பல துன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு மூவரும் வையை யாற்றை அடைந்து புனையேறி ஆற்றைக் கடந்து, அக்கரை சென்று மதுரையின் மதிற்புறத்தில் கீழ்த்திசை வாயிலுக்கு அணித்தான முனிவரிருக்கையில் தங்கினார்கள். அங்குக் கோவலன் தான் தீக்கனவு ஒன்றைக் கண்டதாகக் கூற, கவுந்தியடிகள், "இத்தவப் பள்ளி துறவிகளுக்கே உரியதாதலால் இல்லறத்தார் இங்கிருத்தல் பொருந்தாது. மதுரையில் வணிகர் உன்னை எதிரேற்றுக்கொள்வர். இனி இவ்விடம் விட்டுப் பொழுது போவதற்குள் மனைவியுடனே மதுரை சென்றடைக." என்றாள்.

அங்ஙனம் உரைக்கையில், ஆயர் குலமகள் மாதிரி என்பாள் கவுந்தியைக் கண்டுவந்து அடிதொழ, அடிகள் கண்ணகியை அவளிடத்தில் அடைக்கலப் பொருளாக ஒப்பித்தாள். மாதரி கண்ணகியையும் கோவலனையும் உடன் கொண்டு புறப்பட்டுத் தன் மனையை யடைந்து ஒரு புதிய சிற்றில்லில் இருவரையும் இருக்கச் செய்தாள். அங்குக் கண்ணகியைத் தனியாக இருத்திவிட்டுத் தான் சிலம்பை விற்பதற்காகக் கோவலன் நகரை நோக்கிச் சென்றான்: நடக்கையில் எதிரே பாய்ந்த எருதையும் கவனியாது கடைத் தெருவை அடைந்தான்.

அங்கு வந்த ஒரு பொற்கொல்லனைக் கண்டு, கோவலன் அவன்மாட்டு அணுகிச் சென்று, தான் கொண்டுவந்த சிலம்பைக் காண்பிக்க, பொற்கொல்லன் "இச்சிலம்பு கோப்பெருந்தேவிக்கல்லாது வேறெவர்க்கும் ஏற்றதன்று. இதனை அரசனுக்கறிவித்து யான் வரும்வரையும் நீர் என் சிறுகுடிலுக்கருகான அவ்விடத்தில் இரும்." என்று சொல்லிப் போனான். பொற்கொல்லன் "யான் முன்பு வஞ்சித்துக்கொண்ட சிலம்பு இவனிடத்ததே என்று பலிமொழிய

அரசனுக்கு வெளிப்படா முன்னரே அதனேடொத்த இச்சிலம்பைக் கொணர்ந்த இப்புதியவன் மீது பழியைச் சுமத்தி என்மீது உண்டாகும் ஐயத்தை யான் போக்கிக் கொள்வேன்". என மனதில் உறுதிகொண்டு அரண்மனை நோக்கிச் சென்றான். அப்போது பாண்டியன் தன் மனைவியின் கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான், அரசனை வாயிற் கடையிடத்தே கண்டவளவிலே பொற்கொல்லன் அடியில் வீழ்ந்து வணங்கிப் பலகால் துதித்து,"அரண்மனையிலிருந்த சிலம்பை அபகரித்துக்கொண்ட கள்வனை என் சிறு குடிலகத்திருத்தி அச்செய்தியை விண்ணப்பித்துக்கொள்ள வந்தேன்." என்று கூற, பாண்டியன் வினை விளைகாலமாதலின் யாவும் தேரானாகிக் காவலரை அழைத்து, "கள்வனைக்கொன்று அச்சிலம்பைக்கொண்டுவருக." என்றனன்.

உடனே கொல்லன் காவலருடனே கோவலனிடம் குறுகி, "இவர்கள் அரசன் ஏவலால் சிலம்பு காண வந்தனர்." என்று சொல்லிச் சிலம்பைக் காட்டுவித்தான். அக் காவலருள் அறிவின்மையால் கொலையஞ்சான் ஒரு களிமகன் விரைந்து சென்று கோவலனை வாளால் வெட்டினன். அந்த வாள் குறுக்கே ஊடறுக்க, முன்னைத் தீவினை முதிர்தலாலே கோவலன் வெட்டுண்டு விழுந்தான். இது நிற்க,

[• அன்று வைகறையாமத்தில் மாதரியானவள் அரண்மனையில் பள்ளியெழுச்சி முரசம் ஒலிப்பது கேட்டு, அன்று தனக்கு அரண்மனையில் நெய் அளக்கும் முறை என நினைந்து, தன் மகள் ஐயையை அழைத்துக் கடை கயிறும், மத்தும் கொண்டு தயிர்தாழிகளிருந்த இடத்துச் சென்றாள். சென்றவள் தாழிகளில் பால் தோயாதிருத்தல், ஆட்டுமறிகள் துள்ளி விளையாடாமல் நிற்றல் ஆகிய சில அடையாளங்களைக் கண்டு, "ஏதோ ஒரு உற்பாதம்" என்றாள். அதற்கு உபசாந்தியாகக் குரவைக்கூத்தாடினர்கள். இது முடிந்ததும் மாதிரி வைகையாற்றிற்குச் செல்ல, அங்குக் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டுப் பெரிதும் துயரடைந்தவளாய்த் திரும்பினள். கண்ணகியிடத்தில் இச்செய்தியைக் கூறினள். அதுகேட்டுக் கண்ணகி ஆற்றொணாத் துயரடைந்தவளாய்ச் சூரியனைப் பார்த்து, "நீ யறிய என் கணவன் கள்வனே?" என்று சொல்ல, அப்போது "நின் கணவனே கள்வனல்லன், அவனைக் கள்வனென்ற இவ்வூரை எரியுண்ணும்." என்று ஒரு அசரீரி எழுந்தது.

உடனே கண்ணகி, மற்றைச் சிலம்பைக் கையில் ஏந்திக்கொண்டு ஆயர்பாடியினின்றும் புறப்பட்டு அந்நகருள்ளே அழுதுகொண்டே சென்றாள். இவளைக் கண்டு நகர மாந்தர்கள் 'இனி யாது விளையுமோ' என்று பலவாறு சொல்லி இவள் நிலைமைக்கு வருந்தினார்கள். வேறு சிலர் கண்ணகியை அழைத்துப் போய் கணவன் பட்டதைக் காட்டினர். அப்பொழுது மாலைப்பொழுதாயிற்று. கண்ணகி, "பெண்டிரும், சான்றோரும், தெய்வமும் உண்டாயின் இவ்வநியாயம் பிறவாது. ஆதலால் அவர்கள் இங்கில்லை." என்றழுதாள். இவை சொல்லி அழுகின்றவள் மார்போடு மார்புறக் கணவனைத் தழுவிக் கொண்டாள். அவ்வளவிலே கோவலன் எழுந்து நின்று, "ஐயோ! உன் மதிமுகம் கன்றியதே" என்று சொல்லிக் கையால் அவள் கண்ணீரை மாற்றினன். பின், "கண்ணகி நீ இருக்க" என்று சொல்லி அமரர் குழாத்துள்ளானாய்ப் போனான்.

மிக்க சினங் கொண்டவளாய், கண்ணகி அரண்மனை வாயிலை நோக்கிச் சென்றாள். அப்போது கோப்பெருந்தேவி தான் கண்ட தீக்கனவை அரசனிடத்திற் சொல்லிக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில் கண்ணகி காவலனது அனுமதி பெற்று அரசன் எதிரிற் போய் நின்றாள். கண்ணகி நடந்த செய்திகளைக் கூற, அரசன், "கள்வனைக் கொல்வது நீதி தானே" என்றதற்கு, "தீரக்கேட்டறியாமல் கொலைக் கட்டளை இட்டமையால் உனது முறைமை கெடுவதாயிற்று. என் சிலம்பிற்கு அரி மாணிக்கம்." என்று விடை பகர்ந்தாள். அரசன் தனது சிலம்பிற்கு அரி முத்து என்பது தெரிந்தவனாய் இரு சிலம்புகளையும் வாங்கித் தன்னெதிரில் வைத்தான். மாணிக்கம் உள்ள சிலப்பு தானே விண்டு வாய் முதல் தெரித்தது. அது கண்ட அரசன், "அந்தோ பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானே அரசன்? யானே கள்வன் என் அருமாபு என்னால் பழியுற்றதே. என் ஆயுள் இன்றோடு முடிக." என வருந்தி, மயக்குற்று வீழ்ந்திறந்தான். உடனே தன் கைச் சிலம்பைக் கோப்பெருந்தேவி முன்னே எறிந்தாள்.

(தொடரும்)

A. S. முத்தையா முதலியார், B.A.,
கோட்டாறு.



## மாதர் பகுதி

### கமலத்தின் இல்வாழ்க்கை

i. கலியாணத்திற்கு முன்

I

ஒரு நாள் சாயுங்காலம் 7 மணி சுமாருக்கு 16 வயதுள்ள ஒரு பெண் கையில் ஒரு புத்தகத்துடன் அதில் வரைந்துள்ள நீதிகளைச் சிந்தித்த வண்ணம் கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் வீதியில் ஊர்வலம் வர, அதைக்காணச் சன்னலின் அருகில் போக, எதிர்வீட்டின் வாயிற்படியில் மாமியும், மருகியும் நெருக்கமாக நின்று வேடிக்கை பார்ப்பதையும் அவ்வீட்டுப் பிள்ளைகள் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருப்பதையும் அப்பெண் நோக்கி, "இக்குடும்பத்தில் எவ்வளவு சந்தோஷத்துடனும், ஒற்றுமையுடனும் வாழ்கின்றனர். நாம் வாசித்து அதிலுள்ள நீதிகளைத் தெரிந்திருந்தால் மட்டும் என்ன பிரயோசனம்? 'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவா' தென்ற பழமொழிப்படியல்லவோ இருக்கிறது? நான் கற்றதும் கேட்டதும் இவ்விதமான உடன் பிறந்தோரும் தாய் தகப்பனாரும் உடைய கணவன் அமைந்தாலன்றோ? அப்போதன்றோ நம் எண்ணப்படி நடக்க இயலும்?" எனச் சிந்தித்துக்கொண்டிருந்த சமயம் கோயிலுக்குச் சென்றிருந்த தாய் கதவைத் தட்ட, உடனே கதவைத் திறக்கச் சென்றாள்.

உள்ளே நுழைந்த அப்பெண்ணின் தாய் "கமலா சாப்பிட்டாயா?" என்று கேட்டாள்.

பெண் "இன்னுமில்லையம்மா. அப்பா வரட்டும் எனக் காத்திருந்தேன்" எனப் பதிலளித்தாள்.

தாய் "அப்பாவுக்காக ஏன் காத்திருந்தாய்? அவர் வர எட்டு மணியாகும். அதுவரையிலா சும்மாயிருப்பாய்? கண்ணு, நீயும் சாப்பிடவா. இருவருக்கும் சாப்பாடு போடுகிறேன்." எனத் தனது மக்களை அழைத்துக்கொண்டிருந்த சமயம் வெளியில் சென்றிருந்த அவர்கள் தகப்பனாரும் வந்துவிட்டார்.

பெண்ணின் தாய்:—ஏது இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டீர்கள்? வர நேரமாகுமென்றல்லவோ சொன்னீர்?

தகப்பனார்:—ஒருவரைப் போய்ப் பார்க்கலாமென எண்ணி நேரமாகுமெனச் சொன்னேன். இன்று போகவில்லை. அதனால், சீக்கிரம் வந்துவிட்டேன்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே அவர் சட்டைப் பையிலிருந்த ஒரு பொட்டலத்தை எடுத்துக் கமலத்திற்குக் கொடுத்தார். சிறுவன் தகப்பனாரின் துணியைப் பிடித்துக்கொண்டே "ஏனப்பா எனக்குப் பந்து வாங்கி வந்தாயா? அக்காளுக்கு மாத்திரம் வாங்கி வந்தாயே." என்றான். தகப்பனார் "வாங்கி வந்தேனப்பா, இதோ தருகிறேன்." என்று ஒரு பந்தைச் சிறுவனுக்குக் கொடுத்தார். கமலம் பொட்டலத்தை அவிழ்த்துப்பார்த்து "அப்பா! வெளியில்போகும் அவசரத்தில் சொன்னது கவனமிராதெனவே எண்ணினேன், வாங்கி வந்துவிட்டீரே." என்றாள்.

பிதா, "கமலா என்ன வேலையிருப்பினும் குழந்தைகள் சொல்வது கவனமிராதிருக்குமோ?" என்று சொல்லிவிட்டு உடைகளைக் களைந்துவிட்டு வேறு உடை அணிந்துகொண்டு உட்கார்ந்து, "குடிக்க ஜலம் கொண்டுவா கமலா." என்றார்.

அவர் மனைவி "கைகால் அலம்பிக்கொண்டு சாப்பிட வாருங்கள். குழந்தைகளும் சாப்பிடவில்லை" என்றாள்.

அவரும் "இன்னுமா சாப்பிடவில்லை? சாப்பிட்டாயிற்றென்றல்லவோ எண்ணினேன். இதோ வருகிறேன்." எனச் சொல்லி எழுந்து கைகால் அலம்பிப் பூசை முடித்துக்கொண்டு சாப்பிட வந்தார்.

சிறுவனே பந்தைப் பெற்ற சந்தோஷத்தினால் சாப்பிட வரும்போதும் பந்தடித்துக்கொண்டே "அக்காள்! இதை வீசிப் போடுகிறேன், நீ பிடித்துக்கொள். போடட்டுமா?" என்று கேட்டுக்கொண்டே பந்தைப் போட ஆரம்பித்தான்.

# ஆராய்ச்சிப் பகுதி

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் என்னும் நூல் பண்டை ஐம்பெருங் காவியங்களாகிய வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை சிந்தாமணி, சிலப்பதிகாரம் என்பவற்றுள் ஒன்றும். இது இற்றைக்கு 1500 வருடத்திற்கு முன்னரே நடைபெற்றுவந்த கடைச்சங்க காலத்தில் இயற்றப் பட்டதொரு நூலாகும் ஆகவே இது ஒரு பழைமையான நூல் என்பது பெற்றும். சேரன் செங்குட்டுவன் என்ற அரசனது தம்பியாகிய இளங்கோவடிகளே இதற்கு ஆசிரியர் ஆவர். இது முத்தமிழ்க் காப்பியம் நாடகக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளெனவும் கூறப்படும். கணவனும் மனைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பவருடைய சரித்திரத்தை விரித்துக்கூறுவது. தமிழ் நாட்டரசர் மூவருடைய இராசதானிகளாகிய புகார், மதுரை, வஞ்சி, யென்னும் மூன்றன் பெருமைகளையும் விளக்குவது. பண்டைக் காலத்திலிருந்த பல வகை மாந்தருடைய ஒழுக்க முதலியவற்றை இக்காலத்தார் எளிதில் தெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது. அரசர் நீதியிற் சிறிது பிழைப்பினும் அவரை அறக்கடவுள் கூற்றாய் நின்று கொல்லும் என்பதும், கற்புடை மகளிரை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பென்பதும், இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து தம் பயனை நுகர்விக்கு மென்பதுமாகிய இம்மூன்றினையும் இவ்வுலகத்தார்க்குத் தெரிவித்தற் பொருட்டே இளங்கோவடிகளாற் செய்யப் பட்டது. மேற்கூறிய மூன்று பகுதியையும் சிலம்பு காரணமாகத் தெரிவித்தலின் இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர் பெற்றது.

இப்போது நாடகத்தில் நடிக்கப்படுகிறகோவலன் கண்ணகி கதையிலுள்ள சில வேறுபாடுகளைக் காண்பிப்பதற்காகச் சிலப்பதிகாரத்திற் காணப்படுகிற கதையைச் சிறிது கூறிவிட்டுப் பின்னர் மேலே கூறப்பட்டிருக்கின்ற பண்டைத் தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களையும், இந்நூலில் அடங்கிய நீதிகளையும், ஆசிரியர் கால முதலானவற்றையும், சிறிது விளக்கக் கருதுகின்றேன். அறிஞர்கள் இதிற் காணப்படும் குற்றங் கடிந்து குணத்தைக் கொண்டு அடியேனை களிப்படுத்துவார்களாக.

### சிலப்பதிகாரக் கதை.

"சோழவளநாடு சோறுடைத்து" என்பதற்கேற்ப நீர்வளம், நிலவளம் பொருந்திய சோழநாட்டிற்குத்தலைநகராக விளங்கிய புகார் நகரில், மாநாய்க்கன் மாசாத்துவான் என்னும் இரு பெரிய வணிகர்கள் விளங்கினார்கள். இவர்கள் குணத்திலும் செல்வத்திலும் பெரிதும்மேம்பாடு எய்தியவர்களே யாவர். மாநாய்க்கன் என்பானுக்கு அழகில் இலக்குமியையும், கற்பில் அருந்ததியையும் இணையென்று சொல்லும்படி கண்ணகி என்னும் ஒரு மகளும், மாசாத்துவானுக்குஅழகில் மன்மதனே என்று சொல்லும்படி கோவலன் என்னும் ஒரு மகனும் இருதிலகம்போல் திகழ்ந்தார்கள். கோவலனுக்குப் பதினாறாண்டும் கண்ணகிக்குப் பன்னீராண்டும் நடவாநிற்கையில், குரவர் இருவரும், தம்மக்களுக்கு மணஞ்செய்வித்தார்கள்.

மணமகனும் மணமகளும் அன்றிற் பறவைகள் போல் இன்புற்று வாழ்ந்திருந்தனர். இவர்கள் இல்லறம் நடத்தி உயர்ச்சி பெறுதலைக் காணவேண்டி, கோவலன் தற்றாய் வேறொரு மாளிகை அமைத்து இவர்களை அதில் இருத்தினாள். அம்மாளிகையிலிருந்து இவர்கள்அன்பும் அருளும் உடையவர்களாய், இனியவை கூறிச் சுற்றந் தழுவியும், விருந்தெதிர்கொண்டும், அறவோர்க்களித்தும், அந்தணரோம்பியும், முனிவரைப் போற்றியும் இல்லறத்தை இனிது நடத்திவந்தனர். இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்தன. இது நிற்க,

புகார் நகரில் சித்திராபதி என்பாள் ஒரு நாடகக் கணிகை இருந்தாள். அவளுடைய மகள் மாதவி என்பவள். அவளுக்கு நாட்டியம் படிப்பித்து அவளைச் சோழன் அவையிலே அரங்கேற்றினர். அதற்கு வியந்து அரசன் பச்சைமாலையுடனே ஆயிரத்தெண்கழஞ்சு பொன்பரியமும்

வாயில் வைக்கத் தாய் குடித்த பிறகு தாயின் வாயைத் தன் கையினால் ஜலத்தைத் தொட்டுத் துடைத்தாள்.

தாய் கமலத்தைத் தன் கரங்களால் மெல்லத் தடவிக்கொடுத்து "இச்சிறுகைகளோ என் பொருட்டு இன்று இவ்வளவு சிரமப்பட்டன." என்று சொல்லி முத்தமிட்டாள்.

**கமலம்:**—அம்மா என்ன சிரமப்பட்டுவிட்டேன்? நான் சிறு குழந்தையோ? இவ்வேலையும் செய்யாவிட்டால் நான் இருந்து என்ன பிரயோஜனம்?

**தாய்:**—கமலா உனக்கு அப்படித்தான் தோன்றும். சாப்பிடுபோ, நேரமாயிற்று.

தன் மக்களுக்கு என்ன வயதானாலும் தாய் சிறுகுழந்தை போலவே பாவிப்பதையும் தன் தாயின் அன்பையும் நினைத்துத் தாய்க்குச் சீக்கிரம் குணமாக வேண்டுமென்று கடவுளைத் தொழுதுகொண்டே தன் தம்பியையும் அழைத்துக்கொண்டு கமலம் சாப்பிடச் சென்றாள்.

III

சில தினங்களுள் கமலத்தின் தாய் சௌக்கியமடைந்து முன்போல் சந்தோஷமாயிருக்கையில், ஒருநாள் இரவு கமலமும் கண்ணனும் தூங்கிய பிறகு, கமலத்தின் தாய் தன் கணவனை நோக்கி "என்ன இன்னும் கமலத்தின் கலியாணத்தைக் குறித்து யோசனை ஒன்றும் செய்யவில்லையே? கமலத்திற்கோ 16 வயதாகிவிட்டது. இன்னும்நாள் கழிப்பது நன்றாயில்லை." என்றாள்.

**கணவன்:**—சிலர் தமது பெண்களுக்குப் பத்துப் பனிரண்டு வயதிலேயே கலியாணம் செய்துவிட்டுப் பிறகு கஷ்டப்படுவதைப் போல், நமது கமலத்திற்கும் கலியாணம் செய்யவில்லை என்று நினைக்கிறாயோ? 16, 17 வயதிற்குப் பிறகே பெண்களுக்குக் கலியாணம் செய்யவேண்டும். இக்காலத்தில் பெண்கள் 13-ம் வயதிலேயே புஷ்பவதிகளாகிவிடுகிறார்கள். அப்பொழுதே உடல் வலிவும், மனோவலியும், அடைந்து விட்டதாகக்கருதி ஊரார் 'ஏன் இன்னும் உமது மக்களுக்குக் கலியாணம் செய்யவில்லை? என்று சொல்லும் சொல்லுக்குப் பயந்து சிறு குழந்தையின் குணத்தையுடைய பெண்களைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டுப் பெண்களுக்குத் தக்க வயதுவந்த பிறகு, மாமன் மாமியின் கொடுமையாலோ, அல்லது கணவன் தன் மனதிற்குப் பிடியாமையாலோ "ஏன் என் தாய் தகப்பன் இவ்வளவு சீக்கிரம் கலியாணம் செய்து கொடுத்து விட்டார்கள்?" என்று ஏக்கமுறும் பெண்களைக் கண்ணால் கண்டிருந்தும் நாமும் அவ்விதம் அவசரப்படவேண்டாமென்றே காத்திருந்தேன். கலியாணத்தைக் குறித்து எனக்கும் கவலையில்லாமல் இல்லை. என் மனத்துக் கிசைந்த வரன் கிடைக்கவில்லை. எல்லாம் முருகன் செயலெனவே எண்ணி அவர் எவ்விடம் அமைக்கிறாரோ அதுவே சரியென்று அவரையே நம்பியிருப்பதால் தகுதியான வரனே கிடைப்பானென்று நம்புகிறேன். என்று அருள் செய்வாரோ தெரியவில்லை. நேற்றையதினம் உன் சகோதரர் வந்தபோது உன்னிடம் எவ்விடமோ பிள்ளை யிருப்பதாகச் சொன்னாரென்றாயே அதன் விவரமென்ன? வேலையின் நிர்ப்பந்தத்தில் எதையும் தீர விசாரிக்க முடியவில்லை.

**மனைவி:**—நம் ஊரிலேதான் பிள்ளை B. A. வாசித்திருக்கிறானாம். ரங்கநாத முதலியாரும் இன்றுகாலை வந்தார். அவரையும் பிள்ளையைப் பற்றி விசாரித்தேன். அவரும் பிள்ளையின் குணத்தைப் பற்றிப் புகழ்ச்சியாகச் சொன்னார். அவர்களுக்கு முன்னோர்கள் சம்பாதித்த பூஸ்திதியும் சிறிது இருப்பதாகத் தெரிகிறது. பிள்ளையும் 200 ரூபாய் சம்பாதிக்கிறானாம். நமக்குப் பணத்தைப்பற்றி அவசியமில்லை. குணமன்றோ வேண்டும்? ரங்கநாத முதலியார் கமலத்தைச் சிறு வயதிலிருந்தே நன்றாக அறிவாராதலால் அந்நாளிலிருந்தே அப்பிள்ளைக்குக் கொடுத்தால் இரண்டு பேருக்கும் பொருத்தமாயிருக்குமென அவருக்குத் தோனறிற்றாம். நாம் கொடுக்க இஷ்டப்படுவோமோ இல்லையோ என்றுதான் சந்தேகப்பட்டதாகச் சொன்னார்.

**கணவன்:**—நமக்கு இஷ்டமிருந்தாலும் பிள்ளை வீட்டார் சம்மதப்பட வேண்டாமா? அவர்களுக்கோ அதிகப்பணக்காரர் வீட்டிலிருந்தெல்லாம் பெண் கொடுப்பதற்கு முன் வருவதாகச் சொல்லுகிறார்கள். பணத்தை விரும்பும் பிள்ளைகள் யாவராயினும் பெண்ணைப் பக்ஷமாக நடத்தமாட்டார்களென்பது எனது எண்ணம். நமது பெண்ணை மனம் நோகாமல் வைத்து நடத்தும் குணவானையே நான் எதிர்பார்க்கிறேன். கண்ணுக்கும் பார்வையாக இருக்கவேண்டு மன்றோ? பெண்கள் விருப்பமும் அதுதானே?



**மனைவி:**—பிள்ளை வீட்டாருக்கு அவர் முன்னமே சொல்லியிருக்கிறாராம். அவர்களுக்கும் பிரியமாய்த்தானிருக்கிறதாம். நாம் கொடுக்க இஷ்டப்பட்டால் இவ்விடம் வருவதாகச் சொல்லுகிறாராம். நம்மைப்போலவே பிள்ளையும் பணத்தை விரும்புவதாகத் தெரியவில்லை. பார்வைக்கும் அழகாகத்தானிருப்பதாகச் சொன்னார். எதையும் தீர விசாரித்துச் செய்வோம்.

**கணவன்:**—'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.' ஆகையால் யாவும் அவன் செயல். நாளையதினம் ரங்கநாத முதலியார் இவ்விடம் வந்தால் நம் சம்மதத்தைச் சொல். எனக்கு வேலை நிர்ப்பந்தமாயிருப்பதால் பகலில் வீட்டிற்கு வரலாமென்றால் முடியவில்லை. நீயே சொல்லிவிடு.

(தொடரும்)

தமிழவல்லி யம்மாள்.

# தலைவருக்கு வழியனுப்பு உபசாரப் பத்திரங்கள்

திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள்
பிராஞ்சு தேச யாத்திரை செல்லுங்கால்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக,
திரு. மா. பா. கந்தசாமி முதலியாரவர்கள், பி.ஏ., பி.இ., வாசித்தளித்த

## வழியனுப்பு உபசாரப் பத்திரம்.

**நலன் உறு தலைவரே!**

செங்குந்த மரபு முன்னேற, நலம்பெற, உரனோடு ஒற்றுமை அடைந்து வாழ நிறுவப்பெற்ற நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் கூடிய ஆரம்ப மகாநாட்டுக்குத் திறப்படத் தலைமை வகித்து "இம்மரபும்உண்டு, மானமுமுண்டு, வலிவுமுண்டு" என நிரூபிக்க ஏதுவாயிருந்த நல்லீர்! கலை வல்லீர்! தாங்கள் இந்நாள்வரைத் தங்கள் பொறுப்புள்ள உயர் உத்தியோகத்தை நடாத்தும் சிரமத்துக்கிடையில் பொதுமக்கள் நலனுக்கும் பாடுபட்டு வந்ததை அப்பொதுமக்கள் மறவாமை ஒருதலை எனில் தங்களால் சீரடைய நினைக்கும் தங்கள் மரபினராகிய யாங்கள் மறப்பதுண்டோ?

தலைச்சங்கத்தின் நிர்வாகஸ்தர் மேனாடு செல்லும் தங்களை வழிகாட்டி யனுப்பும் பாக்கியத்தை எனக்களிக்க நான் தங்கட்குச் செங்குந்த மக்களின் பெயரால் வாழ்த்துக் கூறுகிறேன். மேன்மை மிக்க அமைச்சர் முத்தைய முதலியாரவர்களே! எல்லாம் வல்ல இறைவன் அருளால் இனிது சென்று வருக. மற்றும், நீவிரும், நும் மக்கள் சுற்றம் அனைவரும் நீடூழி வாழ்க.

திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள்
பிராஞ்சு தேச யாத்திரை செல்லுங்கால்
புதுவைப் பிரேஞ்சு இந்திய செங்குந்த சங்கத்தார் வாசித்தளித்த

## வழியனுப்பு உபசாரப் பத்திரம்.

திருவமர் தலைவ! செங்குந்தச் செல்வ!
பீடுறு பிராஞ்சு நாடுறு குடிக்கோல்
ஆட்சியின் அமைச்சு மாட்சியின் நடாத்தியும்
பின்னுறு மக்களை முன்னுறச் செலுத்தும்
பேருரை மக்கட் கேருறப் பொழிந்தும்
இன்றள வுழைத்துக் குன்றென நின்றனிர்.
'ஈதல் உவப்புடைத்' தெனக்காண் நீயிர்
நலன்கொட்டும் வாழ்வு பொலன்பெற்ற மேனாடு
சுற்றி யாண்டைய இயல்முற்றி வருவது
நுங்கருத் தெனிநலம் எங்கட் குறித்து.
எண்ணற்ற வாண்டாய்க் கண்ணற்ற வாறும்
இம்மியும் அசையாத அம்மி போலும்
குறுகிய வாழ்க்கையும் பெறுமிம் மக்கட்
பொதுவுக் குழைத்தல் அதுவே நன்றென
எண்ணும் நல்லீர்! இனிதியல் மொழியீர்!
நன்றே சென்று வருக வென்று
பிராஞ்சிந் தியசெங் குந்தசங் கத்தார்
பொங்கும் மகிழ்வுடன் பொலிவுறு நும்மை
வழியனுப் புகின்றோம் வாழ்த்தும் உரைத்தோம்.
இனிதுசீர் முத்தைய கனியமர் அறிஞ!
வாழிய நீயிர் மக்கள்
சூழிய சுற்றம் துணைபுவி வாழியே.

நமது தலைச்சங்கத்துத் தலைவரும் பிராஞ்சு இந்திய துரைத்தன அமைச்சரும் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டுத் தலைவருமாகிய திரு ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள் பி.ஏ., பி.எல்., ஐரோப்பாவுக்குச் சுற்றுப் பிரயாணஞ் சென்றது பற்றி 27-4-29 அன்று புதுவைப் பங்காரு வாசக சாலை, பங்காரு கிளப்பு, விஸ்வகர்ம சபை இவற்றின் ஆதரவில் முதலியார் அவர்கட்கு வழியனுப்பு உபசாரப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பெற்றன.

# நிருபங்கள்

'செங்குந்த மித்திரன்' பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு.

எங்களூரில் சங்கம் ஏற்பட்டது முதல் நாங்கள் உண்மையான பயன்தரத் தக்கவாறு எங்களால் இயன்றவரையில் அமைதியான முறையில் வேலை செய்துகொண்டு வருகிறோம். என்றாலும், இடையிடையே அநேக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக மலையாளத்திலும் சிறப்பாகக் கொல்லங்கோட்டிலும் செங்குந்தர்களுக்கிடையே சமூக சம்பந்தமான சில அற்ப விஷயங்களினால் பிரமாதமான சண்டைகளும் கக்ஷிப்பிரதிகக்ஷிகளும் உண்டாகின்றனவென்று தங்களுக்கு முன்னரே சொல்லியிருக்கிறேன்.

எங்கள் பிரிவுக்கு 'வெள்ளோட்டுக்காரர்' என்று பெயர். நண்பர் திரு. C. P. இராமன் முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் பிரிவுக்கு 'பச்சா பாளையத்தார்' என்று பெயர். இந்நாட்டில் செங்குந்த வாலிபர்கள் கலியாணமாகிற வரையில் தாடி வளர்க்கிற வழக்கமுண்டு. வெள்ளோட்டுக் காரர்களாகிய நாங்கள் அப்பழைய வழக்கத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக நிவர்த்தி செய்துவிட்டோம். ஆனால் பச்சா பாளையத்தார் மாத்திரம் இன்னும் அவ்வழக்கத்தைப் பிடிவாதமாக அநுஷ்டித்து வருகிறார்கள். பழம் பாலக்கோட்டில் சில வாலிபர்கள் இதை மறுக்கத் துணிந்தார்கள். அதனால் அவர்கள் ஜாதியிலிருந்து நீக்கிவைக்கப் பெற்றனர். ஆயினும் செல்வாக்குள்ள சில பெரியவர்கள் அச்சீர்திருத்தக்காரர்களை ஆதரித்து வருகிறார்கள். அன்னவருள் நண்பர் திரு. C. P. இராமன் முதலியார் அவர்களது மாமனாராகிய திரு. வேலாயுத முதலியார் அவர்களும் ஒருவர். பச்சா பாளயத்தாருக்குக் கொல்லங்கோட்டில் 'வடக்குப் பாவடியார்' என்ற மற்றொரு பெயருமுண்டு. எங்கள் சங்கத்தைச் சார்ந்த ஒருவர் தைரியமாய்த் தாடியை எடுத்துவிட்டார். இன்னும் சில வாலிபர்களும் அவரோடு சேர்ந்து கொண்டனர். இந்தப் பிரயோஜனமற்ற வழக்கத்தைக் குறித்தும் பிடிவாதமாயிருந்த லாளதென்றும் அதை அடியோடு ஒழித்து விடுவதே நல்லதென்றும் எங்கள் சங்கக் கூட்டங்களில் பலதடவைகளில் சொல்லியிருக்கிறோம். படிப்பில்லாத கிழங்களே இதற்குத் தடையாயிருப்பதன்றி எல்லோரையும் கெடுப்பதற்கே நாங்கள் சங்கம் நிறுவியிருக்கிறோம் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

சிலர் தங்கள் பிள்ளைகளைச் சங்கக் கூட்டத்திற்குப் போகக் கூடாதெனத் திட்டஞ் செய்திருக்கிறார்கள். பொதுவாய் வாலிபர்களுக்குத் தாடி வைத்துக்கொள்ளப் பிரியமில்லை. அதை விடுவதற்கு முட்டுக்கட்டையா யிருப்பவர்கள் அறியாமைநிறைந்த பழைய கிழங்களே யாவர். மலையாளத்தில் பல இடங்களிலும் இவ்விவாதம் தற்போது நடந்து வருகிறது. இப் பக்கங்களிலுள்ள செங்குந்தர்களுக்கு மதுபானம் சர்வ சாதாரணமாயிருக்கிறது. நாம் ஏதாவது வேலை செய்யவேண்டுமென்றால் அதற்கு இதுதான் தகுந்த சமயம். எல்லா இடங்களிலும் கக்ஷிகளும், கக்ஷிக்குள் கக்ஷிகளும் இருக்கின்றன. சமீபத்தில் எங்கள் பாவடியிலிருந்த கக்ஷிகளை ஒருவாறு ஒழித்துவிட்டோம். தற்போது எங்கள் சங்கத்தார் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் உதவியைப் பெரிதும் நாடுகிறார்கள். மதுபானம் முதலிய துராசாரங்களால் நம்மவர்கள் நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகிறார்கள். ஜனங்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்தப் பிரசாரகர்களை அவசியம் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு நாளும் நாங்கள் பிரசாரகர்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து முற்றிலும் பொறுமையை இழந்தவர்களா யிருக்கிறோம். அவர்கள் எப்போது வருவார்கள்? இப்பெருந் தொண்டிலேயே என் வாழ் நாட்களைக் கழிப்பதாகத் தீர்மானித்துள்ளேன். என்ன தடைகள் நேரிடினும், என்ன கஷ்டங்கள் வரினும், தங்களைத் தலைவராகக் கொண்டு தாங்கள் காட்டும் பெரு நெறிக்கண்ணின்று செய்வதாக எடுத்துக்கொண்ட இச்சிறிய தொண்டில் யான் என் ஆயுள்கால பரியந்தம் முழுமனதோடு உழைத்துவரத் தயாராயிருக்கிறேன்.



கலியாணமாகாத வாலிபர்கள் தாடி வளர்க்க வேண்டுமென்கிற நிபந்தனை பிற ஜில்லாக்களில் இருந்து வருகிறதா? இது உண்மையாக எல்லாச் செங்குந்தர்களுக்கும் உள்ள பழக்கந்தானா? தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறேன். இங்கு வரும் கனம் பிரசாரகர்கள் போதிய லாட்டரி புத்தகங்கள் கொண்டு வராவிட்டால் எனக்கு நேராக சில புத்தகங்கள் கட்டாயம் அனுப்புங்கள்.

இப்படிக்குத் தங்கள் தாழ்மையுள்ள,
S. சொக்கலிங்க முதலியார்,
தெற்குப் பாவடித் தெரு, கொல்லங்கோடு.

* இவர் ஒரு கல்லூரி மாணவர் இத்தகைய கல்வியறிவுள்ள சுத்த வீரர்கள் ஜில்லாக்கொருவராவது தோன்றுவாராயின் நமது சங்கத்தின் நோக்கம் வெகு சீக்கிரத்தில் நிறைவேறு மென்பதில் ஐயமில்லை

1. கலியாண மாகாத வாலிபர்கள் தாடி வளர்க்க வேண்டுமென்கிற நகைப்புக்கிடந்தரும் நிபந்தனை செங்குந்தர்களுக்குள்ளே தற்சமயம் மலையாளத்தைத் தவிர வேறெந்தஜில்லாவிலும் இருப்பதாகத் தெரியவில்லை.

## ஓர் ஆதர்ச சங்கம்

கோபி தாலுக்கா புஞ்சைப் புளியம்பட்டியில், வாய்மை, சாந்தம், ஜீவகாருண்யம், குலாபிமானம், தெய்வபக்தி முதலியஎல்லா நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்று, செங்குந்தர்களை நல்லொழுக்கத்தின் கண் நின்று உய்யுமாறு புத்திபுகட்டி, அவர்கள் யாவரையும் இனிய மொழிகளால் தம் வயமாக்கிப் பரம்பரையான பெரியதனப் பட்டமும் பெற்று நூல்வியாபாரம் செய்துவரும் பிரபல மிராஸ்தாராகிய திரு. தி. கருப்பண்ண முதலியார் அருந்தவப் புதல்வர்களாகிய, அறிவிலும் வயதிலும் முதிர்ந்த திரு. கருப்பண்ண முதலியார், திரு. மாரப்ப முதலியார் என்னும் பெரியார்கள் இருவரும் உடலும் உயிரும் போலிருந்து அவ்வூரிலுள்ள நம்மவர்களைக் கக்ஷிப் பேதமின்றி ஒற்றுமையோடு வாழச்செய்து வருவதன்றி 15 வருஷங்களுக்கு முன்னரே அவ்வூரில் 'ஸ்ரீமுத்துவிநாயகர் சன்மார்க்க சங்கம்' என ஒரு சங்கம் நிறுவி, பிரதி அமாவாசைதோறும் கூட்டம் கூட்டுவித்தும் மாதம் ஒன்றுக்கு வியாபாரிகளுக்கு 4 அணாவும், தோயும் பாவுக்கு ஒரு அணாவும், வேறு தொழில் செய்வோர்க்கு ஒரு அணாவுமாகச் சந்தாப் பணம் வசூலித்துச் சேர்ந்த தொகையை வட்டிக்கு விட்டுப் பெருந்தொகையாக்கி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயம், ஷை சங்கத்திற்கு ஒரு வகுத்த கட்டடம், செங்குந்தர் மடம் முதலியவை கட்டுவித்துக் கிணறும் ஒன்று எடுத்து ஷைமடத்தின் நாள்தோறும் இரண்டு மூன்று பரதேசிகளுக்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்கள். அவ்வூரிலுள்ள கந்து பாங்கிக் கடையில் அதிக வட்டிக்குப் பணம் வாங்கிப் பல செங்குந்த குடும்பங்கள் நசித்துப்போவதைச் கண்டு சகியாது அப்பாங்கியில் கடன் வாங்க முயன்றவர்களைத் தடுத்து மேற்கண்ட திருப்பணிகள் செய்து மிகுந்துள்ள தொகையின் ஒரு பாகத்தைச் சொற்ப வட்டிக்குக் கொடுத்து இம்சிக்காமல் மெதுவாய் வசூலித்து அத்தொகையைக்கொண்டு பாவடிக்குத் தெற்கிலும் சத்தியமங்கலம் ரோட்டிற்குக் கிழக்கிலுமுள்ள இடத்தில் வசதியான கட்டடமொன்று கட்டி அதைக் கவர்ன்மெண்டு ரிஜிஸ்டிரார் ஆபீசுக்கு மாதம் 20 ரூபாய் வாடகைக்கு விட்டிருக்கின்றனர். வாடகைக்கு விட இன்னும் அநேக கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பல வழியிலும் சங்கத்திற்குத் தொகை சேர்ந்து கொண்டு வருகிறது. சமீபத்தில் 12 ஏக்கர் நிலம் நம்மவர் நன்மைக்காக 3,400 ரூபாய்க்கு வாங்கி வீடுகள் கட்டி சந்நிதி வீதி, பாவடி முதலிய ஒழுங்காக வகுத்து ஸ்ரீகாமாக்ஷியம்மன் கோயில் திருப்பணி வேலையும் நடந்து வருகிறது. கக்ஷிப்பிரதிகக்ஷிகளால் பிளவுபட்டுக் கோர்ட்டுக்கும் வக்கீல்களுக்கும் பெரும் பொருள் செலவிட்டுத் தாழ்மையடையே எய்திவரும் ஒவ்வொரு செங்குந்த கிராமும் இனியாவது இதைப் பின்பற்றி இன்னும் சீர்கேடுறாது மேன்மையடையுமென நம்புகிறோம்.

இதுகாறும் நமது தலைச்சங்கம் செய்துள்ள நன்மைகளைக் குறித்து மேற்கண்ட பெரியோர்கள் இருவருக்கும் நாங்கள் விரிவாக எடுத்துரைத்தோம். அவர்கள் அதைக்கேட்டு அளவிலா மகிழ்ச்சி எய்தி அவ்வூர்ச் சங்கத்தைத் தலைச்சங்கத்தோடு இணைத்து வருஷக் கட்டணம் செலுத்திவருவதுடன் அநேக கிளைச்சங்கங்களை ஸ்தாபிக்கவும், மித்திரனுக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருவதாகவும் வாக்களித்துள்ளார்கள். கொடுக்க வேண்டிய வற்றிற்குக் கொடுத்தும் கொடுக்கத்தகாத வற்றிற்குக் கொடாமலும் அளவறிந்து செலவு செய்துவரும் நன்னோக்கமுடைய இப்பெரியார்களை நாங்கள் தெய்வங்களாகப் பாவித்து வருகிறோம். பிறவிடங்களிலும் நம்குலப் பெரியார்கள் இவர்களைப்போல் பொது நன்மைக்கு உழைக்க முன் வருவார்கள் என்ற கருத்தோடு இதனை நமது மித்திரனில் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றோம்.

கர்னம் நயினமலை முதலியார்,
கணபதி வா. ப. நஞ்சப்ப முதலியார்,
வடக்கலூர் ஆபூதி கிராமம்.

---

விடை.

எழுத்து மாறிய வெண்பா.

தேவருங்க நாடுவதும் செந்தியில்நம் கண்டுநைதை
தாவரும்ப வித்திரனை தல்லாமோ—மாவருமும்
ஈட்டுமுத மல்குவசம் ஏடா எலதிலது
கூட்டிவா தர்ம குகா.

கோ. தே. இராமசாமி முதலியார்.
செங்குந்த சங்கத் தலைவர், கரூர்.

## நிருபம்.

செங்குந்தமித்திரன் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு, அன்பார்ந்த வந்தனம். செங்குந்த மித்திரனைச் சுமார் 3 மாதங்களாகக் காணாது தாயைக்காணாத சேயைப் போல வாடி நின்றோம். 16-4-29-ல் நமதரியமித்திரன் மூன்று மாத பத்திரிகையும் ஒரே உருவாகக் கிடைத்தது. அதிலுள்ள நமது குல திலகர் ஒட்டக் கூத்தர் திருவுருவப் படமும் இடையிடையே மகா நாட்டுத் தலைவர்கள் படங்களும் சரித்திரங்களும் ஈரோட்டு மகாநாட்டில் நடந்தேறிய சிறப்புக்களும், கொடியுயர்த்திய வைபவமும், தலைவர்களின் அரிய உபந்நியாசங்களும் எங்கள் மனத்தில் ஊன்றி வீற்றிருந்து ஸ்தம்பிக்கச் செய்ததென்றால் அவ்வைபவங்களை நேரில் பார்த்தவர்கள் மனம் எவ்வாறிருந்திருக்கக் கூடும். நாங்களெல்லாம் நேரிலிருந்து கண்டுகளிக்கக் கடவுளுக்கு மனமில்லாது தேசாந்திரத்தில் ஒதுக்கி விட்டது பூர்வ ஜென்மத்தின் தவக்குறைவென்றே வருந்துகின்றோம். டிரான்ஸ்வால் சங்கத்தாரால் தொகை வசூலாகி வருகிறது. இன்னும் இரண்டு மூன்று மாதம் வரையில் வசூல் செய்து சேர்ந்த தொகையைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு அனுப்பி வைக்கிறோம். இங்குள்ள செங்குந்தர்களுள் சிலர் வீண் வாதங்கள் பேசிக்கொண்டு வரிகொடாதிருந்து வருகிறார்கள். இருந்தாலும் பத்திரிகை மூலமாய்ப் பார்த்த பிறகாவது அவர்கள் மனம் திரும்பக் கூடுமென நம்புகிறோம். இன்னும் சந்தாதாரர்களைச் சேர்த்து தொகையை அடுத்த மெயிலில் அனுப்புகிறோம்.

ஈரோடென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் நடந்த மகாநாடு போலவே பிரதி வருஷமும் தவறாது நடந்தேறி வரவேண்டுமென்றும், அதற்கு எவ்விதத்திலும் இடையூறு நேராதிருக்க வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திப்பதோடு நம் குல முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் பெரியார்களுக்கு டிரான்ஸ்வால் செங்குந்த சங்கத்தின் சார்பாக நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் அன்புள்ள

அ. அழகர்தலிங்க முதலியார்,

டிரான்ஸ்வால் செங்குந்தர் சங்கக் காரியதரிசி.

# செங்குந்தர் கிளர்ச்சி

## திருச்சி ஜில்லா

### கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்

நிகழும் சுக்கில ஸ்ரீ சித்திரை மீ 26உ (8-5-29) புதன்கிழமை அமாவாசை யன்று இரவு 9-மணிக்குக் கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கக் கூட்டம் திருவாளர் கு. மா. கருப்பண்ண முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. ஷை சங்கப் பொதுக் கூட்டத்தில் ஸ்கூல் மாணவர் க. கருப்பண்ணன் என்னும் 11-வயதுள்ள சிறுவன் 'கள்ளுண்ணாமை' என்பதைப் பற்றி உபந்நியாசம் செய்ய இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

மு. கருப்பண்ண முதலியார்,

சங்கத் தலைவர்.

### கரூர் செங்குந்தர் சங்கம்.

சென்ற விபவ ஸ்ரீ பங்குனி மீ 27உ செவ்வாய்க்கிழமை அமாவாசையன்று சாயங்கிரம் 4-மணிக்கு ஸ்ரீ அன்ன காமாக்ஷியம்மன் ஆலயத்தில் செங்குந்தர் சங்கம் பிரபலமாய்க் கூடிற்று. எப்போதும் போல் சந்தா வசூலும் தலைக்கட்டு வசூலும் செய்து ஷை அம்மனுக்குப் பூசைசெய்யும் பூசாரி உ. க. ஆறுமுக முதலியாருக்குச் சம்பளம் ரூ.7-8-0 கொடுத்துவிட்டு அம்மனுக்குத் தீபாராதனை பூசை நைவேத்தியம் நடத்திப் பிரசாதம் பெற்று ஷை கூட்டம் இனிது முடிவு பெற்றது. நம்மவர்களில் ஏற்படுத்தப்பட்ட செங்குந்த புரோகிதர்களைக் கொண்டே கு. பழனியப்ப முதலியார் வீட்டில் குழந்தை ஜனனமான புண்ணியார்ச்சனையும் கோ. தெ ராமசாமி முதலியார் வீட்டில் தாயார் சிவபதவியடைந்த 16-ம் நாள் உத்திரகிரியை சடங்குகளும் ப கு. பழனியப்ப முதலியார் வீட்டில் குழந்தை ஜனனமான புண்ணியார்ச்சனையும் மற்றுமுள்ள திதி சங்கர்ப்பங்களெல்லாம் உ. க. ஆறுமுக முதலியாரென்னும் புரோகிதரைக் கொண்டே நடந்தேறி அமுலுக்கு வந்துவிட்டன.

அ. கு. ஆறுமுக முதலியார்,

காரியதரிசி.

## வடஆற்காடு ஜில்லா

### குடியேற்றம் டவுன் செங்குந்த வாலிபர் சங்கம்.

இரண்டாவது மாதக் கூட்டம் 11-4-29-ந்தேதி மாலை புதுப்பேட்டை விநாயகர் ஆலயத்தில் 6-மணிக்குத் தலைவர் D சுப்ரமணிய முதலியார் தலைமையின் கீழ் கூடிற்று. சிறுவன் K. M. முனிரத்தினம் கடவுள் வாழ்த்தை கூறியபின், K. சாமிநாதன் என்னும் மாணவர் சுகாதார விஷயமாகப் பேசியதும், தலைவர் ஒற்றுமையினால் உண்டாகும் நன்மைகளைப் பற்றி விளக்கமாக பேசினார். திருவாளர் பொன்னுசாமி முதலியார் நம் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாகவும், கிளைச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்குத் தக்க வழிகளைப் பற்றியும் 1 மணி நேரம் பேசினார். ஸ்ரீமான் அய்யாசாமி முதலியார் நம்குல வரலாற்றைப் பற்றியும், வீரத்தன்மையைப் பற்றியும் விரிவாகப் பேசினார். ஸ்ரீமான் ஆதிமூல முதலியாரும், சிறுவன் முனிரத்தினமும் இக்கிளைச் சங்கத் தலைவர்கள் இன்னும் அதிக ஊக்கம் எடுத்துக்கொண்டால் நலமாக இருக்குமென்றும், சங்க வாசகசாலைக்குச் சில ஆங்கில பத்திரிகைகளை வரவழைத்தால் மாணவர்களுடைய தொகை அதிகமாகும் என்றும், உயர் திருவாளர் M. V. பீமராஜா முதலியார் அவர்கள் ஆதரவில் இம்மாதம் இப்பேட்டையில் ஓர் இரவு பாடசாலை ஏற்படுத்தியதின் பொருட்டாக அவருடைய வாழ்நாளை இச்சங்கம் என்றும் போற்றுவதாகவும் சொல்லிமுடித்த பின் வந்தேமாதரத்தோடு கூட்டம் இனிது கலைந்தது.

K. M. முனிரத்தின முதலியார்,

காரியதரிசி.



## தஞ்சை ஜில்லா

### திருமருகல் ஸ்ரீ சண்முகானந்த சங்கமும், செங்குந்த குலாபிமானச் சங்கமும்.

1. ஸ்ரீ ஷண்முகாநந்த சன்மார்க்க சங்கத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழா 12, 13-3-29உ களில் ஸ்ரீ ஷண்முகானந்த ஹாலில் திருவையாறு அரும்பத்துமூவர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவசிதம்பர மெய்ஞ்ஞான ஞானாசாரிய சுவாமிகள் அக்கிராசனத்தின் கீழ் நிகழ்ச்சி முறையில் கண்டபடி கல்வியாளர் பலர் சொற்பொழிவாற்ற வெகு விமரிசையாக நடைபெற்றது.

2. செங்குந்த குலாபிமானச் சங்கத்தின் இரண்டாவது வருடப் பொதுக்கூட்டம் 13-3-29-ல் திருவாரூர் சைவத் திருவாளர் சொ. வேலாயுத முதலியார் தலைமையின்கீழ் நடைபெற்றது, அக்கிராசனர் முன்னுரை கூறியபின் ஸ்ரீமான் சி. க. முத்துவேலு முதலியார், 'நமது நாகரிகம்' என்பதைப் பற்றியும், சி. தி. தாண்டவராய முதலியார் 'அறஞ்செய விரும்பு' என்பதைப் பற்றியும், சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் தீர்மானங்களைப் பற்றி ஆலோசனை செய்து மற்றொரு கூட்டத்தில் நிறைவேற்றிக் கொள்வதாக முடிவு செய்ய, கூட்டம் இனிது நிறைவேறியது.

3. ஸ்ரீ ஷண்முகாநந்த சன்மார்க்க சங்கத்தில் 5-5-29-ல் திருவாளர் S. ரெத்தினசாமி முதலியார் அக்கிராசனத்தின்கீழ் ஓர் அநுதாபக் கூட்டம் நடந்தது. 24-4-29-ல் இம்மண்ணுலக வாழ்வை நீத்த பெரியாராகிய சைவத் திருவாளர் ம. ரா. குமாரசாமி பிள்ளையாரின் பிரிவாற்றாமையைப் பற்றி அக்கிராசனர் முன்னுரை கூறியபின் சி. தி. தாண்டவராயன், அப்பெரியாரின் குரு பக்தியைப்பற்றியும், சமயப்பற்றைப்பற்றியும், சகைத்தன் மீதுள்ள அபிமானங்களைப்பற்றியும், தம் குரு வகுப்பினராகிய செங்குந்தர்களிடத்து இடைவிடாதிருந்த அன்பின் பெருக்கைப் பற்றியும், பொறுமை, இன்சொல், புன்னகை, ஆடம்பரமின்மை முதலிய அன்னவரின் குணங்களைப் பற்றியும் சிறிது நேரம் சொற்பொழிவு நிகழ்த்திய பின் அன்பர்கள் எல்லோரும் எழுந்து நின்று கொண்டு அன்னவரின் பூதவுடம்பழியினும், புகழுடம்பழியாது ஆத்மா ஈசன் திருவடியடைந்து சாந்தியடையுமாறு 5 நிமிஷம் வரை எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சி. தி. தாண்டவராய முதலியார்,

காரியதரிசி.

## மதுரை ஜில்லா

### சோழவந்தான் செங்குந்தர் சங்கம்,

மேற்படி சங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் முள்ளிப்பள்ளம் ஸ்ரீ குருநாத சுவாமி கோயிலில் இரவு 9-மணிக்குக் கூடியது. அவ்வமயம், சைவத் திருவாளர் கூ. சன்னாசி முதலியாரவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களைப் பிரேரேபிக்க அவை ஏகமனதாய் நிறைவேறின.

1. இச்சங்கத்தின் மாதாந்தரக்கூட்டம் ஒவ்வொன்றுக்கும் இவ்வூர், தென்கரை ஆகிய இவ்விரு ஊர் செங்குந்தரனைவரும் தவறாது விஜயம் செய்ய வேண்டும்.

2. இச்சங்கத்துக்குப் பொருளுதவும் சந்தாதாரர்களனைவரும் ஒவ்வொரு மாதத்திய சந்தாத் தொகையையும் அவ்வம்மாத முடிவுக்குள் செலுத்தி வரல் வேண்டும்.

3. 'செங்குந்தமித்திரன்' வரவழைக்கும் ஒவ்வொரு செங்குந்தரும் பிரதி மாதமும் பத்திரிகை வந்தவுடன் வாசித்து அதன் நோக்கங்களையும், நடவடிக்கைகளையும் தெரிந்து அதன்படிநடக்க முயற்சிசெய்யவேண்டும். இவற்றைத் திருவாளர்கள் ப. அ. மாயாண்டி முதலியாரவர்களும், ச. ஆண்டியப்ப முதலியாரவர்களும் ஆமோதித்துப் பேசினார்கள்.

பின்பு கூட்டம் இரவு 10½-மணிக்கு இனிது கலைவுற்றது.

* * *

சங்கத்தின் முதலாமாண்டு, இரண்டாமதிக் கூட்டம் முள்ளிப்பள்ளம் குருநாத சுவாமி கோவிலில் 2-5-29 வியாழக்கிழமை இரவு 7-மணிக்குக் கூடியது. அவ்வமயம் காரியதரிசியால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டுச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறின.

1. இக்கூட்டம், தற்சமயம் நம் சங்கத்திற்குப் போதிய நிதியில்லாததால் செங்குந்த பிரமுகர்களைத் தினசரி, வாராந்திர, மாதாந்திர பத்திரிகைகளைச் சங்கத்தின் உபயோகத்திற்காகத் தருவித்துக் கொடுக்க வேண்டிக்கொள்கிறது.

2. இக்கூட்டம், நமது தலைச்சங்கத்தின் பிரசாரகர்கள் மதுரைக்கு விஜயம் செய்யுங்காலத்து இவ்விடத்திற்கும் அவர்களை வரவேற்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

முதல் தீர்மானத்தை யனுசரித்து ச. ஆண்டியப்ப முதலியாரவர்கள் (வாராந்திர) லோகோபகாரி பத்திரிகையும், மதுரை M. அங்குசாமி அவர்கள் (மாதாந்திர) அமிர்தகுண போதினி பத்திரிகையும் தருவித்துக் கொடுக்க வாக்களித்துள்ளார்.

பிறகு கூட்டம் 9½-மணிக்கு இனிதுகலைந்தது.

ச. ஆண்டியப்ப முதலியார், காரியதரிசி.

## திருநெல்வேலி ஜில்லா
### செங்குந்த வாலிபர் சங்கம், தென்காசி.

1104ஞு சித்திரைமீ 18உ (29-4-29) செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்குத் திருவாளர் T.P.K. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கோட்டாறு தமிழ் உயர்தர பாடசாலை தமிழ்ப்பண்டிட் A. S. முத்தையா முதலியார் அவர்கள் B.A. நமது குலமுன்னேற்றம் என்பது பற்றி உபந்யாசம் செய்தார்கள். பின்னர் தலைவர் அவர்களால் முடிவுரை கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

1104ஞு சித்திரைமீ 26உ புதன்கிழமை மாலை 6-மணிக்குத் திருவாளர் ப. கு. சுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய சாதாரண நிர்வாக சபை கூட்டத்தில் அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

தீர்மானங்கள்:—

1. சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர், திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் இவ்விடம் வருவதைப் பற்றி இச்சங்கம் மிக சந்தோஷமடைகிறது.

2. டையாரவர்களை 27-ந்தேதியன்று ரயிலிலிருந்து வரவேற்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

3. டையாரவர்களை டை மாதம் 28-ந்தேதி வெள்ளிக்கிழமையன்று உபந்யாசம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறது.

1104ஞு சித்திரை மாதம் 27-ந்தேதி இரவு 10-மணிக்கு டை மாதம் 26-ந்தேதி கூடிய நிர்வாக சபை கூட்டத்தின் தீர்மானப்படி திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களை ரயிலிலிருந்து அழைத்து வர 30 அங்கத்தினர்கள் போய் இருந்தார்கள். ரயிலில் திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் வந்ததும் ஸ்டேஷனில் வைத்து திருவாளர் ஆ. சி. த. சுப்பையா முதலியார் அவர்களால் புஷ்பமாலை சூட்டப்பட்டு திருவாளர் T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டனர். மறுநாள் மாலை 4-மணிக்குத் திரளான ஜனங்கள் திருவாளர் T. P, K. ஆறுமுகமுதலியார் அவர்கள் இல்லத்திற்குப் போய்த் திருவாளர். பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களுக்குத் திருவாளர் T. P. K. ஆறுமுக முதலியார் அவர்களால் புஷ்பமாலை சூட்டப்பட்டு தலைவர் T. P. K. ஆறுமுக முதலியார் அவர்களையும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களையும் கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். மாலை 5-மணிக்குக் கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது. திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் சமூக முன்னேற்றம் என்பது பற்றி கல்மனமும் கரையுமாறு அரியதோர் சொற்பெருக்கிட்டார்கள். அதன் பின் போர்டு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. S. பஞ்சாபகேச சர்மா, B.A., L.T., அவர்கள் கல்வி என்பது பற்றி நீண்டதோர் சொற்பெருக்கிட்டதோடு இராப்பாடசாலை வைக்கும்படியும் அதற்குத் தம்மால் வேண்டிய அளவு உதவி செய்வதாயும் வாக்களித்தார்கள். இறுதியில் தலைவர் அவர்கள் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய் உபந்யாசித்தார்கள். பின்னர் நிருவாக சபை அங்கத்தினர் ஸ்ரீமான் அ. வே. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 11-மணிக்கு தேவார கோஷ்டியுடன் தலைவர் அவர்களையும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களையும். திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள், சுந்தர விலாஸ், இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தாம்பூலம் வழங்கி கூட்டம் இனிது கலைந்தது.

R. திருமலை முதலியார்,
காரியதரிசி.

### திருநெல்வேலி செங்குந்தர் வாசகசாலை.

நாடோறும் நாடோறும் அறிவு வளர் பிறை என வளர்ந்து வரும் திருநெல்வேலி என்னும் இம்மா பெரும்பதியில் செங்குந்தர் பெரும்பான்மையோராய் திகழுகின்றார்களாயினும் குலமுன்னேற்ற அறிவுச்சுடர் கொழுந்தும் வாசகசாலை ஒன்றினை இதுகாறும் நிறுவிற்றிலர் என்பது குறித்துச் செங்குந்த உலகம் வருந்தா நிற்கும். அக்குறையினை நீக்குவான் வேண்டிச் சென்ற வைகாசி 1உயன்று குலத்தொண்டாற்றும் பல பெரியோர்களின் தனியா வேட்கையாலும் பெருந்தவியாலும் பெரிய தெருவில் இருக்கும் அம்மன் கோவிலில் இவ்வாசகசாலை நிறுவப்பட்டது. இவ்வாசக சாலையின் திறப்பு விழாவினைச் சிறப்புற ஆற்றிய பெரியார் ஸ்ரீமான் S. பழனியாண்டி முதலியாரவர்கள் B.A., என்னும் வழக்கறிஞராயாவர். அன்னார் இவ்வாசகசாலைக்குச் செய்து வரும் உதவியினை எடுத்துரைக்கற்பாற்று. மற்றும் இவ்வாசக சாலையின் நலம் குறித்து நன்கொடையாக ஐந்து ரூபாய் அளித்த முனிசிபல் கவுன்சிலராக இருந்த ஸ்ரீமான் பெ. வெ. சண்முகசுந்தரப் பெருமாள் முதலியார் அவர்கட்கும், மூன்று ரூபாய் மனமுவந்து அளித்த ஸ்ரீமான் செ. ந. ரு. சொ. சுப்பையா முதலியார் அவர்கட்கும் இவ்வாசகசாலை எக்காலத்தும் நன்றி காட்டக் கடமைப்பட்டுள்ளது. அன்னதன்மையாளர் சிலர்க்கும் இவ்வாசகசாலை நன்றி காட்டக் கடப்பாடுடைத்து. இவ்வாசக சாலைக்குப் பத்திரிகைகள் வருவிப்பதுடன் படிக்கப் புஸ்தகங்களும் (Library) வைத்துள்ளோம். என திரு. C. இராமசாமி எழுதுகிறார்.

## சேலம் ஜில்லா
### செங்குந்த மகாஜன சங்கம், அம்மாப்பேட்டை, (சேலம்.)

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் (சென்னை) சங்கத்தின் சார்பாகத் திருவாளர் C. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள் B.A., B.L., திருவாளர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., B.L. 1929ஞு மேமீ 20உ இங்கு வந்து சேர்ந்தார்கள் அவர்களை



இவ்வூர் செங்குந்த மரபின் தலைவர்களான திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்களும், திரு. S. P. பொன்னுசாமி முதலியார் அவர்களும், திரு. கி. அ. மு. பொன்னுசாமி முதலியார் அவர்களும் ரயில்வேஸ்டேஷனுக்குச் சென்று அழைத்துவந்தார்கள். அன்றிரவு அம்மாப்பேட்டைச் செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடைபெற்றது சுமார் 300 ஜனங்கள் வரையிலும் வந்திருந்தார்கள். மேல்படி கூட்டத்திற்கு திரு. S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் அக்ராசனம்வகித்தார். திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள் "சமூக முன்னேற்றம்" என்னும் விஷயத்தைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் ஒரு சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அச்சமூகத்திலுள்ள ஆடவரும் மகளிரும் நன்றாயக் கல்வி கற்க வேண்டியது அவசியமென்றும் ஏராளமான பொருள் சம்பாதிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள் பொருள் தேடுவதற்குரிய முக்கிய வழியாவது சிக்கனமாகச் செலவு செய்தல் என்பதும் அங்கிருந்த ஜனங்களுக்கு ஞாபகப்படுத்தப்பட்டது. மதுபானம் செய்தல், கோவில்களில் பலியிடுதல் முதலியவற்றை அறவே ஒழிக்கவேண்டுமென்றும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் திருவாளர் V. S. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெண்களுக்கு கல்வி கற்பிக்கவேண்டியது மிகவும் அவசியமென்றும் இன்றைய சிறு பெண் குழந்தைகளே நாளைக்கு தாய்மார்கள் ஆகக்கூடியவர்களென்றும் அவர்கள் படித்தவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுடைய குழந்தைகளும் பாக்கியம் உடையவர்களாக வருவார்களென்றும் சொன்னார்கள். தவிரவும், வியாபாரம் பரஸ்பர சகாயநிதிச் சங்க (co-operation) முறையில் நடத்தப்பட வேண்டுமென்றும் ஊரில் கக்ஷிப் பிரிவுகள் இருக்கவே கூடாதென்றும் ஒற்றுமைக்குறைவினால் மிகுந்த துன்பங்கள் உண்டாகுமென்றும் உபந்நியாசித்தார்கள் பின்னர் திருவாளர் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் இந்த ஊரில் கக்ஷிப் பிரிவுகள் இருப்பதாகவும் அதனால் சமூக வளர்ச்சிக்குத் தடைசெய்துக் கொண்டிருக்கிறதென்றும் ஆகவே ஒற்றுமையுடனும் ஒருவர்க்கொருவர் பொறுமையின்றியும் வாழவேண்டுமென்றும் சொன்னார்கள்.

தலைவர் அவர்கள் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் சபை கலைந்தது.

### அம்மாப்பேட்டைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

இந்த சங்கத்தின் ஆதரவின்கீழ் 1929ஞு மேமீ 22உ இரவு 9-மணிக்குத் திருவாளர் S. பெரியசாமி முதலியார் (முனிசிபல் கவுன்சிலர்) அவர்கள் தலைமையின்கீழ் ஒரு விசேஷக் கூட்டம் கூடிற்று. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவின் கீழ் இங்கு விஜயம் செய்திருக்கும் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் B.A., B.L., வாலிபர் இயக்கம் உலகத்தில், தோன்றி இருக்கும் நியதிகளையும், மிகவும் முக்கியமானதென்றும் வாலிப இயக்கத்தினால் பொதுவாகவே மிகுந்த நன்மை வரக்கூடியதாயிருக்கிறதென்றும் முக்கியமாக செங்குந்தர்களுக்கு இடையில் வாலிப இயக்கம் கட்டாயம் இருக்க வேண்டுமென்றும், அதனால் வரக்கூடிய நன்மைகள் பலவென்றும் சொன்னார்கள். திருவாளர் C. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள் B.A., B.L., செங்குந்த வாலிபர்கள் சமூதாய முன்னேற்றத்துக்காக பெரும் உழைப்பு எடுக்க வேண்டுமென்றும் கல்வியறிவுள்ள வாலிபர்கள் கல்வியறிவில்லாத மற்றவர்களுக்கு ஓய்வு நேரங்களில் சற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் சமூதாயத்திலுள்ள குறைகளை கவனித்து அக்குறைகளை நீக்குவதற்காக முயற்சிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். தவிரவும் ஜனங்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றும் பெண்களை சிறு வயதில் மணஞ்செய்து கொடுப்பது நல்லதல்லவென்றும் சொல்லப்பட்டது.

திருவாளர் S. பழனியாண்டி முதலியார் (செங்குந்த மகாஜன சங்க காரியதரிசி) அவர்கள் பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றி அழகாகச் சொன்னதுடன் கல்வியறிவில்லாத பெண்களை வாலிபர்கள் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாதென்றும் தீர்மானஞ் செய்து கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள்.

தலைவர் அவர்கள் முடிவுரை பிரசங்கத்தில் முன் பேசினவர்கள் சொன்ன விஷயங்களைக் குறித்து நீண்டநேரம் அழகாகவும் தெளிவாகவும் பேசினார்கள் பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

S. ஆறுமுக முதலியார்,
காரியதரிசி.

### செங்குந்தர் சங்கம் மோகனூர்.

5-5-29-ல் ஸ்ரீ மாட்சியம்மன் ஆலயத்தில் வழக்கம்போல 9-வது கூட்டம் கூடிற்று. கூட்டத்திற்குத் தலைவரவர்கள் வராமையால் உபதலைவர் திரு மு. மகாலிங்கசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது. பள்ளிக்கூட மாணவர்கள் P. P. M. வரதராஜன் பெருமாள் முதலியார், S. மாரியப்ப முதலியார் இருவரும் முறையே கடவுள் வாழ்த்துக் கூறியதும் கு. ல. சடையப்ப முதலியார், 'மெய்ப்பொருள் நாயனார்' புராணமும், பொ. முருக முதலியார் 'சோமாசி நாயனார்' புராணமும் உபந்யாசம் செய்தபின் காரியதரிசியால் முன் கூட்டத்தின் நடவடிக்கை வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பெற்று சந்தாத்தொகை வசூலித்து தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

கு. ல. சடையப்ப முதலியார்,
காரியதரிசி, மோகனூர்.

### செங்குந்தர் மகாஜன சங்கம் வேலநத்தம்.

இச்சங்கம் உயர் திரு. வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி.ஏ. பி.எல்., அவர்களாலும் உயர் திரு. ஸி. பன்னிருகைபெருமாள் முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களாலும் 24-5-29 தேதியில் திறந்து வைக்கப்பட்டது.

29-5-29 சுக்கில ஞு வைகாசிமீ 16உ மாலை 6½-மணிக்கு வேலத்தம் சுப்பிரமணியர் ஆலயத்தில் திரு. கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் கூட்டம் கூடியது. சுமார் 200 ஜனங்கள்வரை கூடியிருந்தார்கள்.

நடவடிக்கைகள்.

ஸ்ரீமான் வி: சின்னைய முதலியார் அவர்கள் "கடவுள் வணக்கம்" கூறினர்.

ஸ்ரீமான் ப. மா. பெருமாள் முதலியார் அவர்கள் "பெண் கல்வி" என்ற விஷயமாயும், ஸ்ரீமான் என். ஆறுமுக முதலியார் அவர்கள் "சிவதீக்ஷை" என்ற விஷயமாயும், ஸ்ரீமான் சி. வ. வைத்திலிங்க முதலியார் அவர்கள் "வர்த்தகம்" என்ற விஷயமாயும், ஸ்ரீமான் பெ. க. சித்த முதலியார் அவர்கள் "சங்கத்தின் அவசியம்: "ஒற்றுமை" என்ற விஷயமாயும் பேசினார்கள்.

சங்கத்தில் நடந்தேறிய தீர்மானங்கள்.

1. 24-5-29 தேதியில் கருணையோடு இங்கு வந்து இச்சங்கத்தை திறந்துவைத்த உயர்திரு வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களுக்கும் உயர்திரு வி. பன்னிருகைபெருமாள் முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களுக்கும் இச்சங்கம் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. சங்கத்தின் செலவுக்காக எல்லா மெம்பர்களும் பிரவேச கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 1-0-0 வீதம் அடுத்த கூட்டத்தில் செலுத்தவேணுமாயும் அடுத்த மாதம முதல் மாதம் ஒன்றுக்கு சந்தா 0-2-0 வீதம் ஒவ்வொரு மெம்பரும் செலுத்திவர வேணுமாயும் ஸ்ரீமான் எஸ். ஆறுமுக முதலியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் எல்லோராலும் ஆமோதித்து தீர்மானிக்கப்பட்டது.

3. இச்சங்கத்தை சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தில் கிளைச்சங்கமாகச் சேர்த்துக் கொள்ள கட்டணம ஐந்து ரூபாய் மணியார்டர் செய்ய வேணுமாயும் சங்கத்தின் ரூல்ஸ் புஸ்தகம் முதலியன வரவழைக்க வேணுமாயும் தீர்மானிக்கப்பட்டது.

4. அடுத்த சங்கம் 5-6-1929 தேதி பிற்பகல் 5-மணிக்கு இதே இடத்தில் கூடுவதாயும் அன்று ஸ்ரீமான் எஸ். ஆறுமுக முதலியார் அவர்கள் "கோபம்" என்ற விஷயமாய் பிரசங்கிப்பதாயும் தீர்மானிக்கப்பட்டு அக்கிராசனர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் இரவு 9-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

ஆறுமுக முதலியார்,
காரியதரிசி.

சங்க உத்தியோகஸ்தர்கள்.

தலைவர்: கு. வை. ஆ. செங்கோட முதலியார், உபதலைவர்: திரு. V. சின்னைய முதலியார், காரியதரிசிகள்: திரு. S. ஆறுமுக முதலியார், கு. ப. க. வையாபுரி முதலியார், பொருட்காப்பாளர்: திரு. ப. க. சித்த முதலியார் உதவிப் பொருட்காப்பாளர்: ப. ம. பெருமாள் முதலியார், நிர்வாக அங்கத்தினர்: திருவாளர்கள் ப. ம. சிவசாமி முதலியார், கு. வை. அ. வையாபுரி முதலியார், செ. கு அங்குத முதலியார், ப. ஆ. கந்தசாமி முதலியார், தை. விஜையற்குன் முதலியார், நா. சி. மாரிமுத்து முதலியார், சி. வ. வைத்திலிங்க முதலியார். அ. கொ. வையாபுரி முதலியார், கு. வே. காவேரி முதலியார், ப. வி. மாரியப்ப முதலியார், சொ. வேலாயுத முதலியார்.

கோவை ஜில்லா
ஈரோடு தாலூக்கா மொறட்டுப்பாளையம்
செங்குந்தர் வாலிபர் சங்கம்.

6-5-29உ மாலை 4-மணிக்கு சையூர் ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில் முன்பாகப் பாவடியில் திருவாளர் பூசாரி க. பழனியாண்டி முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் செங்குந்தவாலிபர்கள் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அதுசமயம் திருவாளர் மொ. க. குழந்தையப்ப முதலியாரவர்கள் நமது குலம்முன்னேற்றம் அடையும்வழி என்பதைப்பற்றி வாலிபர்களுக்கு தெளிவாய் விளங்கும்படி போதித்தார். அப்போதே வாலிபர்கள் ஓர் சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்து சங்கத்துக்கு அடியிற்கண்ட உத்தியோகஸ்தர்களை நியமித்தார்கள்.

1. தலைவர் திரு. மொ. ப. நாச்சிமுத்து முதலியார் அவர்கள்.

2. உபதலைவர் திரு. சி. பாலசுப்ரமண்ய முதலியார் அவர்கள்.

3. காரியதரிசி திரு. அ. வேலாயுத முதலியார் அவர்கள்.

4. உதவி காரியதரிசி திரு. அ. உண்ணாமலை முதலியார் அவர்கள்.

5. பொக்கிஷதார் திரு. சொ. மா. இராமசாமி முதலியார் அவர்கள்.

6. கணக்குப்பரிசோதகர் திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் இன்னும் 40 மெம்பர்கள் அங்கத்தினராகச் சேர்க்கபபட்டனர்.

தீர்மானங்கள்.

1. இச்சங்கம் 15 நாளைக்கு ஒருமுறை கூடவேண்டுமென்றும்.

2 இச்சங்கத்திற்கு சேர்ந்த எல்லோரும் நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் சந்தா கொடுக்கவேண்டுமென்றும்.

3. இச்சங்கத்தை சென்னையிலிருக்கும் நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அதற்கு வருஷம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் கட்டணம் செலுத்திவர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

4. இச்சங்கத்திக்கு நன்கொடையாகக் கணபதிபாளையத்தின் திருவாளர் த. க. பழனியப்ப முதலியார் அவர்கள் ஐந்து ரூபாயும் தலைவர் திரு. மொ. ப. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் ஒரு ரூபாயும், பொக்கிஷதார் திரு. சொ. மா. இராமசாமி முதலியார் அவர்கள் ஒரு ரூபாயும் சபையிலேயே கொடுத்தார்கள். அவர்களுடைய குலாபிமானம் மிகவும் பாராட்டத்தக்கது. இரவு 9-மணி சுமாருக்கு வந்தனோபசாரம் சொல்லி சபையோர்களுக்கு சந்தனம் தாம்பூலம் வழங்கப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

அ. வேலாயுத முதலியார்.
காரியதரிசி.



செங்குந்தர் முன்னேற்றக் கழகம், முத்திபாளையம்.

இக்கழகத்தின் திறப்புவிழா 13-5-29உ முத்திபாளையம் செங்குந்த விநாயகராலயத்தில் மூவத்துறை E. V. துரைசாமி முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கொண்டாடப்பட்டது. விளம்பரத்தின் பயனால் பல ஊர்களிலிருந்தும் செங்குந்தப் பிரமுகர்கள் அநேகர் வந்திருந்தனர்.

பின்னர் பகல் 3-மணிக்குத் தலைவர் பூமாலை யிடப்பட்டுத் தேவாரக்கோஷ்டியோடு முத்திபாளையம் நாட்டாண்மைக்காரர் இல்லத்திலிருந்து அழைத்து வரப்பட்டு விநாயகர் ஆலயத்தையடைந்தார். ஆலயம் வாழை கமுகுகளால் அலங்கரிக்கப்பட்டுப் பார்ப்பதற் கழகாயிருந்தது. எங்கு பார்த்தாலும் நீதிச்செய்யுட்கள் எழுதப்பட்ட போர்டுகள் (Boards) தொங்கவிடப்பட்டிருந்தன. 'செவ்வியகுந்தச் செல்வர்காள்! வம்மின், வாழ்க நமது சண்முகசுந்தரச் சற்குணவள்ளலார், துரைசாமிப் பெயர்புனைத்தோன்றலே! வருக, மித்திரனை ஆதரியுங்கள், செங்குந்தர் பிரபந்தத்திரட்டைப் படியுங்கள்' என்றவை போன்ற பல வளைவுகள் கோயிலுக்குமுன் சித்திர வேலைப்பாடுகளுடன் பொலிந்தன. இடம் போதாமையால் பந்தலுக்கடியில் பல நாற்காலிகள் இட்டு அங்கும் பலர் உட்கார்ந்திருந்தனர். பெண்களுக்குத் தனியிடம் அமைக்கப்பட்டிருந்தமையின் பல செங்குந்தப் பெண்களும் வந்திருந்தனர். இதர சாதியாரும் பலர் வந்திருந்தனர்.

தலைவரைத் தேர்ந்தெடுத்ததும் மாணவர் M. R. பெருமாள் வரவேற்புப் பத்திரம் வாசித்தார். பின் தலைவர் முன்னுரையும், அதன்பின் வடவழி மாணவர் திரு. S. இராமசாமி முதலியாரவர்களால் 'நமது முன்னேற்றம்' என்ற பொருள்பற்றியும், மையூர் திரு. V. P. மருதப்ப முதலியாரவர்களால் 'கூத்தர் பெருமான்' என்பதைப்பற்றியும், குளத்துப்பாளையம் மாணவர் திரு. P. இராமசாமி முதலியாரவர்களால் 'கொலைமறுத்தல்' என்பதுபற்றியும், வடவழி திரு. V. K. M. அப்பா அவர்களால் 'ஓர் வேண்கோன்' என்பதுபற்றியும் அரிய விரிவுரைகளும் நிகழ்ந்தன. இடையிடையே தமிழ் வேதபாராயணம் செய்யப்பட்டது. கடைசியாகத் தலைவர் சுமார் 3-மணி நேரம் பண்டிதர் முதற்பாமரர் ஈறாக ஆனந்தக்கடலிலேயே ஆழ்ந்துவிடும்படி பேசி தவ்வானந்தத்தின் மூலமாகப் பல அரிய விஷயங்களை எல்லோர் மனத்திலும் பசுமரத்தாணிபோற் பதித்துவிட்டார். பின்னர் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு இரவு 10-30-மணிக்குச் சபை இனிது கலைந்தது. அன்றிரவு உறவின் முறையாரெல்லாருக்கும் முத்திபாளையம் A. பழனியப்ப முதலியாரவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது.

அன்று நிறைவேறிய தீர்மானங்கள்.

1. குளத்துப்பாளையம், உலியம்பாளையம், தொண்டாமுத்தூர், புத்தூர், கொண்டையம்பாளையம் ஆகிய 5 ஊர்களும் முத்திபாளையத்தைச் சுற்றிலும் ஒரே மைல் தூரத்திற்குள்ளிருப்பதாலும், மையூர்களிலெல்லாம் சராசரி 15 செங்குந்தக் குடும்பங்களே இருப்பதாலும், 'முத்திபாளையம் செங்குந்தர் முன்னேற்றக் கழகம்' ஒன்றே போதுமென்றும் மற்ற ஊர்களெல்லாம் இதற்கு அங்கங்களாக இருக்க வேண்டுமென்றும்,

2. இக்கழகத்தின் நிகழ்ச்சிகள் மாதமொருமுறை நடைபெற வேண்டுமென்றும்.

3. இவ்வூர்களிலுள்ள செங்குந்த குடும்பங்கள் ஒவ்வொன்றும் இக்கழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஓரணு சந்தா செலுத்த வேண்டுமென்றும்,

4. அதைத் தலைச்சங்கத்தின் கிளையாகச் செய்ய வேண்டுமென்றும்,

5. அதற்காக வருடம் ஒன்றுக்கு தலைச்சங்கத்திக்கு ரூ 5-0-0 கட்டவேண்டுமென்றும்,

6. செங்குந்தமித்திரனை ஆதரிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

M. R. பெருமாள்,
காரியதரிசி

"செங்குந்தர் நன்னெறிக்கழகம் மருதவரைநீழல் வடவழி"
"சங்க நிகழ்ச்சிகள்"

மருதாபுரம் முத்துக்குமாரசுவாமி இராப்பாடசாலையில் 9-2-29உ சனிக்கிழமை யன்று, நா. ஒதிமலை முதலியார் அவர்கள் தலைமை வகிக்க "ஒட்டக்கூத்தர்" "படிக்காசுத் தம்பிரான்" ஆகிய இவ்விரு பெரும் புலவர்களின் சரித்திரங்களை முறையே திரு. S. இராமசாமி முதலியார் அவர்களும், திரு V. P. மருதப்ப முதலியார் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

2. மருதவரைநீழல் வடவழிச் செங்குந்தர்இராப் பாடசாலையில் 11-2-29-ந்தேதி யன்று திரு. ஆ அங்கண்ண முதலியாரவர்கள் தலைமைவகிக்க நமது முன்னேற்றம் என்பதுபற்றி திரு. S. இராமசாமி முதலியார் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

3. மருதாபுரம் முத்துக்குமாரசாமி இராப்பாடசாலையில் 26-2-29-ந்தேதி யன்று நா. ஒதிமலை முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் "முருகபிரான் நவவீரர்கள் பிறப்பு" என்னும் சொற்பெருக்கை திரு. V. K. M. அப்பா அவர்கள் பேசி முடித்தார்.

வடவழிச் செங்குந்தர் சிவானந்த இராப்பாடசாலையில் 11-3-29-ந்தேதி யன்று திரு. K. அங்கண்ண முதலியார் அவர்கள் அவைத்தலைமை வகிக்க கண்ணப்ப நாயனர், இளையான் குடிமாற நாயனர் என்னும் விரிவுரைகளை முறையே திரு. M. சுப்ரமண்யமும், திரு S. கந்தசாமியும் நிகழ்த்தினர்.

5. மருதாபுரம் முத்துக்குமாரசாமி இராப் பாடசாலையில் 26-3-29-ந்தேதி யன்று நா. ஒதிமலை முதலியார் அவர்கள் தலைமை வகிக்க, "பழியஞ்சின

படலம்" என்னும் விஷயத்தை திரு. S. இராமசாமி முதலியார் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

6. வடவழிச் செங்குந்தர் சிவாநந்தர் இராப் பாடசாலையில் 10-4-29-ந்தேதி யன்று நா. அங்கண்ண முதலியார் அவர்களின் தலைமையின்கீழ், "மார்க்கண்டேயர்", "துஷ்ட சகவாசம் பிராண சங்கடம்" என்னும் சொற்பெருக்குகளை முறையே திரு. S. நடேசனும், திரு. A இராமசாமியும் நிகழ்த்தினர்கள்.

7. மருசாபுரம் முத்துக்குமாரசுவாமி இராப்பாடசாலையில் 26-4-29-ந்தேதி யன்று பண்ணிறைடை திருவாளர் குமாரசுவாமி முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் "விறகு விற்றபடலம்" என்னும் பொருள் பற்றி திரு. S சந்தசாமி சொற்பொழிவு நிகழ்த்தினர். அவ்வமயம் கோவிலூர் பெருநாவலர் அன்பர் மா. ரா. குமாரசாமியின் அநுதாபக்கூட்டமும் நிகழ்வுற்றது.

8. மருதவரைநீழல் வடவழி செங்குந்தர் சிவாநந்த இராப் பாடசாலையில் 18-5-29-ந்தேதி யன்று நா. அங்கண்ண முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் "கடவுள் எங்கும் உள்ளார்", "புலால் மறுத்தல்" என்னும் இவ்விரு விஷயங்களை முறையே திரு. A. சுப்பையனும் திரு. V R. மருதப்ப முதலியார் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

21-5-29 ந்தேதி யன்று மருதவரைநீழல் வடவழி செங்குந்தர் இராப் பாடசாலையில் காரிய விசாரணைக் கமிட்டி கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

S. இராமசாமி முதலியார்.
செக்ரிடரி.

## மலையாளம் ஜில்லா.

### கோல்லங்கோடு செங்குந்த வாலிபர் சங்கம்.

செங்குந்த வாலிப சங்கத்தின் பதினோராவது கூட்டம் வடக்குப் பாவடியிலுள்ள தண்டாயுத பாணி கோயிலில் சித்திரை மீ 9உ. இரவு 9-மணிக்கு திரு. ப. முத்துக்குமார முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ரா. சுப்பிரமணியம் என்னும் 5-வது வகுப்பு மாணவன் 'நல்லொழுக்கம்' என்ற விஷயத்தைப்பற்றி பேசினன். பின் கெ. பி. சுப்பிரமணிய முதலியார், எஸ். சொக்கலிங்க முதலியார், கா. சிதம்பர முதலியார், நா. பழனியப்ப முதலியார், முதலானவர்கள் பேசினதின் பின், தலைவர் அவர்கள் முடிவுரை கூற கூட்டம் இனிது முடிந்தது.

பன்னிரண்டாவது கூட்டம் சித்திரை மீ 16உ ஞாயிற்றுக்கிழமை கூட்ட முடியாததினால், 18உ செவ்வாய்க்கிழமை, தெற்குப் பாவடி பஜனை மடத்தில் திரு. ப. முத்துவேலு முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் இரவு 9-மணிக்கு நடைபெற்றது. அது சமயம் ரா. அருணாசல முதலியார் 'ஆலய வழிபாடு' என்ற விஷயத்தைப்பற்றி பேசி முடிந்தவுடன், எஸ். சொக்கலிங்க முதலியார் பேசினர். பின் தலைவர் அவர்களுடைய முடிவுரையோடு கூட்டம் இனிது கலைந்தது.

## விசேஷ பொதுக்கூட்டம்.

சித்திரை மீ 30உ (12 5-29) மேற்படி சங்கத்தின் ஆதரவில் இரவு 8-மணிக்கு தெற்குப் பாவடி மைதானத்தில், மலையாளத்தில் வசிக்கும் செங்குந்தர்களிடையில் முதல் பட்டதாரியும் இப்போது சென்னை ஹைகோர்ட்டில் வேலை பார்த்து வருபவருமாகிய உயர் திருவாளர் C. P. இராமன் முதலியார் அவர்கள் B. A., B.L., தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம், திரு. K. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் 'தமிழர் முன்னேற்றம்' என்னும் பொருள் பற்றி, கல்வி, ஒற்றுமை, பாலிய விவாகக் கண்டனம், விதவா விவாகம், புரோகிதர்கூற்று, திருவிழாக்களின் வீண் செலவு, மதுவிலக்கல், என்னும் விஷயங்களை உதாரண சகிதம் விளக்கி ஒரு மணி நேரம் பேசினர். அதன் பின் தலைவர் அவர்கள், முடிவுரையில, இளைஞர் இயக்கத்தினால் விளையும் நன்மைகள்; ஒவ்வொரு கிராமங்களிலும் சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டியதின் அவசியம், மூடபழக்க வழக்கங்களை நீக்கச் செய்தல், என்பவைகளைப்பற்றி வற்புறுத்திப் பேசினர். பின்னர் சங்கத்தின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் சுமார் 11-மணிக்கு இனிது கலைந்தது.

S. சொக்கலிங்க முதலியார்,
P. முத்துவேலு முதலியார்,
காரியதரிசிகள்.

---

## ஈரோடு செங்குந்தர் பாங்கி லிமிடெட்.

சென்ற மே மீ 19உ ஞாயிற்றுக்கிழமை லார்டு நேப்பியர் வீதி 284 கெம்பா கட்டடத்தில் செங்குந்தர் பாங்கு திறப்பு விழாவைக் கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் திருவாளர் C, S. இரத்தினசபாபதி முதலியார் M. L. C. அவர்கள் நடத்தி வைத்தனர். செங்குந்தர் பாங்கு 10,0000 ஒரு லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. அது 2000 இரண்டாயிரம் பங்குகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. டைரக்டர்களாக பிரியப்படுவோர் 50 ஐம்பது பங்குகள் எடுத்துக்கொள்ள வேண்டும். பங்கு ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் திறப்பு விழா தினத்தன்றே 37,000 ரூபாய் வரையில் பங்குகள் வாங்கிக் கொள்ளப்பட்டன.

நமது முதலாவது மகாநாட்டில் மிகுதியான ரூபாய் 3,500 மூவாயிரத்தைநூறையும் மேற்படி பாங்கிலேயே வட்டிக்குக் கொடுப்பதென்றும், மேற்படி பாங்கியின் மொத்த வருமானத்திலிருந்து பத்தில்ஒரு பங்கு ஏழை மாணவர்களின் கல்வி நிதிக்கு கொடுப்பதென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

செங்குந்த குலாபிமானிகள் யாவரும் மிக்க ஊக்கத்துடன் முன் வந்து பங்குகள் எல்லாவற்றையும் எடுத்து பாங்கைச் சிறப்புடன் நடத்துவார்களென்று நம்புகின்றோம்.

* * * *



# வர்த்தமானப் பகுதி

## மதுரைச் செங்குந்தர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் முதலாமாண்டு நிறைவு விழா வைகாசித் திங்கள் 27-ந்தேதி திருவாளர் V. இரத்தின முதலியார் B. A., B.L., அவர்கள் அவைத் தலைமையின்கீழ் நன்கு நடைபெற்றது. அவ்வமயம் செங்குந்த திலகராம் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெருமானின் திருவுருவப் படத்திறப்பு வைபவத்தின்பின் "செங்குந்தப் புலவர்கள் மாண்பு" என்னும் விஷயத்தைப்பற்றித் திரு. ஆ. கார்மேகக் கோனர் அவர்களும், "சமூக முன்னேற்றம்" என்னும் விஷயத்தைக் குறித்துத் திரு. S. சாலை முதலியார் அவர்களும், "சுகாதாரம்" என்னும் விஷயத்தைக் குறித்து டாக்டர் A. சீதாராம் என்பவரும், "கல்வி" என்னும் விஷயத்தை ஒரு சம்பாஷணை ரூபமாக மாணவன் செல்லையாவும் மாணவி பிச்சையம்மாளும் இனிது பிரசங்கித்து முடித்தனர்.

* * * *

## சைதாப்பேட்டைச் செங்குந்த கோட்டம் ஷண்முக சுப்பிரமணிய திருப்புகழ் சபை.

இச்சபையின் 11-வது ஆண்டு நிறைவு விழாவும் திருப்புகழ் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருநாளும் மேற்படி செங்குந்த கோட்டத்தில் நிகழும் சுக்கில ஆனி மீ 8உ வெள்ளிக்கிழமை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் தங்கள் சபையினரோடு வந்து அவன் திருப்புகழைப் பாடி அவனருளைப் பெறுமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். காலை 9-மணிக்கு அபிஷேக அலங்கார ஆராதனையும், மாலை 3 மணிக்குச் சொற்பொழிவுகளும், இரவு 8-மணிக்கு அருணகிரிநாதர் திருவுலாக்காட்சியும் நடைபெறும்.

* * * *

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவவதார வைபவ குருபூஜா மஹோற்சவம் விளாப்பாக்கம்:—நிகழும் சுக்கிலவாண்டு ஆனி மீ 9உ மூல நக்ஷத்திரம் கூடிய புண்ணியதினத்தன்று விளாப்பாக்கம் ஸ்ரீ நாகநாதீஸ்வரர் ஆலயத்தில் முருககோட்டத்தின்கண் மேற்படியூர் ஷண்முக விஜய திருப்புகழ் சபையாரால் மேற்படி சுவாமிகளுக்குக் காலை 9-மணி முதல் அபிஷேக அலங்கார ஆராதனையும், திருப்புகழ் பாராயணமும், அன்பர்களுக்கு அமுது படைத்தலும், உபந்யாசங்களும், இரவு 7-மணிக்குமேல் ஸ்ரீ முருகப்பெருமான் சுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட உற்சவமும் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வருக.

* * * *

சோளிங்கபுரம் ஸ்ரீசிவசுப்பிரமணியர் மகா கும்பாபிஷேகம் சோளிங்கபுரம் செங்குந்த மரபினரால் மேற்படி சுப்பிரமணியர் ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்யப் பெற்றதன் பொருட்டு சுக்கிலவாண்டு வைகாசி மீ 6உ மேற்படி சிவசுப்பிரமணியசுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

* * * *

## செங்குந்த குலகுரு ஸ்வாமிகள் மடாலயத்தில் திருமணம்.

சிவபரஞ்சோதியின் திருவருளை முன்னிட்டு, நிகழும் சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள் 21-ம் நாள் திங்கட்கிழமை காலை $6\frac{3}{4}$-மணியிலிருந்து $7\frac{1}{2}$-மணிக்குள்ளாகப் பெருந்தலையூர் இறையமங்கலாதீனம் செங்குந்த குலகுரு மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாறதுங்க இம்முடி பரஞ்சோதி சுவாமிகளின் புதல்வர் திருவாளர் குமாரதுங்க சுவாமிகளுக்கும் கலங்கபாளையம் நாட்டாண்மைக்காரர் திருவாளர் ராய பழனியப்ப முதலியாரவர்களின் புதல்வியார் திருமகள் பாதாம் பிகையம்மைக்கும், கோவை ஜில்லா பெருந்தலையூர் சுவாமிகள் திருமடத்தில் திருமணமும் 9 மணியிலிருந்து $10\frac{1}{2}$-மணிக்குள்ளாக முடிசூட்டுவிழாவும் வெகு விமரிசையாக நடைபெற்றது.

* * * *

## தேவாங்கர் மகாநாடு.

இவ்வைகாசித் திங்களில் கோயம்புத்தூரில் தேவாங்கருடைய முதலாவது மகாநாடு கூட்டப்பட்டது. தேவாங்கர்கள் நெசவுத் தொழிலை ஆதாரமாகக் கொண்ட ஒரு வகுப்பினர். மேற்படி மகாநாட்டிற்கு ராவ்பகதூர் P. T. குமாரசாமி செட்டியாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். தேவாங்கர் மகாநாட்டின் முக்ய அம்சங்களுள் பெண்கள் நாடெங்கும் முன்னேற்றத்தில் ஈடுபடுவது ஒன்றும். அவற்றைப்பற்றி எல்லா விபரமும் அடுத்த சஞ்சிகையில் காணலாம்.

* * * *

## மணிக்கு 36000

மேல்நாட்டிலுள்ள அச்சயந்திரம் ஒன்றின் அச்சுருளை மணிக்குப் பதினெட்டாயிரம் சுற்று வீதம் சுழல்வதுடன் ஒவ்வொரு சுற்றிலும் இரண்டு காப்பிகள் அச்சடிக்கின்றதாம். எனவே மணிக்கு முப்பத்தாறாயிரம் காப்பிகள் அச்சடிக்கின்றது.

* * *

## உலகத்தின் பெரிய கட்டடங்கள்.

சிக்காகோ மரச்சாமான் கடை ஒன்று 2,53,70,000 கன அடியும் ஜெனரல் மோட்டார் கட்டடம் 2,04,11,000 கன அடியும் கலிவலாந்திலுள்ள யூனியன் டிரஸ்டு கட்டடம் 2,00,000 கன அடியும் சிக்காகோ வியாபாரிகள் பாங்கி 1,78,00,000 கன அடியும் அளவுள்ளனவாம்.

* *

### வட திருநாகேஸ்வரம்.

மேற்படி ஊரில் செங்குந்த வாலிபர் சங்கத் திறப்பு விழா வைகாசித் திங்கள் 27-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று உயர் திருவாளர் க. குழந்தைவேலு முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கலைச் சங்கத்து அமைச்சர் உயர் திருவாளர் ம சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல் டி., அவர்களால் செய்யப்பட்டது. அவ்வமயம் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல் டி., "சங்க ஸ்தாபனத்தின் அவசியம்" என்பதைப் பற்றியும், திருவாளர்கள் மு. சரவண முதலியார், மா. அ. கனகசபை முதலியார், ச. வே, சிங்காரவேலு முதலியார், பி.ஏ., ஜெ. தங்கவேல் முதலியார் ஆகியோர் முறையே "நம்மவர் தற்கால நிலைமையும் சீர்திருத்தமும்," "தற்கால வியாபாரத்தில் முன்னேற்ற முறைகள்," "நமது பெண்மக்கள்" நமது "சமூகமும் வாலிபரும்" என்ற விஷயங்களைப்பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். செங்குந்த மக்கள் பலரும் திரண்டு வந்து விழாவை இனிது நடாத்தினர்.

### கலியுக விநோதம்.

களம்பூரைச் சேர்ந்த ஐயம்பேட்டைக் கிராமத்தில் ஒரு பெண் பிரசவிக்க வெகு கஷ்டப்பட்டு வேலூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டாள். அங்கே டாக்டர் அந்தப் பெண் வயிற்றை ஆபரேஷன் செய்தார். கர்ப்பப் பையில் குழந்தைக்குப் பதிலாக மூன்று படி முத்துக்கள் இருந்ததைக்கண்டு ஆச்சரியப்பட்டு அந்த முத்துக்களைச் சோதனைக்கு அனுப்பியிருப்பதாய் செய்தி கிடைத்திருக்கிறது. இது ஒரு கலியுக அதிசயம் என்பது ஐயமில்லை.

* * *

### மூங்கிலிலிருந்து துணி நெய்தல்.

பர்மிங்ஹாம் சர்வ கலாசாலையிலுள்ள டாக்டர் நாஞ்சி என்னும் இந்தியர் மூங்கிலிலிருந்து துணி செய்யலாமென்று கண்டு பிடித்திருக்கிறார். இது மற்றத் துணிகளைவிட நயமாக இருக்குமென்றும் தெரிகிறது. தாவர வர்க்கத்திலேயே மூங்கில் தான் சீக்கிரம் வளரக்கூடியதென தாவரவர்க்க சாஸ்திரிகள் கூறுகின்றனர். 24 மணி நேரத்தில் மூங்கில் 2 அடி வளருகிறது.

---

## தலைச்சங்கத்தின் விளம்பரம்

### ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம்

சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் உயர்தரக் கல்வியை நாடும் சில ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளிக்க நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தீர்மானித்திருக்கிறது. உபகாரச் சம்பளத்தை நாடும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களின் பெற்றோராவது பாதுகாப்பாளராவது அடியில் கையொப்ப மிட்டிருப்பவருக்கு ஜூலை மாதம் முதல் தேதிக்கு மேல் 15-ம் தேதிக்குள் மனு எழுதியனுப்பவேண்டும். ஆவணி மாதத்திய 'செங்குந்தமித்திர'னில் சங்கத்தின் தீர்மானம் வெளியிடப்படும்.

**மனுவில் குறிப்பிட வேண்டியவை:—**

1. பிள்ளையின் பெயர்
2. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் பெயரும் விலாசமும்
3. பிள்ளை பிறந்த இடமும் தேதியும்
4. பிள்ளை படிக்கும் வகுப்பும் கலாசாலையும்
5. சென்ற பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்
6. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் தொழில், வருமானம், சொத்து முதலியன
7. மனுதாரர் குடும்பத்து நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயங்களும்
8. அவர் குடும்பத்தில் படிக்கும் இதர பிள்ளைகளின் தொகையும் வகுப்பும்
9. நாடும் உத்தாசையின் தன்மையும் அளவும்
10. ஏற்கெனவே வேறு உத்தாசை பெற்றிருந்தால் அதன் தன்மையும் அளவும்
11. உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்கள்
12. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கையொப்பம்

**மனு செய்துகொள்வோர் கவனிக்கவேண்டிய முக்கியமான நிபந்தனைகள் :—**

1. (a) மேற்குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் உண்மையென்பதற்கு அத்தாட்சியாக மாணவர் படிக்கும் கலாசாலை அதிகாரியின் கைச்சாத்திட்ட சிபார்சு கடிதம் ஒன்று ஒவ்வொரு மனுவுடனும் வாங்கியனுப்புதல் வேண்டும்.

(b) உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் உள்ள இடங்களிலிருந்து மனு அனுப்புவோர் தம் மனுவோடு அவ்வச் சங்கத்துக்குத் தலைவர் சிபார்சையும் காரியதரிசியின் சிபார்சையும் தனித்தனி வாங்கியனுப்புதல் வேண்டும்.

2. இதுவன்றி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மனுவோடு இரண்டு பிரபலமான கனவான்களுடைய சிபார்சு கடிதங்கள் வாங்கி அனுப்புதல் வேண்டும். சங்கமில்லாத இடங்களிலிருந்து மனு அனுப்புவோர்க்குச் சிபார்சு செய்பவரில் ஒருவர் உண்மைச் செங்குந்தராகவும், மற்றொருவர் வேறு சாதியினராகவும் இருத்தல் வேண்டும்.

3. உபகாரச் சம்பளத்தை நாடும் மாணாக்கர்கள் சம்பளம் பெற்று இடையில் அசிரத்தையினாலோ, தப்பு நடத்தையினாலோ படிப்பை நிறுத்திவிட நேரிடில் அவர்கள் அதுவரை பெற்ற சம்பளத்தைச் சங்கத்துக்குத் தாம் ஈடுகட்டித் தருவதாகச் சிபார்சு செய்யும் கனவான்களில் ஒருவரிடமிருந்து ஜாமீன் கடிதம் ஒன்று வாங்கி மனுவோடு அனுப்புவதோடு மனு செய்துகொள்ளும் பெற்றோராவது பாதுகாப்பாளராவது தாமும் அவ்விதம் ஈடு கட்டித் தருவதாக ஒப்புக்கொள்ளல் வேண்டும். கையொப்பமிடுவோர் மாணவன் நின்ற மூன்று மாதத்துக்குள் வாங்கிய பணத்தைச் சங்கத்துக்கு ஈடு கட்டித்தரத் தவறினால் அத்தொகை ஜாமீன் கொடுத்தவரிடமிருந்து வசூலிக்கப் பெறும்.

4. உபகாரச் சம்பளம் பெறும் மாணாக்கர்கள் தமது கலாசாலை அதிகாரிகளால் எப்போதாவது துர் நடத்தைக்காகத் தண்டிக்கப்படுவரேல் அன்னவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதுமுதல் நிறுத்தப்படும். அதுவரை கொடுத்துள்ள பணம் மேற்கூறிய முறையில் வசூலிக்கப்பெறும்.

5. உபகாரச் சம்பளம் பெறும் மாணாக்கர்கள் நமது தலைச்சங்கத்தையாவது, அதன் கிளைச் சங்கங்களையாவது, அவற்றின் நோக்கங்களையும் தொண்டுகளையுமாவது, பொதுவில் உண்மைச் செங்குந்தர் இயக்கத்தினையாவது தாக்கி அவற்றிற்குப் பாதகமாக நடந்து கொண்டாலும் அவர்களுக்கு அதுமுதல் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படும்.

6. சங்கத்தின் உபகாரச் சம்பளத்தை வாங்கும் ஒவ்வொரு மாணாக்கரும் தான் பெறும் உதவிக்குப் பிரதியுபகாரமாகக் கீழ்க்கண்ட விதங்களில் குலாபிமானத்தை விளக்குவதாக ஒரு தனிக் கடிதத்தில் எழுதித் தரவேண்டும் :—

(a) தலைச்சங்கத்தின் நோக்கங்களையும் செயல்களையும் பாமர ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் குலமுன்னேற்ற விஷயத்தில் ஈடுபடுமாறு பிரசாரஞ் செய்து தமது கல்வி தம் ஆயுள் பரியந்தம் பொது நலத்துக்கு உபயோகமாகும்படி செய்ய வாக்குறுதி தரவேண்டும் ;

(b) தாம் வாழ்க்கையில் ஈடுபட்டுச் சம்பாத்தியம் செய்யும் சமயத்தில் தாம் கல்வி கற்கும் சமயம் சங்கத்திலிருந்து பெற்ற உதவிக்கு நன்றியறிதலாக நமது தலைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் செங்குந்தர் கல்வி நிதிக்குத் தமது வருமானத்தில் குறைந்தது ரூபாய்க்குக் காலணாவாவது இடைவிடாது நன்கொடையாக வழங்கிவர வாக்குறுதி செய்யவேண்டும் ;

(c) நமது 'மித்திரன்' ஓங்குமாறு ஒத்தாசை புரியவேண்டும்.

7. ஏற்கெனவே தலைச்சங்கத்திலிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுவரும் மாணாக்கர்களும் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டிருப்பின் மேற்கூறியுள்ள நிபந்தனைகட்கு உட்பட்டு புது மனு அனுப்பவேண்டும்.

8. மனுவில் மேற்குறித்த விவரம் எதுவேனும் விடுபட்டிருந்தாலும் உண்மைக்கு மாறாக இருந்தாலும் அம்மனு தள்ளிவிடப்படும்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பி. சே. மாணிக்கவாசக முதலியார்,
அமைச்சர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

200, தம்பு செட்டித் தெரு, சென்னை.
1929ஆம் ஜூன்மீ 15உ.

142635

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

சுக்கிலஹு ஆனிமீ (1929ஹு ஜூன்மீ—ஜூலைமீ) உத்திராயணம், வசந்தருது.

| இங்கிலீஷ். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாக்கிய [illegible] | யோகினி. | விசேட நாட்க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | வெ | அஷ் 42-3 | உ 58-35 | சி 58-35 அ | 1 | ½ | சூன் | வடகிழ | |
| 15 | 2 | சனி | நவ 42-23 | அ 60 | ம 60 | 2 | ½ | நவ | ஆகாசம் | |
| 16 | 3 | ஞா | தச 44-20 | அ 1-5 | அ் 1-5 சி | 2 | ½ | தச | பூமி | |
| 17 | 4 | திங் | ஏகா 47-50 | சி 5-15 | பி 5-15 அ | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| 18 | 5 | செவ் | துவா 52-25 | சு 10-45 | சி 10-45 ம | 2 | 1 | துவா | வடக்கு | |
| 19 | 6 | புத | திர 57-53 | வி 17-10 | சி 60 | 2 | 1 | திர | தெற்கி | பிரதோஷம் |
| 20 | 7 | வியா | சது 60 | அ 24-20 | சி 24-20 பி | 2 | 1 | சது | தெமே | |
| 21 | 8 | வெ | ச○ 1-18 | கே 31-48 | ம 31-46 அ | 2 | 1 | பௌ | தேமே | பௌர்ணமி |
| (ஜூன்மீ) 22 | 9 | சனி | பௌ 9-55 | மூ 39-25 | சி 60 | 2 | 1 | பிர | தெற்கு | யாத்திரைசெய் |
| 23 | 10 | ஞா | பிர 16-0 | பூ 46-53 | சி 46-53 அ | 2 | 1 | துதி | மேற்கு | |
| 24 | 11 | திங் | துதி 21-50 | உ 53-55 | ம 53-55 அ | 2 | 1 | ... | வடமே | |
| 25 | 12 | செவ் | திரி 27-15 | தி 60 | சி 60 | 2 | 1 | திரி | வடகிழ | |
| 26 | 13 | புத | சது 31-55 | தி 0-53 | சி 0-53 பி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 27 | 14 | வியா | பஞ் 35-35 | அ 6-15 | சி 6-15 ம | 2 | 1 | பஞ் | பூமி | |
| 28 | (சுக்கிலஹு—ஆனிமீ) 15 | வெ | சஷ் 38-0 | ச 10-55 | சி 60 | 2 | 0 | சஷ் | கிழக்கு | சுப முகூர்த்தம் |
| 29 | 16 | சனி | சப் 38-53 | பூ 14-10 | ம 14-10 சி | 2 | ½ | சப் | வடக்கு | |
| 30 | 17 | ஞா | அஷ் 38-15 | உ 15-55 | அ 60 | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 1 | 18 | திங் | நவ 35-50 | ரே 16-3 | சி 60 | 1 | ½ | நவ | தெமே | |
| 2 | 19 | செவ் | தச 31-40 | அ 14-15 | சி 60 | 1 | ½ | தச | தெற்கு | |
| | | | | | | | | ஏகா | | |
| 3 | 20 | புத | ஏகா 25-48 | ப* 10-48 | சி 10-48 அ | 1 | ½ | துவா | மேற்கு | கிருத்திகை |
| 4 | 21 | வியா | துவா 18-23 | கி 5-53 | ம 60 | 0 | ½ | திர | வடமே | பிரதோஷம் |
| | | | திர | ரோ 59-43 | | | | | | |
| (ஜூலை) 5 | 22 | வெ | திர 9-53 | மி 52-38 | சி 60 | 0 | 0 | சது | வடகிழ | |
| 6 | 23 | சனி | சது 0-38 | தி 45-8 | சி 60 | 0 | 0 | அமா | ஆகாசம் | அமாவாசை |
| | | | ●அ 51-5 | | | | | | | |
| 7 | 24 | ஞா | பிர 41-33 | பு 37-38 | சி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 8 | 25 | திங் | துதி 32-30 | பூ 30-35 | சி 60 | 0 | 0 | துதி | வடக்கு | |
| 9 | 26 | செவ் | திரி 24-23 | ஆ 24-35 | சி 60 | 0 | ½ | திரி | தெற்கி | |
| 10 | 27 | புத | சது 17-50 | ம 19-58 | சி 19-58 அ | 0 | ½ | சது | தெமே | |
| 11 | 28 | வியா | பஞ் 12-53 | பூர 17-5 | சி 17-5 ம | 1 | ½ | பஞ் | தெற்கு | சஷ்டி |
| 12 | 29 | வெ | சஷ் 9-58 | உ 16-10 | சி 16-10 அ | 1 | ½ | சஷ் | மேற்கு | ஆனித்திருமஞ் |
| 13 | 30 | சனி | சப் 9-5 | அ 17-23 | ம 60 | 1 | ½ | சப் | வடமே | [சனம் |
| 14 | 31 | ஞா | அஷ் 10-18 | சி 20-33 | சி 60 | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 15 | 32 | திங் | நவ 13-20 | சு 25-30 | அ 25-30 ம | 2 | ½ | சூன் | ஆகாசம் | |

# அன்பருக்குச் சில விளம்பரங்கள்.

## குலதிலகரின் புகைப்படங்கள்.

'செங்குந்தமித்திரன்' ஆபீஸில் நமது குலதிலகரின் புகைப்படங்கள் கீழ்க்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்:—

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஒட்டக்கூத்தர் | 1—8—0 |
| தலைச்சங்கத்தின் நிருவாக அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | 2—8—0 |
| ம. சண்முகசுந்தர முதலியார். 'செங்குந்தமித்திரன்' பத்திரிகாசிரியர் | 1—8—0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | 1—8—0 |

இத்தொகையில் படத்தின் கிரயம் பாக்கிங் தபால்செலவு முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## 'மகாநாட்டு மலர்'

ஈரோட்டில் விபவ ௵ தை ௴ கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வைபவங்களும், நிகழ்ச்சிகளும், தலைவர்களின் பேருரைகளும், தீர்மானங்களும், அறிஞரின் அபிப்பிராயங்களும், தலைச்சங்கத்தின் முயற்சிகளும் வெளுத்த வளவளப்பான தாளில் வெகு அழகாக அச்சிடப்பெற்று, நாற்பதிற்கு மேற்பட்ட ஆப்டோன் படங்களுடன், இம் 'மகாநாட்டு மல'ரில் அடங்கியிருக்கின்றன. நமது 'மித்திரன்' செல்லாத ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலும் இப்புத்தகமேனும் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். இதன் விலை அணா 8 தான். தபாற்செலவு அணா 3. வேண்டுவோர் முன்பணமாக அணா 11 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 6,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதிய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை. இதில் விளம்பரஞ் செய்வோர்க்கு அதிக பலனுண்டு :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

## செங்குந்த மித்திரன் 2-வது ஆண்டு பைண்டு புத்தகம்

சென்ற ஆண்டின் செங்குந்த மித்திரன் வேண்டுமென்று அநேகர் விரும்பியபடியால் செலவழிந்துவிட்ட முதன் மூன்று மாதப்பத்திரிகைகளையும் மீண்டும் பதிப்பித்து மொத்தமாக 12 சஞ்சிகைகளையும் மிக அழகாகப் பைண்டு செய்துள்ளோம். செங்குந்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இவ்வழகிய புத்தகம் இருக்கவேண்டுவது அவசியம். சொற்ப புத்தகங்களே கைவசமுள்ளன.

விலை தபாற் செலவு உள்பட ரூபா 2—0—0.

இங்ஙனம் :

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிறிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

## "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது', 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்பொருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூருவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் கில்ட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:—
மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
நெ. 31. அரண்மனைக்காரன் தெரு, சென்னை

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam Madras, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press 2/19-A. Armenian Street. Madras.